விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே



சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 22 திங்கட்கிழமை (04.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 107

## புலிகளின் பெயரை பயன்படுத்தி
# படையதிகாரிகள் பலர் படுகொலை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் பெயரைப் பயன்படுத்தி படை அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளை இலங்கை இராணுவப் புலனாய்வுத்துறை படுகொலை செய்ததாக, குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களில் முன்னாள் படை அதிகாரியும் பின்னர் அரசியலில் ஈடுபட்டவருமான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம மற்றும் சிறப்பு அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி மூத்த கண்காணிப்பாளர் ஊபுல் செனிவிரத்ன ஆகியோரும் உள்ளடங்கியுள்ளனர்.

24 பக்

## மேற்கிந்தியத் தீவுகள் சம்பியன்




6ஆவது ரி20 உலகக் கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சம்பியனாகியது. நேற்று கொல்கத்தாவின் ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடந்த இங்கிலாந்து அணியுடனான இறுதிப் போட்டியில் 2 பந்துகள் மீதமிருக்கையில் 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றே சம்பியன் பட்டத்தை சூடிக் கொண்டது.

## அமை.சம்பிக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

(கொழும்பு)

பெரு நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக தயாரிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான யோசனை அடுத்த வாரம் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கையளிக்கப்படும் என கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

ராஜகிரிய பிரதேசத்தில் அமைச்சரின் காரில் இளைஞர் ஒருவர் மோதி விபத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தை அடிப்படையாக, கொண்டு இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட உள்ளது.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க, இந்த விபத்து சம்பவம் தொடர்பில

23ஆம் பக்கம் பார்க்க....


## அதியுச்ச மூன்றடுக்கு பாதுகாப்புடன் ஜனாதிபதி நேற்று யாழ்.விஜயம்


(யாழ்ப்பாணம்)

அதிஉச்சமூன்றடுக்கு பாதுகாப்பின் மத்தியில் நேற்றையதினம் யாழ் மாவட்டத்துக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறி

23ஆம் பக்கம் பார்க்க....







## வீதிகளில் இனி சி.சி.ரிவி கமரா

(கொழும்பு)

சி.சி.ரிவி கமராவில் பதிவாகும் காட்சிகளைக் கொண்டு வீதி ஒழுங்குமுறைகளை மீறுவோருக்கு எதிராக தண்டனை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இன்று தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இந் நடவடிக்கை முன்னெடுக்கப் படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக கொழும்பு நகரிலுள்ள சி.சி.ரிவி கமரா காட்சிகளை பரிசீலிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரில் ஏற்பட்டுள்ள அதிக வாகன நெரிசல் மற்றும் விபத்துக்களை கட்டுப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## வீடு குறித்து மக்கள் கருத்து

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான 65 ஆயிரம் வீட்டுத்திட்டம் தொடர்பான மக்களின கருத்துக்களை அறிந்து கொள்வதற்கான முயற்சிகளில் புனர்வாழ்வு மீள்குடியேற்ற அமைச்சு ஈடுபட்டுள்ளது.

அதற்கமைய மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கான கருத்துப் பெட்டிகள் அனைத்து பிர

23ஆம் பக்கம் பார்க்க....

## சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மகிந்தவுடன் இரகசியப் பேச்சு!

(கொழும்பு)

தேசிய அரசிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இரகசியமாக பேச்சு நடத்தியுள்ளனர். கொழும்பில் கடந்த வாரம் நடைபெற்றுள்ள இந்தச் சந்திப்பில் பொது எதிரணி உறுப்பினர்கள் சிலரும் பங்கேற்றுள்ளனர். சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக பேசப்பட்டுள்ளன.

அத்துடன், ஆட்சிமாற்றம் பற்றி

24ஆம் பக்கம் பார்க்க....

# பிரபாகரனின் உடல் எரிக்கப்படவில்லை
## புதைக்கப்பட்டது என்கிறார் சரத்

(கொழும்பு)

இறுதிக்கட்டப் போரில் கொல்லப்பட்டதாக கூறப்படும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் உடல், எரிக்கப்படவில்லை என்றும் அது புதைக்கப்பட்டது என

24ஆம் பக்கம் பார்க்க....



## இலங்கையிடம் ரூ.1, 828 கோடியை இழப்பீடாக கோரும் சீன நிறுவனம்

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகர நிர்மாணிப்பு திட்டத்தை மேற்கொண்டு வரும் சீன நிறுவனம் இலங்கை அரசாங்கத்திடம் ஆயிரத்து 828 கோடி ரூபாயை இழப்பீடாக கோரியுள்ளது.

அல்லது இழப்பீட்டுக்கு பதிலாக துறைமுக நகர நிர்மாணிப்பில் கூடுதல் நிலப்பரப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் அந்த நிறுவனம் கேட்டுள்ளது.

நகர நிர்மாணிப்பு பணிகள் தாமதமாகியுள்ளதன் காரணமாகவே நிறுவனம் அரசாங்கத்திடம்


24ஆம் பக்கம் பார்க்க....

## கட்சியிலுள்ள தவறுகளுக்கு மகிந்தவே மூல காரணம்!
### ஆளுநர் குரே குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ளவர்கள் தவறு செய்கிறார்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறுவாராயின், அதற்கு மூலகாரணம் மகிந்தவே என வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார். சிலாபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற

24ஆம் பக்கம் பார்க்க....



## ஆடை அணிந்து கொண்டா ஜெனிவா செல்கிறீர்கள்?
### உதயவிடம் ஹரிசன் கேள்வி

(கொழும்பு)

பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் உதய கம்மன்பில போன்றவர்கள் ஆடைகளை அணிந்து கொண்டா ஜெனிவா செல்கின்றார்கள் என கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பீ.ஹரிசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

சர்வதேச அழுத்தம் பற்றி பேசினார்கள், மேற்குலக காலனித்துவ ஆட்சியாளர்கள் என பேசினார்கள். அவ்வாறு பேசியவர்கள் இன்று நிதிக குற்றவியல் விசாரணைப் பிரிவிற்கு எதிராக ஜெனிவா செல்கின்றார்கள்.

24ஆம் பக்கம் பார்க்க....

## வெடிபொருட்கள் கிழக்கிலும் மீட்பு



(யாழ்ப்பாணம்)

அண்மைய நாட்களாக யாழ். சாவகச்சேரி மற்றும் மன்னார்

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறுபிள்ளை மீது சித்திரவதை பொலிஸாரால் பெண்ணொருவர் கைது

(கொழும்பு)

சம்மாந்துறை அட்டப்பளம் பகுதியில் சிறுபிள்ளையொன்றை சித்திரவதைக்கு உட்படுத்திய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய 55 வயதான பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தமது மருமகனின் முதற் தாரத்தின் பிள்ளையையே குறித்த பெண் மிக மோசமாக சித்திரவதைக்கு உட்படுத்தியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

5 வயதுடைய குறித்த பிள்ளை உணவு கேட்டதை அடுத்து சூடாக்கப்பட்ட கரண்டியால் கையில் சூடு வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த பிள்ளை நிந்தவூர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (செ-12)

## நீராடச் சென்ற சிறுவன் நீரில் மூழ்கி மரணம்

(கொழும்பு)

லிந்துலை, டீமலை ஆற்றில் நீராடச் சென்ற சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று காலை வேளையில் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் தேவசகாயம் தாவீதுராஜா (வயது 11) என அடையாளம் காணப்பட்டுள்ளான்.

இவர் தனது நண்பர்களுடன் நீராடிக் கொண்டிருக்கும் வேளையில் திடீரென காணாமல் போயுள்ளதாகவும், அவரை தேடும் பணியில் ஈடுப்பட்ட பொதுமக்கள் சிறுவனை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாகவும் பிரதேசவாசிகள் லிந்துலை பொலிஸாருக்கு கூறியுள்ளனர்.

குறித்த சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக லிந்துலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் (செ-12)

## பொலிஸ் கான்ஸ்டபிள் மரத்திலேறி-ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சேவையிலிருந்து விலகிச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், மரத்திலேறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சம்பவமொன்று மாத்தறை பொலிஸ் நிலைய வளாகத்தில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

மேற்படி கான்ஸ்டபிளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலே கான்ஸ்டபிள் மரத்திலேறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் தெரியவருகிறது.

இந்நிலையில் பொலிஸ் நிலையத்தில் கடமையிலிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் அவரை மிகுந்த சிரமத்தின் கீழ் மரத்திலிருந்து கீழே இறக்கி சமாதானப்படுத்தி அனுப்பி வைத்துள்ளார். (செ-12)

### மீன் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட

## ஐரோ. ஒன்றியத்தின் தடையை நீக்குவது குறித்து இறுதி பேச்சு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தால் நாட்டின் மீன் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவது தொடர்பிலான இறுதி பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக இலங்கை பிரதிநிதிகள் சிலர் பிரஸல்ஸிற்கு பயணித்துள்ளனர்.

நீரியல்வள அமைச்சின் செயலாளரின் தலைமையில் இந்த குழுவினர் நேற்று முன்தினம் நாட்டிலிருந்து புறப்பட்டு சென்றதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. மன் ஏற்றுமதிக்கான தடையை நீக்குவது தொடர்பில் பேச்சுவார்த்தை யொன்றை நடத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றிய குழுவினர் அண்மையில் நாட்டிற்கு வருகை தந்திருந்தனர்

இதன்போது மீண்டும் மீன் ஏற்றுமதி நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு தேவையான காரணிகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய குழு தெளிவுப்படுத்தியுள்ளது.

முன்னதாகக் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுதல், ஆழ் கடலில் மீன் பிடியில் ஈடுபடுவது மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பிலான சட்டங்களை மீறிய காரணங்களால் கடந்த வருடம் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு மீன் ஏற்று மதிக்கான தடையை விதித் ததுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

**Personal Class**

**A/L Physics**

Contact no :
0786082751 (C-4209)

## ஓர் இலட்சம் அரிசி பருக்கையில் மைத்திரியின் முகம் வடிவமைப்பு

(கொழும்பு)

ஓர் இலட்சம் அரிசிப் பருக்கைகளை பயன்படுத்தி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முகம் வடிவமைக்கப்பட்டு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி, மட்டக்களப்பு ஏறாவூரில் ஆயத்த ஆடைத்தொழிற்சாலையினை திறந்துவைத்தார். அந்நிகழ்வின்போது,

ஓட்டமாவடியைச் சேர்ந்த கலைப் பட்டப்படிப்பு மாணவி முஹம்மத் பாறூக் றம்ஷானி என்பவரால் 'கிழக்கின் நெற்களஞ்சியம்' எனும் சிறப்புக்கமைய ஓர் இலட்சம் அரிசி பருக்கைகளைக் கொண்டு ஜனாதிபதியின் முகம் வடிவமைக் கப்பட்டு அது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.



குறித்த கலைப்படைப்பை புன்முறுவலோடு பெற்றுக்கொண்ட ஜனாதிபதி, கலைஞர் றம்ஷானியைப் பாராட்டினார்.

இதனை வடிவமைக்க மூன்றரை மாத காலம் சென்றதாகவும், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட மறுதினம் இந்த கலைப் படைப்பைத் தயாரிக்கத் தொடங்கியதாகவும் றம்ஷானி குறிப்பிட்டார். (செ-12)

**Invitation**

**Volume 4**

Book Release
"Educationalist - கல்வியியலாளன்"
Research Journal - (Volume 04, 2016)

**Venue : Jaffna National College Of Education, Kopay.**

**Time : 04.04.2016, Monday, 4.00p.m**

**Chairman : Mr.S.Amirthalingam**
President, Jaffna National College Of Education

**Agenda**

- Lighting of traditional oil lamp
- Prayers
- Chairman's Address : **Mr.S.Amirthalingam**
  President, Jaffna National College of Education
- Welcome Address : **Mr.S.R.Sathiyendrampillai**
  Vice President, Jaffna National College of Education
- Blessing Address : **Prof. M. Sinnathamby**
  Former Head, Department of Education,
  University of Jaffna
- Book Release Speech : **Prof. N. Gnanakumaran**
  Senior Professor & Dean, Faculty of Arts,
  University of Jaffna
- Receiving the First copy : **Dr.(Mrs) J,Rasanayagam**
  Senior Lecturer, Department of Education,
  University of Jaffna
- Receiving the Special Copies
- Review : **Prof. T. Velnampy**
  Dean, Faculty of Management Studies & Commerce
  University Of Jaffna.
- Acceptance : **Mr.P.Rajeswaran**
  Cheif Editor - Educationalist Research Journal.
- Vote Of Thanks : **Dr.B.Thanabalan**
  Vice President, Jaffna National College of Education

Sponsored By : Anpoli Education Centre,
Hindu College Road, Jaffna.
Raja Cream House & Saraswathi Hall,
Ramanathan Road, Jaffna. (4095)

## வெளிநாட்டவர் படுகாயம்

(கொழும்பு )

கொழும்பு உலக வர்த்தக மையத்திலிருந்து வீழ்ந்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த வெளிநாட்டுப் பிரஜை, கண்காட்சி நோக்கில் பரசூட் மூலம் உலக வர்த்தக மையத்திலிருந்து கீழே குதித்துள்ளார்.

எனினும், பரசூட் சரியாக இயங்காத காரணத்தினால் குறித்த நபர் கீழே விழுந்து நிலத்தில் மோதுண்டுள்ளார்.

இதனால் படுகாயமடைந்த குறித்த வெளிநாட்டுப் பிரஜை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-12)

## 3 மேம் பாலங்கள் நிர்மாணிக்கப்படும்

(கொழும்பு)

மூன்று புதிய மேம்பாலங்களை நிர்மாணிப்பதற்கு நெடுஞ்சாலைகள் மற்றும் உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

வாகன நெரிசலை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் டி.சி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கனேமுல்ல ரயில் கடவை பகுதியிலும் பொல்கஹவல ரயில் கடவைக்கு மேலாகவும், மற்றும் ராஜகிரிய நாவல பகுதியிலும் மேம்பாலங்களை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயின் நிதியுதவின் கீழ் 53 மில்லியன் யூரோ இந்த நிர்மாணத் திட்டங்களுக்காக செலவிடப்படவுள்ளது. (செ-12)

## யாழில் பல விடுதிகளை அமைத்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு!

### சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில்பல விடுதிகளை அமைத்து இங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கு கூடுதலான வேலை வாய்ப்புக்களை வழங்குவதே சுற்றுலாத்துறை அமைச்சின் நோக்கமாகுமென அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் அமைந்துள்ள தனியார் விடுதியொன்றைத் திறந்துவைத்த பின் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது அரசாங்கம் சகல இன மக்களையும் ஒரேமாதிரியாக மதித்து சகல வசதிகளையும் வழங்கி செயற்பட்டுவருகிறது.

தற்போது மூன்றாம் இடத்தில் உள்ள சுற்றுலாத்துறையை இந்த வருடம் இரண்டாம் இடத்திற்கு கொண்டு வருவதற்கான திட்டங்களை மேற்கொண்டு செயற்படுத்திவருகிறோம்.

தமிழ் மக்கள் கடந்தகால கசப்பான அனுபவங்களுக்கு மீண்டும் ஒரு முறை திரும்பிச் செல்லமாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்கும் எமது அரசாங்கத்திற்கும் இருக்கின்றது. இதற்கு முக்கிய காரணமாக தற்போதைய அரசாங்கம் சகல இன மக்களையும் ஒரே மாதிரியாக மதிக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## 'ஓய்வு பெற்றவர்கள் தேவை'

(கொழும்பு)

முப்படைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்றுக்கொண்ட அதிகாரிகள் பற்றிய தரவுகளை திரட்டிப் பேணுமாறும் தேவை ஏற்படும் போது பொதுத்துறை சேவைகளுக்காக ஓய்வுபெற்ற படையதிகாரிகளை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க முடியும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பு அமைச்சிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அரசாங்கத்தில் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் திறமையுடையவர்களுக்கு நிலவி வரும் பற்றாக்குறையை நீக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.


22 ஆண்டு சேவைக் காலத்தை பூர்த்தி செய்த தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் நிபுணத்துவமுடைய பல படையதிகாரிகள் ஆண்டு தோறும் ஓய்வு பெற்றுக்கொள்கின்றனர்.

பொறியியல், மருத்துவம், அளவையியல், தொழில்நுட்பம், விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் நிபுணத்துவமுடையவர்கள் இவ்வாறு ஓய்வு பெற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இவ்வாறானவர்களின் சேவையை மீளவும் பெறுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (செ-12)

# தற்கொலை அங்கி மீட்பை தவறாக அர்த்தப்படுத்தாதீர்

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் கோரிக்கை



(கொழும்பு)

**அமைதியான முறையில் நிரந்தரமான,நியாயமான, நீடித்திருக்கக் கூடிய அரசியல் தீர்வொன்றை பெற்றுக்கொள்வதிலேயே தமிழ் மக்கள் உறுதியாகவிருக்கின்றனர். தமிழ் மக்கள் ஒருபோதும் வன்முறையை விரும்பவில்லை என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் உறுதிபடத் தெரிவித்தார். தற்கொலை அங்கி உள்ளிட்ட வெடிபொருட்கள் மீட்கப்பட்டமையை தவறாக அர்த்தப்படுத்தக் கூடாது. அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் முழுமையான விசாரணையொன்று முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.**

சாவகச்சேரி மறவன்புலவிலுள்ள வீடொன்றிலிருந்து கடந்த புதன்கிழமை தற்கொலை அங்கி உள்ளிட்ட வெடிபொருட்கள் மீட்கப்பட்டிருந்தன. அதேதின்த்தன்று மன்னாரிலும் ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

இதனால் தேசிய பாதுகாப்புக்கு மீண்டும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. புலிகள் மீளவும் ஒருங்கிணைகின்றார்கள் போன்ற விமர்சன கருத்துக்கள் மேலெழுந்திருந்தன.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சித்தலைவரும் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் வன்முறையை விரும்பவில்லை. உதாசீனம் செய்கின்றார்கள். அதனை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். இவ்வதமான விடயங்களை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் மக்கள் வன்முறையை எதிர்க்கின்றார்கள்.

தற்கொலை அங்கி, வெடி பொருட்கள் மீட்கப்பட்டதை தவறாக அர்த்தப்படுத்தக் கூடாது.

அது குறித்த விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முழுமையாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்.

தற்போது புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதன் ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட வேண்டும்.

நீண்டகாலமாக காணப்படும் பிரச்சினைக்கு நிரந்தரமான, நியாயமான, நிலைத்திருக்கக் கூடிய அரசியல் தீர்வை அமைதியான முறையில் பெற்றுக் கொள்வதிலேயே மக்கள் உறுதியாகவுள்ளனர்.

ஆகவே, தமிழ் மக்கள் வன்முறையை ஒருபோதும் கையிலெடுக்க மாட்டார்கள். வன்முறையை அவர்கள் விரும்பவில்லை என்பதை மீண்டும் உறுதிபடக் கூறுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## தேசியப் பிரச்சினையை அரசியலுக்காக பயன்படுத்தும் அரசாங்கங்கள்-ஜே.வி.பி

(கொழும்பு)

தேசிய பிரச்சினையை அரசாங்கங்கள் அரசியல் நோக்கில் பயன்படுத்திக் கொண்டுள்ளதாக ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

எமது நாடு 30 ஆண்டு கால போரினால் பாதிக்கப்பட்டிருந்தது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை விபரங்கள் தெரியாது, சொத்து சேத விபரங்கள் தெரியாது.

இரத்தத்தினால் இந்த மண் ஈரமானது. கண்ணீரால் இந்த மண் கழுவப்பட்டுள்ளது.

வரலாற்றில் அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்காக சிங்கள இனவாதம், தமிழ் இனவாதம் மற்றும் முஸ்லிம் இனவாதம் தூண்டப்படுகின்றது.

இது தொடர்பில் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கின் சாதாரண பெற்றோரின் பிள்ளைகள் பொறுப்பு சொல்ல வேண்டியதில்லை.

வடக்கிலும் தெற்கிலும் அதிகாரத்திற்காக இனவாதம் தூண்டப்பட்டது. போர் மூண்டது. போரில் சாதாரண பெற்றோரின் பிள்ளைகளே கொல்லப்பட்டனர்.

வடக்கில் போரினால் கணவரை இழந்த பல பத்தாயிரம் பெண்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

தாய் தந்தை இருவரையும் இழந்த 2500 பிள்ளைகள் இருக்கின்றார்கள்.



ஆட்சியாளர்கள் இனவாதத்தை தூண்டி சொத்துக்களை சேகரித்துக்கொண்டனர்.

எனவே மீளவும் எந்த வகையிலான போர் ஒன்றுக்கும் நாட்டை தள்ளிவிடக் கூடாது.

ஜே.வி.பி செயற்பாட்டு அரசியலில் இருக்கும் வரையில் மீளவும் இனவாத முரண்பாடுகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது என நலிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## தற்கொலை அங்கி சூத்திரதாரி பிரபாகரனின் நெருங்கிய நண்பர்

### கொழும்பு ஊடகம் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேசத்தில் தற்கொலை அங்கியுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பல முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர் வாகனம் நிறுத்தும் இடத்தில் இருந்து குண்டொன்று கிடைத்ததாக குறிப்பிட்டுள்ளார். தான் கடற்றொழிலில் ஈடுபடுகின்றமையினால் மீன்களை கொல்வதற்கு வெடி பொருட்கள் பயன்படுத்த முடியும் என்பதால் தான் அதனை எடுத்து கொண்டதாக கூறியுள்ளார்.

எப்படியிருப்பினும் தற்போது வரையில் குறித்த சந்தேக நபர் வேறு ஒரு வாக்கு மூலத்தை வழங்கியுள்ளதாக பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சாவகச்சேரி பிரதேசத்தில் மணலுக்கு கீழ் இருந்து இந்த வெடி பொருட்கள் கிடைத்துள்ளதாக தற்போது கூறியுள்ளார். அதன் பின்னர் பொலிஸ் அதிகாரிகள் குறித்த சந்தேக நபரை அவ்விடத்திற்கு அழைத்து சென்றுள்ளனர்.

எனினும் அந்த இடத்தில் இருந்து வெடிபொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான எவ்விதமான சாட்சிகளும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சந்தேகநபர் பல முறை பொலிஸாரை வேறு திசைக்கு திருப்பும் நோக்கில் முரண்பாடான வாக்குமூலங்களை வழங்கிவருகின்றார்.

சம்பவம் தொடர்பில் தொடர்ந்து விசாரணை மேற்கொளஎப்படுகின்றது. மீட்கப்பட்ட வெடிபொருட்கள் தற்போது அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சாவகச்சேரியில் தற்கொலை அங்கியுடன் வெடி பொருட்களும் மீட்கப்பட்டன. இது தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்ற போர்வையில் தென்னிலங்கை ஊடகங்கள் பல ஊகங்களை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கட்சித்தலைமைத்துவத்துடன் தொடர்ந்தும் செயற்படுவேன்

### யாப்பா அபேவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்துடன் தொடர்ந்தும் இணைந்து செயற்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஹக்கமன தொகுதி உறுப்பினர்களுக்கு விளக்கமளிப்பதற்காக நேற்று முன்தினம் நடத்திய கூட்டத்தில் பேசும் போதே இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

கட்சியை நேசிக்கும் எவரும் கட்சியின் தலைவர் பதவியில் மாற்றம் ஏற்பட்டாலும் கட்சியை விட்டு செல்ல மாட்டார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(இ-5)

## குமார் குணரட்னத்திற்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்

முன்னிலை சோசலிசக்கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் குமார் குணரட்னத்திற்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்படுவதோடு அரசியல் பழிவாங்கல் அடிப்படையில் திட்டமிட்டே அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் அரசாங்கமானது குமார் குணரட்னத்தின் குடியுரிமையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

முன்னிலை சோசலிச கட்சியினரினால் நேற்றைய தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது அக்கட்சியின் ஏற்பாட்டாளர் புபுது ஜெயகொட மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

## வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் வாக்களிக்கும் வாய்ப்பு


வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களும் எதிர்கால தேர்தல்களில் வாக்களிப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்து ஆராயப்படுகிறது.

நாடாளுமன்ற தெரிவுக்குழு இதனை ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

23 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் யோசனை ஒன்றை நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளனர்.

இந்தநிலையில் எதிர்வரும் புதன்கிழமையன்று இந்த யோசனைக்கு ஒப்புதல் கிடைக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதன்படி 15 இலட்சம் இலங்கையர்கள் தேர்தல்களில் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை பெறக்கூடியதாக இருக்கும் என தெரிய வருகின்றது. (இ-5)






# மகளிர் உலகக் கிண்ணத் தொடரிலும் மேற்கிந்தியத்தீவுகள் சம்பியன்

மகளிர் உலகக் கிண்ண இருபது-20 தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதன்முறையாக சம்பியனாகியது.

வெற்றியாளரைத் தீர்மானிக்கின்ற இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய மகளிர் அணியை 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியே மேற்கிந்தியத்தீவுகள் மகளிர் அணி சம்பியனாகியது.

இந்தியாவில் பெண்கள் இருபது-20 உலக கிண்ணத் தொடர் நடந்தது. இதன் இறுதிப் போட்டி கொல்கத்தாவின் ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடந்தது.

இதில் 3 முறை சம்பியனான அவுஸ்திரேலியா-மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய மகளிர் அணித் தலைவி மெக்லானிங் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**மெக்லானிங் அரைச் சதம்**

அவுஸ்திரேலிய அணிக்கு ஹீலி (4) ஏமாற்றினார். பின் இணைந்த வில்லானி, மெக்லானிங் ஜோடி சிறப்பாக செயல்பட்டது. இருவரும் அரைச் சதம் கடந்தனர். டொட்டின் பந்தில் வில்லானி (52) ஆட்டமிழந்தார். மெக்லானிங் 52 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். டொட்டின் அசத்தல் பந்துவீச்சில் பெர்ரி (27), எரின் (0) வெளியேறினர்.

அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்கள் எடுத்தது.

**ஹியாலி அபாரம்**

பின் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஹியாலி மத்யூஸ, அணித்தலைவிஸ்டாபானியே ரெய்லர் பலமான ஆரம்பம் கொடுத்தனர்.

இவர்கள் இருவரும் முதல் விக்கெடடுக்காக 15.4 ஓவர்களில் பகிர்ந்த 120 ஓட்டங்கள் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வெற்றியிலக்கை இலகுவாக்கியது.

முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 19.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 149 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் மத்யூஸ் 66, அணித் தலைவர் ரெய்லர் 59 ஓட்டங்களை எடுத்தனர்.

**முதல் முறை**

இதன்மூலம் ரி20 உலகக் கிண்ண தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் முறையாக கிண்ணம் வென்று சாதித்தது. கடந்த மூன்று முறையும் (2010,12,14) பட்டம் வென்ற அவுஸ்திரேலிய அணி இம்முறை ஏமாற்றத்துடன் நாடு திரும்பியது.

# இங்கிலாந்தின் காலைவாரிவிட்ட ஸ்ரோக்ஸின் இறுதி ஓவர் பிராத்வெய்ட் சிக்ஸர்களால் மேற்கிந்தியத்தீவுகள் சம்பியன்



19 ஓவர்கள்வரை இங்கிலாந்து பககம் இருந்த வெற்றிக் கனவு பென் ஸ்ரோக்ஸின் மோசமான இறுதி ஓவரால் மேற்கிந்தியத்தீவுகள் வசமானது.

பென் ஸ்ரோக்ஸ் வீசிய இறுதி ஓவரில் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு 19 ஓட்டங்கள் வெற்றிக்காக தேவைப்பட்டன. அவ்வேளை பந்துகளை எதிர்கொண்ட பிராத்வெய்ட் தொடர்ச்சியாக 4 சிக்ஸர்களை விளாசி மேற்கிந்தியத்தீவுகள் அணியை சம்பியனாக்கினார்.

6 ஆவது 20 ஓவர் உலக கிண்ண போட்டி இந்தியாவில் நடைபெற்று வந்தது இதன் வெற்றியாளர் யார் என்பதை தீர்மானிக்கின்ற இறுதிப் போட்டி கொல்கத்தாவின் ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் பந்து வீச முடிவு செய்தது. தொடக்க ஆட்டகாரர்களாக ஜேசன் ரோய் மற்றும் அலெக்ஸ் ஹேல்ஸ் களமிறங்கினர். கடந்த ஆட்டத்தில் அசத்திய ஜேசன் ரோய் பத்ரி வீசிய ஆட்டத்தின் 2ஆவது பந்தில் போல்ட்டானார். அடுத்த ஓவரில் மற்றொரு தொடக்க வீரரான ஹேல்ஸ் ஆட்டமிழந்ததும் இங்கிலாந்து அணி அதிர்ச்சியடைந்தது. தொடர்ந்து களமிறங்கிய அணித் தலைவர் மோர்கன் பதரி பந்தில் ரஸலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதனால் இங்கிலாந்து அணி கடும் பின்னடைவுக்கு உள்ளானது.

இதனை அடுத்து இங்கிலாந்தின் நட்சத்திர வீரர் ஜோ ரூட்டும், ஜோஸ் பட்லரும் அணியை சரிவில் இருந்து மீட்டனர். சுலைமான் பென் வீசிய ஓவரில் பட்லர் இரண்டு சிக்ஸர்கள் அடித்து ஓட்ட வேகத்தை கூட்டினார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக பட்லர் 34 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது பிராத்வெய்ட் ஆட்டமிழந்தார்.

இதனால் அணியை காப்பாற்ற வேண்டிய முழுப்பொறுப்பும் ஜோ ரூட் மீது விழுந்தது. ஆனால் மோசமான ஒரு ஷொட்டை விளையாடி 54 ஓட்டங்களில் ஜோ ரூட் ஆட்டமிழந்தார். இதனை அடுத்து களமிறங்கிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்ததால், இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்களை இழந்து 155 ஓட்டங்கள் எடுத்தது. அதிகப்பட்சமாக ரூட் 54 ஓட்டங்கள் எடுத்தார்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் பிராவோ, பிராத்வெய்ட் ஆகியோர் தலா 3, பத்ரி 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

துடுப்பாட்டத்துக்கு சாதகமான ஈடன் கார்டன்ஸ் ஆடுகளத்தில் ஆக்ரோசமான மேற்கிந்தியத் தீவுகளின் துடுப்பாட்ட வீரர்களை விரைவில் வீழ்த்தினால் மட்டுமே வெற்றிப் பெறமுடியும் என்ற நெருக்கடியுடன் களமிறங்கியது இங்கிலாந்து.

அனைவரையும் ஆச்சரியப் படுத்தும் விதமாக இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கன் முதல் ஓவரை வீச ஜோ ரூட்டை அழைத்தார். ஹெயில் களத்தில் இருந்ததால் அந்த ஓவரில் சிக்ஸர்கள் பறக்கும் என்று ரசிகர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் ஹெயிலையும் (4), சார்ள்சையும் (1) ஆட்டமிழக்கச் செய்து அட்டகாசமான தொடக்கத்தை அளித்தார் ஜோ ரூட்.

அதன்பிறகு களமிறங்கிய சிம்மன்ஸ் டக் அவுட்டாகி அதிர்ச்சியளித்தார். இதனை அடுத்து சாமுவெல்சும், பிரவோவும் அணியை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதனால் மேற்கிந்தியத்தீவுகளின் ஓட்ட வேகம் குறைந்தது. பிராவோ ஒரு சிக்ஸ் அடித்து அதிரடியை தொடகிய உடனே 25 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ரசலும், சமியும் ஆட்டமிழந்ததால் ஆட்டத்தில் பரப்பரப்பு கூடியது. ஆனால் சாமுவெல்ஸ் ஒரு முனையில் நங்கூரம்போல் நின்று அந்த அணியை வெற்றிக்கு அழைத்து சென்றார். கடைசி 6 பந்துகளில் வெற்றிக்கு 19 ஓட்டங்கள் தேவைப்பட்டன. கடைசி ஓவரை பென் ஸ்டோக்ஸ் வீசினார், பிராத்வெயிட் எதிர் கொண்டார்.

முதல் பந்தை லேக் சைடில் சிக்ஸ் அடித்தார். இதனால் ஆட்டம் மேற்கிந்தியத்தீவுகள் பக்கம் சாய்ந்தது. ஆனால் அடுத்த பந்தும் சிக்ஸ்சுக்கு போக இங்கிலாந்து வீரர்கள் கலக்கம் அடைந்தனர். மூன்றாவது மற்றும் நான்காவது பந்தையும் சிக்ஸ் அடித்து இங்கிலாந்தின் உலகக் கிண்ண கனவுக்கு முடிவு கட்டினார் பிராத்வெய்ட்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 19.4 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி இரண்டாவது முறையாக சமபியன் பட்டத்தை வென்றெடுத்து.



## சித்திரைப் புதுவருட சிறப்பு நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

சுதந்திர இந்தியாவின் சட்டம் மற்றும் நீதித் துறைக்கான முதலாவது அமைச்சர் கலாநிதி. பி .ஆர்.அம்பேத்காரின் 125 ஆவது பிறந்த தின நினைவு நாளை முன்னிட்டும் தமிழ், சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டும் யாழ். இந்தியத் துணைத்தூதரகம் வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் சிறப்பு நிகழ்ச்சியும் இந்தி யாவிலிருந்து வருகைதரும், பட்டிமன்ற புகழ் ராஜா மற்றும் திருமதி பாரதி பாஸ்கரன் கல சிறப்பிக்கும் பட்டி மன்றம் நல்லூர் சங்கி லியன் தோப்பில்' எதிர்வரும்14 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள் ளது. (இ-5)

## இலங்கையிலும் நிர்மாணப் பணிகளில் இந்தியாவின் ஐ.வி.ஆர்.சி.எஸ்.நிறுவனம்

(கொழும்பு)

கொல்கத்தாவில் அண்மையில் உடைந்து வீழ்ந்து பலரின் உயிர்களை காவுகொண்ட மேம்பாலத்தை அமைத்த இந்திய நிறுவனம் இலங்கையிலும் குறைந்த செலவில் வீடுகளை அமைக்கும் திட்டத்தில் தொடர்பு கொண்டுள்ளது

ஆங்கில செய்தித்தாள் ஒன்று இதனைக் கூறியுள்ளது.

கொல்கத்தா மேம்பால உடைவின்போது 24 பேர் பலியாகினர்.

இந்தநிலையில் மாளிகாவத்தை திட்டம் என்ற பெயரில் இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள 4000 வீடுகள் அமைப்பு திட்டத்தை ஐவிஆர்சிஎல் என்ற இந்த இந்திய நிறுவனமே மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் நகர அபிவிருத்தி சபை இந்த திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

இதனையடுத்து இந்த விடயம் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)

## முதலமைச்சரால் திட்டவரைபு ஜனாதிபதியிடம் கையளிப்பு



2030 ஆம் ஆண்டளவில் கல்வி, சுகாதாரம், மக்களின் வாழ்க்கைத் தரம், வருமானம் ஆகியவற்றில் அபிவிருத்தி அடைந்து பொருளா தாரத்திலும் உணவு உற்பத்தியிலும் தன்னிறைவுள்ள ஒரு மாகாண மாக கிழக்கை மாற்றுவதற்கான தூரநோக்குள்ள வரைவுத் திட்டமொ ன்று கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட்டி னால் கடந்த வெள்ளிக்கிழமை ஏறாவூரில் வைத்து ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.




யாழ். மாவட்டத் திற்குட்பட்ட ஞானக்குழந்தை முன் பள்ளிகள் இணைந்து நடத் திய பேச்சுத்திறன் காணும் வைபவ நிகழ்வில் யாழ். அரசடி ஞானக்கு ழந்தை முன்ப ள்ளி மாணவர்கள் கௌரவிக்கப்பட்ட போது..


அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பிதழ்

பிறப்பு 13 10 1968



இறப்பு 05 03 2016

கடந்த 05.03.2016 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் பொன்னையா ரவிச்சந்திரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 04.04.2016 இன்று திங்கட்கிழமை காலை 5.00 மணியளவில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் அன்று பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

நொத்தாரிசு தோட்டம்
கரணவாய் மேற்கு,கரவெட்டி.

(4055)

இங்ஙனம்
குடும்பத்தினர்.



விஞ்ஞானக் கல்வி நிலையம்

கரடிப்போக்கு, கிளிநொச்சி.

2016 இல் SLAS, SLEAS

போட்டிப் பரீட்சைக்கான வகுப்புக்கள் 20.03.2016 ஆம் திகதி தொடக்கம் எமது கல்வி நிலையத்தில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் ஒருங்கிணைப்பில் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு நிர்வாகம். விஞ்ஞானக் கல்வி நிலையம், கரடிப்போக்கு, கிளிநொச்சி.

021 206 0905
077 744 2834

(சி-4207)


## இராசி பலன்

04.04.2016
(பங்குனி 22, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.08மணிக்கு
துவாதசி நள்ளிரவு 12.02 மணிவரை
அவிட்டம் காலை 9.05 மணிவரை
சுபநேரம் 12.09-1.39 மணிவரை
இராகுகாலம் 7.39-9.09 மணிவரை
பரமகுரு சுவாமி குருபூசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி சுக் | புத | | |
| சந் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பரணி | | |
| | | | குரு ராகு |
| | சனி, செவ் | | |

**மேடம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்து ழைப்பு கிடைக்கும், பயண ங்கள் கைகூடுவதற்கான வாய் ப்புண்டு, பணப்புழக்கம் அதி கரிக்கும் நாள், குடும்ப மகிழ் ச்சி கூடும் நாள்.

**இடபம்** சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், பெரிய மனி தர்க ளின் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், ஆரோக்கியமான நாள், முயற்சிகளில் முன்னே ற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, புதிய திட் டங்கள் எளிதில் கைகூடும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பழக விலகி பாசம் கூடும் நாள்.

**கடகம்** தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம், மருத்துவச் செல வுகள் ஏற்படலாம், வேலை யாட்களிடம் போராடி வேலையை முடிப்பீர்கள், பிரயாண பயமுண்டு.

**சிம்மம்** மனதிற்கினிய சம்பவ மொ ன்று நடைபெறும் நாள், பயணங்களால் பலனுண்டு, நண்பர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**கன்னி** செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, இனத்தார் பகைமாறி இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள்.

**துலாம்** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், நிதி நிலை உயர்வடைவதற்கான வாய் ப்புண்டு, தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவா கும்.

**விருச்சிகம்** சந்தித்த நபர்களால் சந்தோச மான தகவலொன்று வந்து சேரலாம், புதிய பொருட் களை வாங்கும் எண்ணம் உருவாகும், நலன்தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** குடும்பத்தில் குதூகலம் கதரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், மனதில் புதிய சிந்த னைகள் தோன்றும், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடை வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், செய்தொழில் மேன்மையுண்டு, சுப செலவுகள் ஏற்படலாம்.

**கும்பம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், ஆரோ க்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், உறவினர் களின் வருகையால் திடீர்ச் செலவகள் ஏற்படலாம்.

**மீனம்** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, தூரதேசச் செய்திகள் ஆச்சரியப்படவைக்கும், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம்.

# மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் திருட்டுக்கள் தொடர்கின்றன

## பொலிஸாரிடம் முறையிட்டும் பயனில்லை

(யாழ்ப்பாணம்)

**மீள்குடியேற்றத்துக்காக அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளான பலாலி கிழக்கு, பலாலி தெற்கு பகுதிகளில் சட்டவிரோத கல் அகழ்வு மற்றும் பாரிய மரங்கள் திருடப்படுவதாக அப்பகுதியில் குடியமர்ந்துள்ள பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.**

நேற்று முன்தினம் குறித்த பகுதிகளில் நீண்டகால பயன்தருமரங்கள் வெட்டப்பட்டுள்ளதாக கிராம சேவையாளர்களால் அச்சுவேலி பொலிஸில் நேற்றைய தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிராம சேவையாளர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதும் பொலிஸார் உடனடியாக எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என தெரியவருகிறது.

அத்துடன் மீள்குடியேற்றத்துக்காக விடுவிக்கப்பட்ட பகுதிகளான பலாலி கிழக்கு ஜே/253 மற்றும் பலாலி தெற்கு ஜே/ 252 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இரவு நேரங்களில் பெறுமதியான வேம்பு, பனை போன்ற வீட்டு மரங்கள் வெட்டப்பட்டு எடுத்து செல்வதுடன், வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் உரிமையாளர்களின் காணிகளில் கனியவள அமைச்சின் அனுமதி இன்றி கனரக இயந்திரங்கள் மூலம் கல் உடைக்கும் கல் அகழும் வேலையை ஒரு சிலர் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பல முறை முறையிட்ட போதும், பொலிஸார் நடவடிக்கை எடுக்க முன்வருவதில்லை என அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (இ-9)

---

## மாணவர்களுக்குரிய தங்குமிட விடுதி அமைக்க

# யாழ். நகரில் நான்கு பரப்புக்காணி யாழ். மருத்துவபீடம் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மருத்துவபீட மாணவர்களுக்குரிய தங்குமிட விடுதி அமைப்பதற்காக 16 மில்லியன் ரூபாய் நிதியில் 4 பரப்பு காணி யாழ்.நகர்ப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மருத்துவ பீட மாணவர்களுக்குரிய தங்குமிட விடுதி அமைப்பதற்கு யாழ்.நகர்ப்பகுதியில் தற்போதுள்ள மருத்துவ மாணவர் விடுதிக்கு அருகில் 4 பரப்பு காணியை கொள்வனவு செய்வதற்கு அதற்கான நிதியை சேகரிக்கும் முயற்சியில் கடந்த 2014 ஆம் ஆண்டில் இருந்து யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பழைய மாணவர் சங்கத்தினர் ஈடுபட்டு வந்தனர்.

அந்த வகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பழைய மாணவர் சங்கத்தினரால் அளப்பெருங்கருணை எனும் நாட்டிய நாடகம் பல இடங்களில் மேடையேற்றப்பட்டு இதற்கான நிதியினை சேகரித்துள்ளனர்.

அத்துடன் புலம்பெயர்ந்த தமிழர்கள், பழைய மாணவர்கள், வெளிநாட்டில் உள்ள பழைய மாணவர்கள் நிதி உதவிகளை செய்துள்ளனர்.

தற்போது யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 600 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். அதில் 360 மாணவர்களுக்கு மாத்திரமே தற்போதுள்ள விடுதி போதுமானதாக இருக்கின்றது. போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மாணவர்களும் தங்குமிட விடுதி பற்றாக்குறையால் பாரிய சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக முதலாம் வருட மாணவர்களுக்கும் இறுதி வருட மாணவர்களுக்கும் தான் தங்குமிட விடுதி மிக அவசரமாக தேவைப்படுகின்றது.

சமூகத்தில் உள்ள நலன் விரும்பிகள் அனைவரினதும் ஒத்துழைப்புடன் இக்காணி கடந்த வருட இறுதிப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. விடுதி அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிப்பது தொடர்பாக தீர்க்கமான முடிவுகள் இன்னும் எடுக்கப்படவில்லை என தெரியவருகிறது. (இ-9)

---

யாழ்.செய்திகள்

## பொது அறிவுப் போட்டி முடிவுகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொது நூலகத்தினால் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பொது அறிவுப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

**ஆரம்பப்பிரிவு**

இருவர் முதலாமிடம் நி.கஜானன்- யா/ மகாஜனக் கல்லூரி, க.பபிஷான்- அருள் கல்வி நிலையம், இரண்டாமிடம் இருவர்- கௌ.மகிழினி, நி.தனுசிகா-மகாஜனக் கல்லூரி, நால்வர் மூன்றாமிடம் நீ.ரோஷானி, சி.சரூபன்-மகாஜனக் கல்லூரி, பொ.அபிநயா, பி. கஜானி- அருள் கல்வி நிலையம்

**கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் மு.கவிஅரசன்- அருள் கல்வி நிலையம், இரண்டாமிடம் அ.அனோஜன்-மானிப்பாய் இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் சௌ.சாகித்தியன்- யா/சுதுமலை சிந்மய பாரதி

**மத்திய பிரிவு**

முதலாமிடம்- சி.சர்மிளன்-மகாஜனக் கல்லூரி, இரண்டாமிடம் த.ரேனுஜன்- மகாஜனக் கல்லூரி, மூவர் மூன்றாமிடம்- சு.வக்ஸ்சன், தி.மணிமோகன்- மகாஜனக் கல்லூரி, த.சாருஜன்- அருள் கல்வி நிலையம்

**மேற்பிரிவு**

நால்வர் முதலாமிடம் உ.பதுஷா,ததர்மினி,அதேனுஜா, க.சுகஞ்ஜா- யா/இராமநாதன் கல்லூரி, இருவர் இரண்டாமிடம்-சு.பிரேதிகா, சி.கில்மியா- யா/இராமநாதன் கல்லூரி, மூன்றாமிடம் க.கோகுலவாணி- யா/இராமநாதன் கல்லூரி. (இ)

---





அமெரிக்க தூதராலயம் மற்றும் யாழ். செயற்பாட்டு மையம் இணைந்து நடத்தும் அமெரிக்க தகவல் கூட உத்தியோகபூர்வ திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்க பிரதித் தூதுவர் அன்ட்ரூமான் கலந்து கொண்டு தகவல்கூடத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

---

# ஊர்காவற்றுறை கோட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் இன்னும் ஓரிரு மாதங்களில் நிரப்பப்படும் - கஜதீபன்

ஊர்காவற்றுறை கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் நிலவும் அதிபர் மற்றும் ஆசிரியர் வெற்றிடங்கள் இன்னும் ஓரிரு மாதங்களில் முழுமையாக நிவர்த்தி செய்யப்படும்என வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் " இக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த கோட்டக்கல்வி அதிகாரி சத்தியசீலன், இக்கோட்டத்துக்குட்பட்ட 12 பாடசாலைகளுக்கு நிரந்தரமான அதிபர்கள் இல்லை என்றும், கோட்டத்தில் 45 ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுவ தாகவும், குறிப்பிட்டார். இதற்கு வடமாகாண சபை என்ற ரீதியில் நாம் தான் பொறுப்புச்சொல்ல வேண் டியவர்கள். அந்தவகையில் புதிதாக பரீட்சையில் சித்தியடைந்த அதிபர்கள் முதற்கட்டமாக தீவக வலய த்துக்கு நியமிக்கப்படுவதற்கு ஆவன செய்வதோடு, வெற்றி டமாக உள்ள ஆசிரிய வெற்றிடங்களை மிகத்துரிதமாக ஓரிரு மாதங்களில் நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுப்போம். இது எமது கடமையாகும்.


வெற்றிடங்கள் நிலவும் 45 பேரில் 17 பேர் ஆரம்பக்கல்வி ஆசிரிய வெற்றிடங்களாகும். வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் எண்ண்ிக்கை மேலதிகமானதாக காணப்படுகிறது. ஆனால் இங்கே வெற்றிடங்கள் நிலவுகின்றன. இது எங்களின் வளப்பங்கீட்டு குறைபாடாக காணப்படுகிறது. இது நிவர்த்தி செய்யப்படவேண்டிய ஒன்றாகும். ஏனெனில் அன்று கல்வியில் பல சாதனைகளைப்புரிந்த தீவக வலயம், இன்று இலங்கையிலேயே கல்வியில் பின் தங்கிய நிலையிலுள்ளதாக புள்ளிவிபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இதை நிவர்த்திசெய்து , தீவகப்பகுதி கல்விநிலையை முன்னேற்றும் முகமாக நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நாம் மாகாண சபையூடாக நிவர்த்திசெய்து, மீண்டும் தீவக வலயத்தின் கல்வி நிலையை உயரச் செய்வதற்கு அனைவரும் கைகோர்த்து ஒன்று திரள வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் நலன்கருதி பல்வேறான பௌதீக கட்டுமானங்களை அடுத்த ஆண்டுகளில் எமது அமைச்சினூடாக செயற்படுத்த பல்வேறான நடவடிக்கைகளை நாம் முனெடுத்து வருகிறோம் எனக் குறிப்பிட விரும்புகிறேன் என அவர் தெரிவித்தார்.


மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவர்களான மாவை. சோ. சேனாதிராசா மற்றும் அங்கஜன் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பலரும் கலந்துகொண்டனர். (இ-89)

# ஜனாதிபதி நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம்









யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள முதலாவது நட்சத்திர விடுதியான ஜெட்விங் விடுதியினை ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன உத்தியோகபூர்வமாக நேற்றைய தினம் திறந்து வைத்துள்ளார். முன்னாள் அமைச்சரான மெலிந்த மொறகொட தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் குறித்த நட்சத்திர விடுதியில் கடமை யாற்றுவதெற்கென தெரிவு செய்யப்பட்ட வடபகுதி தமிழ் ஊழியர்களுக்கான சான்றிதழ்களை ஜனாதிபதி வழங்கி வைத்துள்ளார். இந்த நிகழ்வில் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைசர் முஸ்தபா, சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ விவகார அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க, சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே, யாழ்மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், யாழ் இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்-பொ.சோபிகா)

## சிறுபான்மை இனங்கள் அச்சமின்றி வாழ உதவுங்கள்

இந்த நாட்டில் வாழும் தமிழர்கள், முஸ்லிம்கள், தோட்டத் தொழிலாளர் உள்ளிட்ட சிறுபான்மை சமூகங்கள் நிம்மதியாக அச்சமின்றி வாழ உதவுங்கள் என ஏறாவூருக்கு வந்திருந்த ஜனாதிபதியிடம் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட உருக்கமான வேண்டுகோள் விடுத்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சரின் முயற்சியினால் 5000 குடும்பங்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வாழ்வாதாரத்தை வழங்கக் கூடிய சுமார் 200 மில்லியன் ரூபா செலவில் ஏறாவூரில் நிர்மாணிக்கப்பட்ட ஆயத்த ஆடைத் தொழிற்சாலை மற்றும் கைத்தறித் தொழிற்சாலை என்பனவற்றை கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திறந்து வைத்த நிகழ்வுக்கு தலைமையேற்றுப் பேசும்போது முதலமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய முதலமைச்சர், கிழக்கு மாகாண மக்களாகிய நாங்கள் உங்கள் கைகளைப் பலப்படுத்துவதற்காக ஒன்றுபட்டுள்ளோம்.

சுதந்திரத்திற்குப் பின்னர் இந்த நாட்டை இன,மத,மொழி,கட்சி பேதங்களுக்கப்பால் ஒன்றிணைத்த ஒரே தலைவர் நீங்கள் என்பதால் நாங்கள் உங்களுக்கு ஆதரவளிக்கின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல இந்த நாட்டிலே சிதறி வாழ்கின்ற சிறுபான்மையினர் அச்சமும் பீதியுமின்றி நிம்மதியாக வாழ்வதற்குத் தோதான அத்தனை ஏற்பாடுகளையும் நீங்கள் உங்களது ஆட்சிக் காலத்தில் செய்ய வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். (இ-5)

## அமைச்சரவை மாற்றத்தின் போது ஐந்து அமைச்சர்கள் பதவி இழப்பர்

(கொழும்பு)

இலங்கையில் மேற் கொள்ள எதிர்பார்க்கப்படும் அவசர அமைச்சரவை மாற்றத்தின் போது முக்கிய அமைச்சர்கள் ஐந்து பேர் தமது பதவிகளை இழப்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த பதவிப் பறிப்புக்களுக்கான காரணங்கள் வெளியாகவில்லை.

இந்த அமைச்சரவை மாறறங்கள், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் சீன விஜயத்தின் பின்னர் இடம் பெறும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது. ரணில் எதிர்வரும் 6 ஆம்திகதி முதல்9ஆம்திகதி வரை சீனாவுக் கான விஜயத்தை மேற் கொள்ள வுள்ளார். (இ-5)


### யா/ மகாஜன கல்லூரி, தெல்லிப்பழை
### க.பொ.த. (உ/த) 2018 பிரிவிற்கான அனுமதி

2018 உயர்தரப் பிரிவிற்கு இம்முறை புதிதாக தொழில்நுட்ப பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

★ தொழில்நுட்பப்பிரிவு ★ கணிதம்
★ விஞ்ஞானம் ★ கலை ★ வர்த்தகம்

ஆகிய துறைகளுக்கு அனுமதி பெற விரும்புபவர்கள் அலுவலக நேரத்தில் விண்ணப்படிவங்களைப் பெற்று 27.04.2016 இற்கு முன் சமர்ப்பிக்கவும்.

(4081) அதிபர்



### பணி சிறப்புற நயப்புடன் வாழ்த்துகின்றோம்

**ஆ.சு.சற்குணராஜா**
SLEAS-II

கோப்பாய்க் கோட்டப் பூச்சியத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளராய் அரும் பணியாற்றி வடக்கு மாகாண இராச்சியத்தின் ஆரம்பக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்ற தங்களின் பணி சிறப்புற நயப்புடன் வாழ்த்துகின்றோம்.



அதிபர்கள் சங்கம்
அலுவலக பணியாளர்கள்
கோப்பாய்க் கோட்டம்
(சி-4206)



### கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 31செவ் 8 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ அரசதொழில்<br>தொ.இ: B/4132 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 27<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:சித்தவைத்தியர்<br>தொ.இ: G/4914 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 19<br>உயரம்: 172cm<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/4136 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 32<br>உயரம்: 5’6”<br>தகைமை/தொழில்:DIPLOMA/ அரசதொழில்<br>தொ.இ: G/4921 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 21செவ் 8 இல்<br>உயரம்: 153cm<br>தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்<br>தொ.இ: B/4139 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 26 செவ் 2 இல்<br>உயரம்: 164cm<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/4925 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா:58செவ் 12 இல்<br>உயரம்: 182cm<br>தகைமை/தொழில்:BSc, MSc/ QSகட்டார்<br>தொ.இ: B/4169 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 28 சூரி செவ் 5 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/4932 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

### அக்கராயன் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்

# இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கை காலபோகத்திற்கான விதைநெல்

## கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவிப்பு

இரணைமடுக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெறுவதன் காரணமாக இவ்வாண்டு இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கை இடம் பெறமாட்டாது. இதன் காரணமாக அக்கராயன்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் சிறுபோக நெற்செய்கைதான் இவ்வாண்டு காலபோகத்திற்கான மாவட்டத்தின் விதைநெல்லினை தீர்மானிக்கப்போகின்றதென கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் தெரிவிததுள்ளார்.

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக்கூட்டம் கடந்த முதலாம் திகதி நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இரணைமடுக்குளத்தின் கீழ் இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கையினை மேற்கொள்ளமுடியவில்லை. ஆனால், அக்கராயன்குளத்திலே சிறுபோகத்தினை சிறப்பாக செய்துமுடிக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தமான நிலையிலுள்ளோம். அக்கராயன்குளத்தின் அபிவிருத்தியிலும் விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டிலும் மாவட்டச் செயலகமும் எமது திணைக்களமும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

அக்கராயன்குளத்தில் 2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல நெருக்கடிகளை சந்தித்திருக்கின்றோம். குளம் உடைப்பெடுக்கக் கூடிய அபாயநிலையிலிருந்தது எமக்கு ஒரு சவாலான விடயமாகவுமிருந்தது. அபிவிருத்தி செய்வதில் நெருக்கடியிருந்தது. குளத்தின் கீழ் உடைப்பெடுக்கக்கூடிய பெருங்குழிகள் இருந்தன.

பலமுயற்சிகளை நாம் எடுத்தோம். வான்வெள்ளம் பாய்கின்றபோது கட்டுமானங்கள் எத்தனை தடவைகள் உடைவுகள் ஏற்பட்டதென்பது எல்லோருக்கும் தெரியும். உடைவுகள் ஏற்பட்டபோதெல்லாம் நாம் முயற்சிகளை விடவில்லை. அக்கராயன் குளத்தின் கீழ் பெருங்குளங்கள் இல்லை. குடமுறுட்டிக்குளம் இருந்தாலும் கூட அக்கராயன்குளத்திலிருந்து பெருமளவு நீரை வெளியில் விடுகின்றோம் என்ற கவலையிருந்தது.

நல்லதொரு சந்தர்ப்பம் 2010 இற்குப் பிறகுதான் ஏற்பட்டது. இக்குளத்தின் கீழுள்ள விவசாயிகள் இக்குளத்தினை முழுமையாகப் பயன்படுத்தவேண்டும். சிறுபோக நெற்செய்கையை முழுமையாக செய்யவேண்டுமென்பதில் முனைப்பாக இருந்தனர்.

கடந்தாண்டு கூட அதற்கான முயற்சிகளை நெருங்கியிருந்தோம். 2 ஆயிரத்து 700 ஏக்கர் வரை முழுமையான நீர்ப்பாசனம் செய்யக்கூடிய நிலையிருந்தும் அதனை செய்யமுடியாத நிலையிருந்தது.

இதேவேளை, அக்கராயன்குளத்தின் கீழ் இவ்வாண்டு 2 ஆயிரத்து 790 ஏக்கரில் நெற்செய்கையும் 240 ஏக்கரில் உப பயிர்ச்செய்கையும் மேற்கொள்வதென அக்கராயன் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.


ஆனால், தற்போது அக்கராயன்குளத்தில் நெருக்கடிகளுக்கு மத்தியில் நூறுவீதம் நீர்வழங்கக் கூடிய நிலைமையேற்பட்டுள்ளது.

சிறுபோகத்தில் அக்கராயனில் செய்கைப் பண்ணப்படும் நெல்தான் மாவட்டத்தின் காலபோகத்திற்கான விதை நெல்லினை தீர்மானிக்கப்போகின்றதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2)




# தளபாட பற்றாக்குறையினால் மாணவர்கள் தரையிலிருந்து பரீட்சை எழுதும் அவலநிலை

## கிளி/சிவபாத கலையகம் அ.த.க. பாடசாலையின் நிலையைச் சற்று கவனியுங்கள்



(மல்லாவி)

கிளிநொச்சி பொன்னகரில் அமைந்துள்ள கிளி/ சிவபாதகலையகம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அடிப்படை வசதிகளின்றி பல்வேறு குறைகளுடன் இயங்கி வருவதாக பெற்றோர், சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

பாடசாலை தளபாடங்கள் இன்மையால் மாணவர்கள் தரையிலும், கதவுகளை மேசையாக பயன்படுத்தி வருவதுடன், கதிரைகளில் பரீட்சை வினாத்தாள்களை வைத்து, முழங்கால்களில் நின்று பரீட்சை எழுதும் நிலை காணப்படுகின்றது.

பாடசாலை கல்வி இலங்கையில் இலவச கல்வியாக வழங்கப்பட்டு வருகின்ற போதிலும், சிறுவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றமைக்கு இதுவும் ஒரு உதாரணமாகும்.

பாடசாலைக்கான பௌதீக வளங்கள் கிடைக்காத நிலையிலும், இவ்வருடம் சாதாரண தரத்தில் தோற்றிய 6 மாணவர்கள் உயர் கல்விக்கு தகுதி பெற்றுள்ளனர். பாடசாலை வளர்ச்சிக்கு பௌதீக வளங்கள் இன்றியமையாத ஒன்றாகும்.

இப்பாடசாலையில் தரம் 1 முதல் 11 வரை 400 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். கதவுகள் அற்ற மலசல கூடங்களும், வகுப்பறை பற்றாக்குறையும் மாணவர்களின் அடிப்படை வசதிகள் தொடர்பில் கேள்வி எழுப்புகின்றன.

அதேவேளை விளையாட்டு மைதானம் விலங்குகளின் மேய்ச்சல் தரைகளாக காணப்படுகின்றன. சுற்று வேலி பாதுகாப்பாக இன்மையால் விலங்குகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது,

பாடசாலையில் நூலகமாக காணப்படும் பகுதியிலேயே மாணவர்களிற்கு வழங்கும் உணவு களஞ்சிய அறையாகவும் காணப்படுகின்றது, அதுமட்டுமன்றி மாணவர்களின் விளையாட்டு திறமைகளை வெளிப்படுத்த விளையாட்டு உபகரணங்கள் இல்லை. இதனால் திறமை மிக்க விளையாட்டு வீரர்களின் திறமை மழுங்கடிக்கப்பட்டுள்ளது,

சிவபாத கலையகம் பாடசாலைக்கு தேவையான வகுப்பறை வசதிகளையும், தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட பாடசாலை பௌதீக வளங்களை நிறைவு செய்து தருமாறு பெற்றோர், சமூக ஆர்வலர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (2-15)

# போட்டிப் பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

சமூக சேவைகள் உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கான தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம் வடக்கு மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக் குழுவினால் கோரப்பட்டுள்ளன.

இதற்கான முடிவுத்திகதி எதிர்வரும் 15 ஆகும்.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் 3 இல் 12 வெற்றிடங்களுக்கும், சமூக சேவைகள் உத்தியோகத்தர் தரம் 2 இல் 17 வெற்றிடங்களுக்கும் போட்டிப் பரீட்சைகள் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளது.

போட்டிப் பரீட்சை மூலமாக தெரிவு செய்யப்படுவோர் வடக்கு மாகாணத்திலுள்ள வெற்றிடமுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் நியமிக்கப்படுவார்கள் என அறிவீக்கப்பட்டுள்ளது. (2-254)

# ஊர்வலமும் விழிப்புணர்வு கூட்டமும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர றோட்டறிக்கழகத்தின் ஏற்பாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் மதுபோதைப் பொருள் பயன்பாடு, பெண்கள், சிறுவர்கள் ஆகியோருக்கெதிரான வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் என்பவற்றிற்கு எதிரான விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்குடன் ஊர்வலம், கூட்டம் என்பவற்றை பல்வேறு திணைக்களங்களின் அனுசரணையுடன் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகி ஏ-9 வீதியூடாக நகர்ந்து கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தை சென்றடைந்து அங்கு விழிப்புணர்வு கூட்டம் நடைபெறும் என றோட்டறிக்கழகத் தலைவர் வைத்திய கலாநிதி எம்.றமணன் அறிவித்துள்ளார்.

எனவே இவ் ஊர்வலத்தில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், நலன் விரும்பிகள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-277)

# கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றும் அனைத்து ஊடகவியலாளர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9 மணிக்கு மு/முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறும். இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் கல்வி, கலை, கலாசார மேம்பாட்டில் ஊடகவியலாளர்களின் பங்கு அவர்களின் சுய செயற்பாட்டின்போது ஏற்படும் இடையூறுகள் மற்றும் ஊடகவியலாளர்களின் தேவைகள் குறித்து ஆராய்ப்படவுள்ளன . இக்கலந்துரையடலில் மூத்த ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகர் கலந்துகொண்டு சிறப்புக் கருத்துக்கள் வழுங்கவுள்ளார்.

இதில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் களான வைத்தியர் சி.சிவமோகன்,திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோருடன் முல்லைத்தீவை பிரதிநித்துவப்படுத்தும் வடமாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொண்டு தமது கருத்துக்களை முன்வைக்கவுள்ளனர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (2-302)



கொக்குத்தொடுவாய் மத்தியில் பால்நிலவு முன்பள்ளி கொக்குத்தொடுவாய் தெற்குப் பகுதியில் திரேசம்மா முன்பள்ளி ஆகியவை அண்மையில் திறந்து வைக்கப்பட்டன. குறித்த நிகழ்வில் பாக்கியம் அறக்கட்டளையைச் சேர்ந்த நிர்வாகிகள் இரண்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளையும் அவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவுத் தொகையாக 2 ஆயிரம் ரூபாவையும் வழங்க முன் வந்துள்ளனர். (படங்கள்:- பனிக்கன்குளம், குருமன்காடு செய்தியாளர்கள்)

# எனது மகளின் படுகொலை தொடர்பில் விரைவில் நீதியைப் பெற்றுத்தாருங்கள்

## வித்தியாவின் தாய் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரிடம் கோரிக்கை

(குருமன்காடு)

**எனது மகளின் கொலைக்கு விரைவில் நீதியை பெற்றுத்தாருங்கள் என புங்குடுதீவில கூட்டு வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்டதாக கூறப்படும் வித்தியாவின் தாய் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தனவிடம் கோரிக்கையொன்றை முன்வைத்தார்.**



வவுனியா, குருமன்காடு, சிங்கள பிரதேச செயலக வீதியில் வித்தியாவின் குடும்பத்தினருக்கு வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று மதியம் இடம்பெற்றபோதே வித்தியாவின் தாயார் இக் கோரிக்கையை அவரிடம் முன்வைத்தார்.

யாழ்ப்பாணம், புங்குடுதீவில கூட்டு வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்டதாக கூறப்படும் வித்தியாவின் தாயாரை ஜனாதிபதி யாழ்ப்பணத்தில் சந்தித்திருந்தபோது தனது குடும்பத்தினருக்கு பாதுகாப்பு கருதி வவுனியாவில் வீடொன்றை பெற்றுத் தருமாறு கோரியிருந்தார். இந் நிலையில் வவுனியாவில் வீடு அமைக்கப்பட்டு நேற்று வழங்கப்பட்டது.

இதனை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் வித்தியாவின் தாய் மற்றும் சகோதரர்களிடம் கையளிக்கும் போதே இக்கோரிக்கையை முன்வைத்திருந்ததுடன் மகளின் கொலை தொடர்பான விசாரணையை விரைவுபடுத்தி குற்றவாளிகளுக்கு விரைவில் தண்டனை வழங்க வேண்டும் எனவும் கோரியிருந்தார்.

இந் நிகழ்வில் ஜனாதிபதியின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன, வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்த நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நிகழ்வை புறக்கணித்திருந்தனர். அத்துடன நேற்றைய தினம் வித்தியாவின் தாயாரிடம் வீட்டிற்கான உறுதிப்பத்திரம், திறப்பு என்பன வழங்கப்பட்டன.

இதே வேளை வவுனியா வர்த்தக சங்கத்தினர் தனியார் பேருந்து உரிமையாளர்கள் ஆகியோர் வீட்டிற்கான சில தளபாடங்களையும் வழங்கி வைத்தனர். (2-250)





வவுனியா, குருமன்காடு சிங்கள பிரதேச செயலக வீதியில் மாணவி வித்தியாவின் குடும்பத்தினருக்கு வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று மதியம் நடைபெற்றது. இதன்போது இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன வித்தியாவின் தாயாரிடம் வீட்டிற்கான உறுதி, திறப்பு என்பனவற்றை கையளித்த போது... (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

### மனனப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன

(வவுனியா)

வவுனியா கைடெக் மருத்துவ ஆய்வுகூடத்தின் அனுசரணையுடன் வவுனியாவில் அமைந்துள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கிடையே தேவார மனனப்போட்டி கடந்த 20ஆம் திகதி காலை 10.30மணியளவில் வவுனியா ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. (2)




## அனைத்துலக தமிழ் உரைநடை மாநாட்டு கருத்தரங்குக்கு ஆய்வுக்கட்டுரைகள் கோரல்

(வவுனியா)

வவுனியா கோவில் குளம் அகிலாண்டேஸ்வரர் திருக் கோவிலும் வவுனியாதேசியக் கல்வியியற் கல்லூரியும் திருவையாறு தமிழ் ஐயாக் கல்விக் கழகமும் இணைந்து நடத்தும் 14 ஆவது அனைத்துலகத் தமிழ் உரை நடை ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்குக்கு ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

ஆய்வுக் கட்டுரைகள் அனைத்தும் தமிழ் உரை நடை பற்றியே எழுதப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

அனைத்து துறைக் கல்லூரி பேராசிரியர்கள், தமிழறிஞர்கள்,தமிழ் ஆய்வாளர்கள், கவிஞர்கள்,புலவர்கள்,ஆய்வு மாணவர்கள் ,தமிழ் ஆர்வலர்கள் எவரும் தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரை எழுதலாம்.

ஆய்வு மாணவர்கள் ஏ-4 தாளில்கணனி அச்சில் 4 பக்கங்கள் (750 சொற்களுக்கு மேற்படாமல், மற்றவர்கள் 5 பக்கங்கள் (750 சொற்களுக்கு மேற்படாமல்) மற்றவர்கள் 5 பக்கங்கள் (1000 சொற்களுக்கு மேற்படாமல்) கணனி அச்சில் இரு வரி இடை வெளியுடன் Unicode கணனி அச்சுச் செய்த குறுந் தட்டையும் CD இணைத்து அனுப்புதல் வேண்டும்.(எழுத்துரு செந்தமிழ், ஆர். ஜி.பி.பாமினி போன்றவை.)

இலங்கையிலுள்ள ஆய்வு மாணவர் களுக்கு 2 ஆயிரம் ரூபாவும் இலங்கையில் ஏனைய பேராளர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும் பதிவுக் கட்டணமாக செலுத்துதல் வேண்டும்.

2 ஆயிரம் ரூபா பதிவுக் கட்டணம் அனுப்புபவர்கள் பல்கலைக்கழகம், கல்லூரி ஆகியவற்றில் முழு நேர ஆய்வு மாணவர் என்பதற்கு சான்று பெற்று அனுப்புதல் வேண்டும்.

ஒரே நேரத்தில் இருவர் எழுதும் போது இருவருக்கும் பதிவுக் கட்டணங்கள் செலுத்துதல் வேண்டும். கட்டுரைகள் Sirithar 1967 @gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படல் வேண் டும்.

பணத்தை 8820006915 என்ற Commercial Bank என்ற கணக்கிலக்கத்திற்கு வைப்பிட வேண்டும்.

மேலதிக தகவல் தேவைப்படுவோர் டாக்டர் . எஸ்.வை.சிறீதர்,0714453444 என்ற தொலைபேசி இலக்கதத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

## கரைச்சியின் அபிவிருத்திக்கு 1,346 மில்லியன் ரூபா தேவை

(கிளிநொச்சி )

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் 2016ஆம் ஆண்டில் 135 வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு 1,346.66 மில்லியன் ரூபாய் நிதி தேவைப்படுவதாக பிரதேச சபை தகவல்கள் தெரிவிக்கின்றன. கரைச்சி பிரதேச சபையின் கீழுள்ள கிராமிய வீதிகள் கடந்த கால ஆண்டுகளாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதுடன், பல்வேறு இடங்களிலும் சந்தைக் கட்டடத்தொகுதிகள் உள்ளிட்ட பல்வேறு கட்டுமானத்தொகுதிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலை காணப்படுகின்றது.

கிராமிய வீதிகள் புனரமைப்பு, சந்தைக் கட்டடம் அமைத்தல், குடிநீர் விநியோக தட்டங்கள் மற்றும் மலசலகூடங்கள் அமைத்தல் போன்ற 135 வேலைத்திட்டங்களுக்கு 1,346.66 மில்லியன் ரூபாய் நிதி தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 71 திட்டங்கள் மாகாணத்துக்கென குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி மற்றும் மாகாண நிதி ஆகியவற்றின் மூலம் 245.61 மில்லியன் ரூபாய் செலவில் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவுள்ளது.

ஏனைய திட்டங்களுக்கான நிதி இது வரையில் நிதி மூலம் இனங்காணப்படவில்லையென சபையின் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (2)

## உருத்திரபுரம் பிரதான கால்வாயில் நீர் இன்மையால் கால்நடைகள் குடிநீருக்கு அலைந்து திரிகின்றன

கிளிநொச்சி இரணை மடு குளத்தின் கீழ் நீர்ப்பாசனம் செய்யப்படும் உருத்திரபுரம் பிரதான வாய்க்கால், தற்போது நீர்வரத்து இன்றி கடும் வரட்சி காரணமாக வரண்ட நிலையில் காணப்படுகின்றது.

இதனால்இப்பகுதியைஉள்ளடக்கியுள்ளகால்நடைவளர்ப்பாளர்கள் தமது கால்நடை களுக்கான குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்வதாக தெரிவிக்கின்றனர். தற்போது வெப்பநிலை அதிகரித்துக் காணப்படுவதால் நீர் நிலைகளில் தண்ணீர் வற்றிப் போய்க் காணப்படுவதை அடுத்து தாகத்தைத் தீர்ப்பதற்கு கால் நடைகள் அலைந்து திரிவதையும் காணக்கூடிய தாக இருப்பதாக அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அத்தோடு வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கென வழங்கப்பட்ட கால்நடைகள் மட்டுமன்றி பட்டியாக வளர்க்கப்படும் கால் நடைகளை வைத்திருப்போர் அவற்றை மேய்ச்சலுக்காக திறந்து விடும் போது அவை தாகம் தீர்ப்பதற்கு நீர் நிலைகளைத்தேடி தூர இடங்கள் செல்கையில் அவை காணாமல் போவதாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கவலைதெரிவிக்கின்றனர்.

இதேவேளை கால்நடைகள் ஆழமாகவுள்ள துரவுகளில் நீருக்காக இறங்கி மரணமடையும் நிலையும் காணப்படுகின்றது.

எனவே உரிய வாய்க்காலுக்கு இரணைமடு குளத்து நீரைத் திறந்து விட்டு கால்நடைகளின் குடி நீர்த் தேவைக்கு உதவும் வகையில் அதிகாரிகள் செயற்பட வேண்டும் என கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுக்கின்றனர். (2-254)




அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்திய சர்வதேச இந்து சகோதரத்துவ மாநாடு அண்மையில் கொழும்பில் நடைபெற்றபோது...






யாழ். வேலாயுதம் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக்கல்வி அலுவலர் ச.ஸ்ரீராமச்சந்திரன் கலந்து கொண்டிருந்தார்.









பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றபோது



அளவெட்டி பாரதி இளைஞர் கழகத்தினர் நடத்திய இரத்ததான முகாம் ஒன்று அண்மையில் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம் பெற்றது. இவ் இரத்ததான முகாமில் 31 பேர் கலந்து கொண்டு இரத்ததானம் செய்திருந்தனர். (படம்:- அளவெட்டி செய்தியாளர்)





யாழ்.லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கட்டுடை சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் மாதம் தோறும் நடைபெற்றுவரும் இலவச மருத்துவ முகாமும் இலவச மூக்குக்கண்ணாடி வழங்குதல் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றபோது...

மறுபாதி குழுமம் நடத்திய மகுடம் சஞ்சிகை வெளியீட்டுவிழா யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர்கல்லூரி மண்டபத்தில் கவிஞர் கருணாகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது...

# ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடப்போவதில்லை

## மைத்திரி மீண்டும் திட்டவட்டம்



(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலில் தான் மீண்டும் போட்டியிடப் போவதில்லை என்று ஏற்கனவே எடுத்திருக்கும் முடிவில் எவ்வித மாற்றமும் இல்லையென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது தனது அதிகாரத்துக்கு உட்பட்டதல்ல எனவும் நாடாளுமன்றத்தின் பொறுப்பு எனவும் கூறியுள்ள ஜனாதிபதி மைத்திரிபால, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு தான் நாடாளுமன்றத்துக்குப் பூரண அனுமதியை வழங்கியிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் முடிவெடுக்க வேண்டியது நாடாளுமன்றத்திலுள்ள 225 அங்கத்தவர் களின் பொறுப்பு எனவும், தான் ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடப்போவதில்லையென ஏற்கனவே எடுத்த முடிவில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார். (இ-5)

# நடு வீதியில் காரில் தீ

காலி-மஹமோதர பகுதியில் கார் ஒன்று நடுவீதியில் தீப்பற்றி எரிந்துள்ளது.

நேற்று காலை கொழும்பிலிருந்து காலி நோக்கி சென்ற கார் பாதையை விட்டு விலகி மரத்தில் மோதிய வேளை தீப்பற்றி எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தினை அடுத்து தங்கெதர-வெளிவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதான குறித்த காரின் சாரதி பலத்த காயங்களுக்கு உள்ளாகி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் காலி பொலிஸஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

# 2 ஆயிரம் மெகா வோட்ஸ் (MW) அதிக மின்சாரத்தை கொள்வனவு செய்ய மின்சாரசபை முனைப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் பாரிய மின்சார விநியோகத் தட்டுப்பாடு ஏற்பட்டால் அதனை தடுக்கும் முகமாக அதிகளவான மின்சாரத்தை கொள்வனவு செய்ய இலங்கை மின்சாரசபை தயாராகிறது.

இதன்படி தற்போது கொள்வனவு செய்யப்பட்டு வரும் 2 ஆயிரத்து 300 மெகா வோட்ஸ் மின்சாரத்தை 4600 மெகா வோட்ஸாக அதிகரிக்க சபை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான பணிப்புரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் மின்சார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டின் மின்சார தேவை கடந்த மூன்று மாதங்கள் பாரியளவில் அதிகரித்திருந்ததாக இலங்கை மின்சாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.

சாதாரணமாக 4 முதல் 5 வீத மின்சார தேவையே அவசியம் என்று கருதப்பட்டது. எனினும் கடந்த மூன்று மாதங்களில் அது 7 முதல் 8 வீதம் வரை அதிகரித்திருந்ததாக சபை குறிப்பிட்டுள்ளது. (இ-5)

# இலங்கையில் தாய்-சேய் மரண வீதத்தில் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் தாய்-சேய் மரணவீதம் 32 வீதமாக குறைவடைந்திருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த சுட்டியை பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் நாட்டின் சுகாதாரத் துறையில் காணப்பட்டுள்ள மற்றுமொரு வெற்றியாகும் என்று இலங்கை சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கர்ப்ப காலப்பகுதியில் அல்லது மகப்பேற்றின் பின்னரான 42 நாட்களுக்குள் அல்லது சிகிச்சை தொடர்பில் பெண்ணொருவர் உயிரிழப்பது தாய்-சேய் மரணமாகக் கருதப்படுகின்றது.

இதேவேளை நாட்டின் தாய்-சேய் மரணம் தொடர்பான ஆய்வு மற்றும் அது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர்களுள் பெரும்பாலானோர் குறைந்த வருமானத்தினைப் பெறும் குடும்ப பின்னணியை கொண்டவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன். இயற்கையான நோய், இருதய நோய் உள்ளிட்ட பல காரணங்களால் தாய்சேய் மரணங்கள் இடம்பெறுகின்றதாகவும் வைத்திய ஆலோசனை களை உரிய முறையில் கடைப் பிடிக்காமையே இதற்கு காரணமாக விளங்குவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-5)

# புத்தாண்டை முன்னிட்டு 4500 பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு சொந்த இடங்களுக்கு செல்லும் மக்களின் நலன்கருதி இலங்கை போக்குவரத்து சபை 4500 பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளது.

இந்த சேவை இந்த வாரத்தில் நடைமுறைப்படுத்தபபடும் என இலங்கை போககுவரத்து சபையின் பிரதி பொது முகாமையாளர் ராஜா குணதிலக தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 8ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை கொழும்பிலிருந்து இந்த விசேட பேருந்துச் சேவை ஆரம்பமாகும் எனவும், மீண்டும் 16, 17ஆம் திகதிகளில் வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து கொழும்பை நோக்கி குறித்த பேருந்து வண்டிகள் சேவையில் ஈடு படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துளளார். இதேவேளை தெறகு அதி வேக வீதியில் பயணிக்கும் மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க எதிர்பார்த்திருப்பதாகவும் பிரதி பொதுமுகாமையாளர் தெரிவித்தார். (இ-5)

# வெளிநாட்டு நிகழ்ச்சிகளுக்கு உள்நாட்டில் வரி

வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்பட்டு உள்நாட்டு இலத்திரனியல் ஊடகங்களில் ஒளிபரப்புச் செய்யப்படும் நிகழ்ச்சிகளுக்கு வரி அறவீடு செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் விளம்பரங்கள் போன்றனவற்றுக்கே இவ்வாறு வரி விதிக்கப்பட உள்ளது.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் இந்த வரி ரத்து செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் மீளவும் இந்த வரியை அறிமுகம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தின் போது வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படும் ஆங்கில தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் விளம்பரங்களுக்கு அறவீடு செய்யப்படும் வரி இரத்து செய்யப்படுவதாக அறிவித்திருந்தார்.

எனினும் மீளவும் இந்த வரியை அறவீடு செய்யத் திட்டமிட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிப்பதாக கொழும்பு வார இறுதிப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

# செய்தித்துளிகள்

## இலங்கைக்கு 150 படகுகளை வழங்குவதற்கு இந்தியா திட்டம்

இலங்கையில் தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு மாகாணத்தை சேர்ந்த 300 மீனவர்களுக்கு ரூ.4.5 கோடி ரூபாய் மதிப்பிலான 150 படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை இந்தியா வழங்க திட்டமிட்டுள்ளது.

மேலும் இலங்கை நீர்வள மேம்பாட்டுத்துறை அமைச்சகத்தின் ஆலோசனையுடன் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. இதற்கான ஒப்பந்தம், இலங்கைக்கான இந்தியத் தூதர் வை.கே.சின்ஹா மற்றும் இலங்கை மீன் பண்ணைகள், நீர்வள மேம்பாட்டுத் துறையின் செயலர் எம்.எம்.ஆர்., இடையே கையெழுத்தானதாகவும் இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

## மட்டக்களப்பில் கஞ்சா கலந்த பாபுலுடன் இந்தியர். கைதானார்

கஞ்சா கலந்த பாபுலை தன்னகத்தே வைத்திருந்த இந்தியர் ஒருவர் மட்டக்களப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். இவர் வசம் இருந்து 300 மில்லி கிராம் கஞ்சா கலந்த பாபுல் மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். மேலும், எதிர்வரும் 18ஆம் திகதி அவரை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## கைகலப்பில் மூவர் காயம்; ஐவர் கைது

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜின்னா நகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற கைகலப்பின்போது, படுகாயமடைந்த மூன்று பேர் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காணி சம்பந்தமாகவே இந்தக் கைலப்பு ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் ஐந்து பேரை நேற்று ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்து தடுப்புக்காவலில் வைத்திருப்பதுடன், இவர்களை இன்று திங்கட்கிழமை மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## இலங்கையில் நடந்த தாக்குதலில் நான்கு சீனப்பணியாளர்கள் காயம்

உள்ளூர்ப் பணியாளர்களுக்கும் சீனப் பணி யாளர்களுக்கும் இடையில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோதலில் சீனப் பணியாளர்கள் நால்வர் காயமடைந்து, அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலாந்தோட்டைப் பகுதியில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றின் நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்களுக்கிடையிலேயே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

சிறு காயங்களுக்கு உள்ளானவர்கள், வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

# விண்ணப்பங்கள் கோரல்

இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவை III ஆம் தரத்திற்கான பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கான தகைமையுடையவர்களைத் தெரிவு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணபத்தினை 2016.05.02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம். 1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து முன்று வருட சூழல் உருவாக்கம் (Build Environment)தொடர்பான பட்டத்துடன் குறித்த பட்டப் பின் படிப்பு டிப்ளோமாவை கற்றிருத்தல் வேண்டும். அல்லது

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து 5 வருட கட்டடக் கலையியல் பட்டத்தினைப் பெற்றிருத்தல் அல்லது பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து 3 வருட சூழல் உருவாக்கம் தொடர்பான பட்டத்துடன் குறித்த துறையில் 5 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல்.


வயதெல்லை:- விண்ணபத்தினைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 21 வயதை விட குறையாமலும் 35 வயதை விட மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு 2016 04.01 வெளியான வர்த்தமானி பத்திரிகையை பார்வையிடஙீவும். (இ

## மீண்டும் ஜனாதிபதியாக மஹமடோ

# நைஜீரியாவில் அமைச்சர்கள் அனைவரும் இராஜினாமா?

நைஜீரியா நாட்டு ஜனாதிபதியை தேர்வு செய்ய கடந்த மார்ச் மாதம் நடத்தப்பட்ட தேர்தலில் முன்னாள் ஜனாதிபதியான மஹமடோ ஐசோபோ மீண்டும் வெற்றி பெற்றார். அடுத்த ஐந்தாண்டுகளுக்கான அந்நாட்டின் ஜனாதிபதியாக நேற்று முன்தினம் அவர் பதவி ஏற்றார்.



பதவி ஏற்புக்கு பின்னர் நைஜீரியாவின் புதிய பிரதமராக பிரிஜி ரஃபினி என்பவரை அவர் நியமித்தார்.

இந்த பதவியை ஏற்றுக்கொண்ட பிரிஜி ரஃபினியிடம் அமைச்சர்கள் அனைவரும் தங்களது இராஜினாமா கடிதங்களை அளித்தனர்.

அவர்களின் இராஜினாமா ஏற்கப்பட்டதாகவும், புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படும்வரை அந்தந்த துறையை சேர்ந்த தலைமை செயலாளர்கள் வழக்கமான அலுவல்களை கவனிப்பார்கள் எனவும் ஜனாதிபதி மாளிகை அறிவித்துள்ளது.

புதிய அமைச்சர்களை பிரதமர் தேர்வு செய்த பின்னர் அந்த பெயர் பட்டியல் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும். அவர் ஒப்புதல் அளித்தவுடன் புதிய அமைச்சரவையிலும் பொறுப்பேற்றுக் கொள்ளும் என உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-5)

# மகனை துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற தந்தை

அமெரிக்காவை சேர்ந்த நபர் ஒரு தனது மகனை துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியை சேர்ந்தவர் ஷிகதா கலில் ஈஸா. இவர் தனது மனைவி மற்றும் மகன் அமீருடன் வசித்து வருகிறார். கடந்த செவ்வாயன்று அவர்களது வீட்டில் துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக அயல் வீட்டினர் அளித்த தகவலையடுத்து பொலிஸார் அங்கு வந்துள்ளனர்.

பின்னர் வீட்டினுள் சென்று பார்த்த போது அமீர் துப்பாக்கி யால் சுடப்பட்டும் அவரது தாயார் கத்தியால் குத்தப்பட்டும் மரணமடைந்து கிடந்தனர்

இதையடுத்து கையில் துப்பாக்கியுடன் இருந்த கலில் ஈஸாவை பொலிஸார் கைது செய்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணையில் ஈஸா முன்னரே தனது மகனை கொலை செய்து விடுவேன் என்று மிரட்டியுள்ளார். எனவே இது திட்டமிட்டு நடத்தப்பட்ட கொலை என்றும் சட்டத்தரணி வாதிட்டார்.


இதனையடுத்து ஈஸாவை சிறையில் அடைக்க உத்தரவிட்ட நீதிபதி இது தொடர்பான விசாரணையை ஏப்ரல் 11 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இந்நிலையில் அமீரின் தாயார் மரணத்துக்கு யார் காரணம் என்று தெரியவில்லை என்றும் அது தொடர்பான விசாரணை நடைபெற்று வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில், தனது தாயாரை அமீர் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார். பின்னர் தனது தந்தையை கொலை செய்ய முயன்ற போது கலில் ஈஸா துப்பாக்கி யால் அமீரை சுட்டுள்ளார் என்றும் முதற்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-5)

# உலகத்தைப் பற்றி எதுவுமே தெரியாது

## ஒபாமா வேதனை



வெளிநாட்டு கொள்கைகள் குறித்து டொனால்டு டிரம்புக்கு எதுவுமே தெரியவில்லை என ஜனாதிபதி பராக் ஒபாமா வேதனை தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளராக போட்டியிட விரும்பும் டொனால்டு டிரம்ப் வெளியுறவு கொள்கைகள் குறித்து விமர்சனம் செய்து வருகிறார்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த ஒபாமா, அறிக்கைகளாக விட்டுக் கொண்டிருக்கும் அந்த நபருக்கு (டிரம்ப்) அயல்நாட்டுக் கொள்கை அல்லது அணுக்கொள்கை, அல்லது கொரியா அல்லது உலகத்தைப் பற்றியே கூட எதுவும் தெரியாது என்று கூறுகின்றனர்.

அமெரிக்க தேர்தலை உலக நாடுகள் கவனித்து வருகின்றன. நாம் என்ன செய்கிறோம் என்பது பிற நாடுகளுக்கு மிகவும் முக்கியத்தும் வாய்ந்தது.


அமெரிக்க ஜனாதிபதிக்கு உலகத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது தெரியும் என்பதை அவர்கள் புரிந்து வைத்துள்ளனர்.

எனவே வெளிநாட்டு கொள்கைகள் உலக நாடுகளின் பாதுகாப்பு மற்றும் வளம் போன்றவற்றையும் பாதுகாக்கும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

குறிப்பாக ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளுடனான அமெரிக்காவின் வெளிநாட்டு கொள்கைகள் இரண்டாம் உலகப்போரில் அமெரிக்க ஆண்கள் மற்றும் பெண்கள் செய்த தியாகங்களின் மீது கட்டமைக்கப்பட்டது.

எனவே இத்தகைய முக்கியத்துவங்களை அறியாத ஒருவர் ஜனாதிபதி பதவிக்கு விரும்பத் தகாதவர் என்று தெரிவித்துள்ளார். (இ-5)

# பயங்கர நிலநடுக்கம்



**வடக்கு அவுஸ்திரேலியா பகுதியில் இருந்து சுமார் 1350 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள தீவுக்கூட்டங்களை கொண்ட வனுவாட்டு நாட்டில் நேற்று முற்பகல் ரிக்டர் அளவில் 7.2 அலகிலான பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.**

இங்குள்ள சான்ட்டோ தீவில் இருந்து 151 கிலோமீற்றர் தூரத்தில் பூமியின் அடியில் சுமார் 35 கிலோமீற்றர் ஆழத்தில் உருவான நிலநடுக்கத்தையடுத்து சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 12 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட வனுவாட்டு நாட்டில் சுமார் மூன்று இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் நாடுகளிடம் கடந்த 1980ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற வனுவாட்டுவை தாக்கிய நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் பொருளிழப்பு தொடர்பான உடனடி தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை. (இ-5)




# மரண தண்டனை எண்ணிக்கையை அதிகரிக்க சவுதி அரசு திட்டம்

மரண தண்டனை எண்ணிக்கையை அதிகரிக்க திட்டமிட்டுள்ள சவுதி அரசின் நடவடிக்கையை பிரித்தானியா தடுத்து நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

சவுதி அரேபியாவில் குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனையாக தலையை துண்டித்து மரண தண்டனை வழங்கும் வழக்கம் அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது.

இந்த ஆண்டு இதுவரை 82 குற்றவாளிகளுக்கு சவுதி ஷரியா நீதிமன்றம் மரண தண்டனை விதித்து அதை நிறைவேற்றியும் உள்ளது.

இந்த நிலையில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மரண தண்டனை வழங்கப்படும் எண்ணிக்கையை அதிகரிக்க சவுதி அரேபியா திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதனையடுத்து மனித உரிமைகள் அமைப்பு இந்த விவகாரம் தொடர்பாக பிரித்தானியா அரசு தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

தற்போதுள்ள நிலை நீடித்தால் ஆண்டு இறுதியில் சவுதி அரேபியா 320இற்கும் மேற்பட்டவர்களுக்கு மரண தண்டனையை நிறைவேற்றும் வாய்ப்பு இருப்பதாக கருதப்படுகிறது.

இது கடந்த 2015 ஆம் ஆண்டை விடவும் இருமடங்கு என ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த ஆண்டு மட்டும் 158 நபர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு அது 88 என்ற எண்ணிக்கையிலேயே இருந்துள்ளது.

அண்மையில் சவுதி அரேபியா சென்று வந்துள்ள பாதுகாப்புச் செயலாளர் மைக்கேல் ஃபால்லான் இந்த விவகாரம் தொடர்பாக அங்குள்ள உள்விவகாரத்துறை அமைச்சிடம் விவாதித்தார் என்பது குறித்து தகவல்கள் வெளியாகவில்லை எனவும் கூறப்படுகிறது.

ஆனால் பாதுகாப்புச் செயலாளர் மைக்கேல் ஃபால்லான் பிராந்திய பிரச்சினைகள் குறித்து சவுதி அரசிடம் கலந்தாலோசித்து வந்துள்ளதாக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதலில் சோமாலிய தீவிரவாதத் தலைவன் உயிரிழப்பு

(வோஷங்டன்)

ஆபிரிக்க நாடான சோமாலியாவில் அல் ஷபாப் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

தலைநகர் மொகாடிசுவில் வாழும் அமெரிக்கர்களுக்கு எதிராக அல் ஷபாப் தீவிரவாத இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஹசன் அலி தூரே சதி திட்டம் தீட்டியதாக தெரிகிறது.

இதையடுத்து அவரை குறி வைத்து கொல்வதற்காக ஆளில்லா விமானம் மூலம் அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் அவர் கொல்லப்பட்டு விட்டதாக நம்பப்படுகிறது.

இது தொடர்பாக அமெரிக்க இராணுவ தலைமையகம் பென்டகன் கூறுகையில், "ஆளில்லா விமான தாக்குதலில் தூரே கொல்லப்பட்டு விட்டாரா என்பது குறித்து ஆய்வு செய்வோம். அவர் அல் ஷபாப் தீவிரவாத இயக்கத்தின் பாதுகாப்பு, உளவுத்துறை தலைவராக திகழ்ந்து வந்தார். 3 அமெரிக்க குடிமக்களை கொல் வதற்கு அவர் சதித்திட்டம் தீட்டி வந்தார்.

2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம், மொகாடிசு விமான நிலையத்தில் நடந்த தாக்குதல்களில் ஆபிரிக்க யூனியன் வீரர்களும், அமெரிக்க குடிமக்களும் கொல்லப்பட்டதில் அவருக்கு முக்கிய பங்கு உண்டு. கடந்த ஆண்டு மார்ச் 27ஆம் திகதி மொகாடிசுவில் நடந்த ஹோட்டல் தாக்குதலில் அவருக்கு நேரடி பங்கு உண்டு" என குறிப்பிட்டுள்ளது. (இ-5)

## விஜயகாந்துக்கு தகுதியில்லையாம்

### உதயகுமார் பேச்சு



முதல்வர் ஆகும் தகுதி விஜயகாந்துக்கு இல்லை என பச்சை தமிழகம் கட்சியின் தலைவர் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளரும், பச்சை தமிழகம் கட்சியின் தலைவருமான உதயகுமார் நேற்று நெல்லையில் நிருபர்களிடம் பேட்டியளித்துள்ளார்.

அப்போது பேசிய அவர், தமிழக சட்டசபை தேர்தலில் ராதாபுரம் தொகுதியில் பச்சை தமிழகம் கட்சி சார்பாக நான் போட்டியிடுகிறேன்.

எனது தேர்தல் அறிக்கையை ஒப்பந்த அடிப்படையில் தயாரித்து வெளியிட்டுள்ளேன். நானும், வாக்காளர்களும் கையெழுத்திட்ட ஒப்பந்தம் வைத்து கொள்வோம்.

அதன்படி எனது தேர்தல் அறிக்கையில் யாரிடமும் கையூட்டு வாங்க மாட்டேன். எம்.எல்.ஏ. பதவி முடியும் வரை ஒவ்வொரு நிதியாண்டிலும் எனது சொத்துக் கணக்கையும், வருமான கணக்கையும் தெரிவிப்பேன் என தெரிவித்துள்ளேன்.

கூடங்குளம் அணு உலைக்கு எதிராக மக்களோடு மக்களாக நின்று போராடிய பொது சேகவர்களாகிய எங்களை பொதுமக்கள் வெற்றி பெற செய்ய வேண்டும். நாங்கள் தேர்தலில். யாரிடமும் ஆதரவு கேட்கவில்லை. எங்களுக்கு யாரும் ஆதரவு தரவில்லை. ஒரு சில சிறிய அமைப்புகள் மட்டும் ஆதரவு தெரிவித்துள்ளன. மக்கள் நல கூட்டணியில் பச்சை தமிழகம் கை கோர்ப்பதில் எந்த தவறும் இல்லை.

ஆனால் அந்த கூட்டணியில் உள்ள விஜயகாந்த் மக்கள் அச்சத்தை போக்கி விட்டு கூடங்குளம் அணு உலை திட்டத்தை செயற்படுத்தலாம் என தெரிவித்தார்.

எனவே விஜயகாந்தை நாங்கள் எந்த காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ள முடியாது. அவருக்கு முதல்வராகும் தகுதி இல்லை.

விஜயகாந்த் இல்லாமல் மக்கள் நல கூட்டணி எங்களை ஆதரித்தால் ஏற்றுக்கொள்வோம் என தெரிவித்துள்ளார். (இ-5)

பாரதச் செய்தி

# மதுவிலக்கைப் பற்றி பேசுவதும் எழுதுவதும் எப்படி குற்றமாகும்

## கருணாநிதி கேள்வி



(டில்லி)

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 47ஆவது பிரிவிலேயே "அரசு மது விலக்கைக் கொண்டு வரக் கட்டாயம் முயற்சி செய்ய வேண்டும்" என்று கட்டளையிடப்பட்டுள்ள நிலையில் மதுவிலக்கைப் பற்றிப் பேசுவதும், எழுதுவதும் எப்படி குற்றமாகும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.**

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில்,

மதுவிலக்குக்காகப் போராடி வரும் மக்கள் அதிகாரம் என்ற அமைப்பு, திருச்சியில் கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதியன்று நடத்திய மது ஒழிப்பு மாநாட்டில் பேசியவர்களில், அந்த அமைப்பின் மாநில அமைப்பாளர் சி.ராஜு, நிர்வாகக் குழு உறுப்பினர் காளியப்பன், டேவிட் ராஜ், சென்னை ஆனந்தியம்மாள், மக்கள் உரிமைப் பாதுகாப்பு மைய ஒருங்கிணைப்புக் குழு சட்டத்தரணி வாஞ்சிநாதன், தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் தனசேகரன் ஆகிய ஆறு பேர் மீது, மாநாடு நடந்து முடிந்து ஒரு மாதத்துக்குப் பின் மார்ச் மாதம் 26ஆம் திகதியன்று அதிமுக அரசு தேச துரோக வழக்குப் பதிவு செய்துள்ளது.

மதுவினால் ஏற்படும் தீமைகளையும், சமூக அவலங்களையும், அதிமுக ஆட்சியின் சட்ட விரோதச் செயல்களையும் கண்டித்து ஊருக்கு ஊர் பாடல்கள் மூலமாக கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் பிரசாரம் செய்த மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் பாடகர் கோவனை திருச்சியில் பொலிஸார் கைது செய்து, அவர் மீது தேச துரோக வழக்குப் பதிவு செய்தார்கள். பாடகர் கோவன் கூட கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் என்னைச் சந்தித்து நன்றி தெரிவித்தார்.

தற்போது அடுத்த கட்டமாக மது ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் மீது தேசத் துரோக வழக்குப் பதிவு செய்துள்ளார்கள். ஜனநாயக ரீதியான கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளை ஜெயலலிதா ஆட்சியில் எப்படியெல்லாம் நெரிக்கப்படுகிறது என்பதற்கு இதை விட வேறு உதாரணம் தேவையில்லை.

மதுவால் குடும்பத்திலும், சமூகத்திலும் ஏற்படும் கடுமையான பாதிப்புகள் பற்றி திருச்சியில் நடைபெற்ற மது ஒழிப்பு மாநாட்டில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது. மேலும் மதுவால் நேரடியாகவும், மறைமுகமாகவும் பல கொடுமைகளை அனுபவித்தவர்களை அழைத்து வந்து, நெஞ்சை உலுக்கிடும் அவர்களுடைய அனுபவங்களைப் பேச வைத்துள்ளார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## தி.மு.க. பேரம் பேசியது; வைகோ மீண்டும் சர்ச்சை



தே.மு.தி.க. பேரம் பேசவில்லை, தி.மு.க. பேரம் பேசியது உண்மை தான் என வைகோ மீண்டும் கூறியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு வைகோ நேற்றுக்காலை அளித்த பேட்டியில், விஜயகாந்த் ஊழல் செய்பவராக இருந்தால் இத்தனை கோடி பணம் பேரம் பேசப்பட்டது என்று அத்தனை பத்திரிகைகளிலும் எழுதப்பட்டிருக்கும்.

பணம் பேசப்பட்டது. தொகுதி கொடுப்போம் என்று சொல்லப்பட்டது. இது உண்மை. திரும்பவும் சொல்கிறேன், இன்னொரு வழக்கு போடட்டும். ஆனால் அதை நிராகரிக்க கூடிய துணிச்சல் இருக்கிறதே, அந்த நேர்மை அவரிடம் (விஜயகாந்த்) இருக்கிறதே.

பேரம் அவர்கள் (தே.மு.தி.க.) பேசவில்லை. கொடுப்பதற்கு அவர்கள் (தி.மு.க.) முன் வந்தார்கள் என்று எனக்கு தெரியும். அந்த மாதிரியான ஆசாபாசங்களுக்கு அவர் (விஜயகாந்த்) இடம் கொடுக்கவில்லை. ஆகவே, இது தி.மு.கவை தூக்கி பிடிக்க நினைக்கிறவர்களுடைய முயற்சி. நாங்கள் நாட்டு நலனில் அக்கறை உள்ளவர்கள், நாங்கள் யோக்கியர்கள். நாங்கள் நேர்மையானவர்கள்.

இதுதான் சரி என்று முடிவெடுத்து சேர்ந்திருக்கிறபோது, இப்படியொரு சூழல் தமிழக அரசியலில் 50 ஆண்டுகளில் ஏற்படவில்லையே என்கிறபோது, வாழ்த்தி வரவேற்கிறவர்கள் வரவேற்கிறார்கள் நல்ல உள்ளம் கொண்டவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## அலிபாபாவும் 40 திருடர்களும் போல ஜெயலலிதாவும் 33 அமைச்சர்களும்

### பழ.கருப்பையா அதிரடி



ஜெயலலிதா தனக்கு நிகராக யாரும் இருக்கக்கூடாது என நினைத்து செயற்படுகிறார் என பழ.கருப்பையா பேசியுள்ளார். திராவிடர் கழகம் சார்பில், சட்டப்பேரவைத்தேர்தலும் வாக்காளர் கடமையும் என்ற தலைப்பில் சிறப்பு பொதுக்கூட்டம், சென்னை வேப்பேரியில்நடந்துள்ளது.

அதிமுகவில் இருந்து விலகிய முன்னாள் எம்.எல்.ஏ. பழ.கருப்பையா பேசுகையில், இன்றைக்கு நாளுக்கொரு கட்சி உருவாகிறது.

கட்சி தொடங்கிய மறுநாளே முதல்வர் என கூறிக்கொண்டு பலர் திரிகின்றனர். இதை நினைத்தால் வருத்தமாக உள்ளது. இந்த நாட்டில் 40, 50 ஆண்டுகளாக சிறு சிறு அளவில் ஊழல் நடந்து வந்தது. ஆனால் அதை ஒருமுகப்படுத்தி தனக்கே அனைத்தும் என குவித்துக் கொண்டிருக்கிறார் ஜெயலலிதா.

அலிபாபாவும் 40 திருடர்களும் என்பதுபோல் ஜெயலலிதாவும் 33 அமைச்சர்களும் உள்ளனர்.

பிறருக்கு நற்பெயர் கிடைத்து விடக்கூடாது என்பதற்காக அண்ணா நூலகத்தை முடக்க நினைத்தார். மதுரவாயல் பறக்கும் சாலை திட்டத்தை பாதியில் நிறுத்தினார்.

குற்றம் செய்தவர்கள் விடுதலையாவதும், குற்றம் குறித்து புகார் செய்தவர்கள் தண்டிக்கப்படுவதும் இந்த ஆட்சியில்தான்.

தனக்கு நிகராக யாரும் இருக்கக்கூடாது என நினைத்து செயற்படுகிறார் ஜெயலலிதா. இதுதான் இந்த ஆட்சியின் சீரழிவுக்கும், வீழ்ச்சிக்கும் காரணம் என தெரிவித்தார். (இ-5)

# சவுதியில் இந்திய தொழிலாளர்களுடன் அமர்ந்து உணவருந்திய பிரதமர் மோடி



இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அரசுமுறைப் பயணமாக நேற்று முன்தினம் சவுதி அரேபியாவுக்கு சென்றுள்ளார்.

சவுதி அரேபியாவில் சுமார் 30 இலட்சம் இந்தியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களில் 90 சதவீதம் பேர் உடலுழைப்பை மட்டுமே நம்பி கூலி தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர்.

இந்நிலையில், சவுதி அரேபியா தலைநகர் ரியாத்தில் தனியார் கட்டுமான நிறுவனத்தில் வேலை செய்யும் இந்திய தொழிலாளர்களின் வசிப்பிடத்துக்கு சென்ற மோடி, அங்கு அவர்களிடையே உரையாற்றியுள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் உருவாக்கியுள்ள 'மதத்' என்னும் இணையத்தளத்தின் மூலம் வெளிநாடுகளில் வாழும் இந்திய தொழிலாளர்கள் தங்களது குறைகளை தெரிவிக்கலாம் என்று மோடி குறிப்பிட்டுள்ளார்.

மேலும், உங்களது அயராத கடின உழைப்பும், இங்கு நீங்கள் சிந்தும் வியர்வைத் துளிகளும் தான் என்னை இங்கு வரவழைத்தது.

அன்பு சகோதரர்களே! உங்கள் குடும்பத்தில் ஒருவனாகவே நான் உணர்கிறேன் என்று கூறியுள்ளார்.

பின்னர், இந்திய தொழிலாளர்களுடன் அமர்ந்து மோடி உணவு அருந்தியுள்ளார்.

மேலும், பிரதமர் தங்களுடன் அமர்ந்து உணவு சாப்பிட்டதால் சில இந்திய தொழிலாளர்கள், அவரது எளிமையை வியந்து பாராட்டியுள்ளனர். (இ-5)

# சட்டவிரோதமாக தங்கியிருந்த இலங்கையர் தமிழகத்தில் கைது

சட்டவிரோதமாக இந்தியாவில் தங்கியிருந்த இலங்கையர் ஒருவர் தமிழகத்தின் மண்டபம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கடல் மார்க்கமாக இந்தியாவுக்கு சென்று தங்கியிருந்த போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக, இந்திய ஊடகச் செய்திகள் குறிப்பிடுகின்றன.


மேலும், சந்தேகநபர் கண்டியைச் சேர்ந்த 38 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

இவர் 2011ஆம் ஆண்டு இந்தியாவுக்கு சென்றுள்ளார். இந்த நிலையில் இவரது விசா காலாவதியாகியமையால் கடல் மார்க்கமாக இலங்கைக்கு வர முற்பட்டுள்ளதாக கூறிப்பிடப்படுகிறது.

இவர் வசம் இருந்து 15 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக மண்டபம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக, இந்திய ஊடகச் செய்திகள் குறிப்பிடுகின்றன. (இ-5)

# சிகிரியாவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் விதமாக வேலைத்திட்டங்கள்



சீகிரியாவைப் பார்வையிடுவதற்காக வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக விசேட வேலைத் திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக மத்திய கலாசார நிதியம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் இரண்டு வ்ாரத்திற்குள் அது நடை முறைப்படுத்தப்படும் என்று அதன் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பிரிசாந்த குணவர்தன தெரிவித்தாா்.

ஞாபகர்த்தப் பொருட்களை கொள்வனவு செய்தல், வெவ் வேறு கலாசாரங்களை பார்வையிடுதல் உள்ளிட்ட பல விஷேடத்துவங்கள் அந்த வேலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவர்தெரிவித்தார்.

அதன்படி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை மேலும் ஈர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் இந்த வேலைத் திட்டங்கள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது. (இ-5)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனாா் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 40 | 80 | 60 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 65 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 80 | 80-120 | 120 | 80 |
| தக்காளி | 60 | .80 | 30 | 30 | 80 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 35 | 40 | 60 | 40 |
| கோவா | 70 | 80 | 70 | 80 | 100 | 40 |
| கரட் | 120 | 120 | 70 | 80-200 | 120 | 80 |
| பூசணி | 40 | 30 | 20 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 30 | 80 | 50 | 80 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 35 | 50 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 70 | 50-80 | 100 | 50 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 65 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 140 | 120 | 110 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 50 | 80 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 55 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 90 | 80 | 100 | 100 |
| லீக்ஸ் | 140 | 100 | 100 | 120 | 160 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 50 | 80 | 120 | 70 |
| கறிமிளகாய் | 120 | 100 | 50 | 200 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 380 | 400 | 400 | 700 |
| போஞ்சி | 120 | 200 | 90 | 120 | 160 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 30 | 40 | 60 | 60 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 20 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 140 | 150 | 190 | 200 | 300 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-40 | 50 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 150 | 200 | 110 | 140 | 120 | 160 |
| வெங்காயப்பூ | 250 | 150 | — | — | — | — |
| முள்ளங்கி | 50 | 40 | 25 | 40 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 50 | 50 | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## ராஜீவ்காந்திக்குப் பிரபாகரன் கடிதம் 146

அமைதிப்படை எங்கள் மீது போர் தொடுப்பது என்பதைக் கண்ட எங்களது மக்கள் அதிர்ந்து போயிருக்கிறார்கள். எங்கள் மீது தொடுக்கப்பட்ட போரானது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் விதிகளுக்கு முரணானதும் ஓர் அத்துமீறலுமாகும். இது எங்களது கருத்து மட்டுமல்ல தமிழின மக்களின் ஒட்டுமொத்த கருத்துமாகும்.

இந்த யுத்தத்தில் அமைதிப் படையுடன் சிங்களப்படையும் சேர்ந்து கொண்டதால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். இதனால் மனித இழப்பு என்பது பெருமளவில் இருக்கும். இத்தகைய அழிவுகளுக்கும் விளைவுகளுக்கும் இந்தியாவே பொறுப்பு ஏற்க வேண்டும்.

### போர் நிறுத்தம்

இந்நிலையில் அமைதியை நிலைநாட்டவும் நன் நம்பிக்கையை வளர்க்கவும் இந்தியாவுடன் எங்களது உறவுகள் மேம்பாடடையவும் உடனடியாகப் போர் நிறுத்தம் அறிவிக்கும் படி வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு கடிதத்தில் பிரபாகரன் கூறியிருந்தார்.

### இரண்டாவது கடிதம்

இந்தக் கடிதத்துக்கு ராஜீவ் காந்தியிடமிருந்து பதில் வராததால் 14.10.1987 அன்று மீண்டும் ஒரு கடிதத்தைப் பிரபாகரன் எழுதினார்.

அதில் அவர் கூறியிருந்ததாவது,

நாளுக்கு நாள் தமிழீழத்தில் மக்கள் கொல்லப்படுவதுடன் அழிவுகளும் அதிகரித்து வரும் நிலையில் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

இதுநாள்வரை நடந்த போரில் 150 பேருக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 500 பேருக்கு மேல் காயம் அடைந்திருக்கிறார்கள். இயந்திரத் துப்பாக்கி மூலம் சுடுதல், ரொக்கெட் குண்டு வீச்சு, வான் மூலமாகக் குண்டு வீச்சுக்களில் இந்த இழப்புக்களும் விளைவுகளும் ஏற்பட்டுள்ளன. எங்களது இயக்கத்தின் போராளிகள் நூற்றுக் கணக்கில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். தற்சமயம் எங்களால் 18 அமைதிப்படை வீரர்கள் கைது செய்யப்பட்டு எங்களது காவலில் வைக்கப்பட்டுள்ளனா்.

### அகதிகள்

இந்த திடீர்ப் போர் காரணமாக ஏராளமான மக்கள் முதன் முதலாகத் தங்கள் வாழ்விடத்திலேயே அகதிகளாக ஆக்கப்பட்டுள்ளனர்.

தொடர் ஊரடங்கு அமலினால் உணவுக்கும் குடிநீருக்கும் மற்றும் தங்கள் தேவைகளுக்கும் அவர்கள் ஆலாய்ப் பறக்கின்றார்கள். இந்திய அமைதிப்படை எங்களது தாயகத்துக்கு அமைதியையும் சுமூகச் சூழலையும் ஏற்படுத்துவதற்காக வந்திறங்கி எங்கள் மீது கொடுமைகளை இழைத்து வருகின்றது. இது முற்றிலும் மனித நேயத்துக்கு அப்பாற்பட்ட செயலாகும்.

அமைதிப்படையின் வருகையும் அதன் நோக்கமும் மக்களுக்கு இயல்பு வாழ்வைத் தருவது என்பது; ஆனால் நடப்பதோ வேறு. இதுவரை நடைபெற்றுள்ள அத்துமீறல்களுக்கும் அழிவுகளுக்குமான உண்மை விவரம் அறிய உண்மை அறியும் குழுவொன்றுக்கு உடனடியாக ஏற்பாடு செய்யுங்கள்.

துரதிஷ்டவசமாக எங்கள் மீது யுத்தம் தொடுக்கப்பட்டு விட்டது. அதுவும் கிழக்கு மாகாணத்தில் இராணுவ வீரர்கள் மீது ஒரு தாக்குதலை நடத்தி அந்தப் பழியை விடுதலைப்புலிகள் மீது சுமத்தியிருக்கிறார்கள். கிழக்கில் நடைபெறும் இன மோதல்களில் எங்களது இயக்கத்துக்கு எந்தப் பங்கும் இல்லை. ஆனால் எங்கள் மீது பழி சுமத்தப்படுகிறது.

இவ்வாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

### இறுதிக்கடிதம்

இக்கடிதத்துக்கும் பதில் வரவில்லை.

எனவே 1988 ஜனவரி 13 ஆம் திகதி இறுதியாக ஒரு கடிதத்தை ராஜீவ்காந்திக்கு பிரபாகரன் எழுதினார்.

அதில் அவர் கூறியிருந்ததாவது,

ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முன் டில்லியில் தாங்கள் எங்களிடம் கூறியபடி இலங்கையில் உள்ள தமிழ்ப் பகுதியில் இடைக்கால அரசு அமைக்கும் படி கேட்டுக் கொள்கிறோம். இதற்காக எங்களிடம் உள்ள ஆயுதங்களை கீழே போடவும் தயாராக இருக்கின்றோம்.

இடைக்கால அரசு என்கிற திட்டம் தற்போது பாதியில் உள்ளது. விடுதலைப்புலிகள் அமைப்புக்கு தாங்கள் அளித்த வாக்குப்படி இவ்வாய்ப்பு வழங்கப்படும் பட்சத்தில் மாநில அளவிலான உரிமைகளுக்கும் சுய நிர்ணய ஆட்சிக்கும் உரியவற்றை திட்டமிட முடியும். தமிழீழ மக்களின் துயர் போக்க அவர்கள் தங்களது வாழ்விடத்தில் வசிக்க போர் நிறுத்தம் அறிவித்து பேச்சுவார்த்தை தொடங்க வேண்டும் என்றும் இதற்கான அமைதிச் சூழலை உருவாக்கும் படியும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்டவாறு பிரபாகரன் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு பதில் வராததால் கடிதம் எழுதுவதை பிரபாகரன் நிறுத்திக் கொண்டார்.




(தொடரும்)

# கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு குற்றச் செயல்கள் அம்பலம்

(கொழும்பு)

**கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு குற்றச் செயல்கள் பற்றிய விபரங்கள் அம்பலப்படுத்தப்பட்டு வருவதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் மற்றும் 11 பாடசாலை மாணவர்கள் கொலை செய்யப்பட்ட சம்பங்களுடன் தொடர்புடைய கடற்படை புலனாய்வு பிரிவு உத்தியோகத்தர் ஒருவர் மேலும் பல குற்றச் செயல்கள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தி வருவதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரவிராஜ் கொலை வழக்கின் அரச தரப்பு சாட்சியாளராக இந்த புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர் மாறியுள்ளார்.

ரவிராஜ் கொலை மற்றும் பாடசாலை மாணவர்கள் கொலை தொடர்பில் தகவல்களை வழங்கிய காரணத்தினால் இந்த கடற்படை உத்தியோகத்தர் மீது உயர் கடற்படை அதிகாரிகள் கடும் கோபமடைந்துள்ளனர்.

இதனால் குறித்த உத்தியோகத்தருக்கு கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொலை மிரட்டல் காரணமாக இந்த உத்தியோகத்தர் வெளிநாடு ஒன்றின் இராஜதந்திர அலுவலகத்தில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும், வீடியோ கான்பிரன்ஸ் தொழில்நுட்பத்தின் மூலம் கடற்படையினர் மேற்கொண்ட குற்றச் செயல்கள் பற்றிய விபரங்களை அம்பலப்படுத்த உள்ளதாகவும் கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது. (இ-5)

# நாமல் ராஜபக்ஷ மீது குற்றச்சாட்டு



நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, இளம் அரசியல்வாதி ஒருவரை அச்சுறுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஹிக்கடுவையில் இடம் பெற்ற திருமண விருந்து ஒன்றின்போதே இந்த சம்பவம் நிகழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணியின் உறுப்பினர் திஸார குணசிங்கவுக்கே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது

திஸார குணசிங்க, காலஞ்சென்ற அரசியல்வாதி நந்த குணசிங்கவின் மகனாவார்.

இந்தநிலையில் திஸார, நடைமுறை அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதாக குறிப்பிட்ட நாமல் தாம் மீண்டும் ஆட்சியமைக்கும் போது தற்போதைய அரசாங்கத்தில் உள்ளவர்களை தண்டிக்கப் போவதாக எச்சரித்துள்ளார். (இ-5)

# பிரதமர் ரணிலை விமர்சித்த டிலானை தண்டிக்க வேண்டும்

## ஐ.தே.க.கோரிக்கை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை மருதானை ரவுடி என்று குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேராவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருவதற்கு சிரேஷ்ட அமைச்சர்கள், ஜனாதிபதியை சந்திக்கவுள்ளனர்.

அண்மையில் இடம் பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டம் ஒன்றில் வைத்து டிலான் பெரேரா, ரணில் விக்கிரமசிங்கவை விமர்சனத்துக்கு உள்ளாக்கினார்.

நாடாளுமன்றத்தில் அவரின் செயற்பாடுகள் குறித்தே இந்த விமர்சனம் வெளியிடப்பட்டது.

இந்தநிலையில் அமைச்சர் வஜிர அபேவர்த்தன உட்பட்ட அமைச்சர்கள் ஜனாதிபதியை சந்தித்து இந்த விடயம் குறித்து பேசவுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவின் மீது இந்த விமர்சனத்தை வெளியிட்டவர் தமது தேர்தல் தொகுதியிலேயே தோல்விகண்ட நிலையில் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டவராவார்.




எனினும் ரணில் விக்கிரமசிங்க,- நான்காவது தடவையாக பிரதமர் பதவியை வகிப்பவர் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி தரப்பினர், டிலான் பெரேரா மீது எதிர் விமர்சனத்தை தெரிவித்துள்ளனர். (இ-5)

## முன்னாள் அமைச்சர் பந்துல

# அமைச்சர் துமிந்தவுக்கெதிராக ஜனாதிபதியிடம் முறைப்பாடு





ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்கவுக்கு எதிராக முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

ஹோமாகமதொகுதிஅமைப்பாளர் பொறுப்புக்களிலிருந்து தம்மை நீக்கியமை குறித்து பந்துல குணவர்தன முறைப்பாடு செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஹோமாகம தொகுதியன் அமைப்பாளராக பந்துல குணவர்தன கடமையாற்றி வருகின்றார். எனினும் இந்தப் பொறுப்புகளிலிருந்து தம்மை கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க நீக்கியுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

நீண்டகாலமாக ஹோமாகம தொகுதி அமைப்பாளராக கடமையாற்றியுள்ளதாகவும் கட்சியின் மத்திய மற்றும் நிறைவேற்றுக் குழுக்களில் தொடர்ச்சியாக அங்கம் வகித்து கட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச்சென்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஓர் நிலையில் மாகாணசபை உறுப்பினர் காமினி திலகசிறிக்கு ஹோமாகம தொகுதியின் சில பொறுப்புக்களை வழங்கியமை தம்மை உதாசீனம் செய்வதற்கு நிகரானதாகும் என அவர் தெரிவித்தார்.

இந்த முறைப்பாடு குறித்து கவனம் செலுத்தி கட்சி யின் பொதுச் செயலாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பந்துல குணவர்தன, ஜனாதிபதியிடம்எழுத்து மூலம் கோரியுள்ளார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### போர்மாலிட்டி பார்க்க வேண்டுமா?

நான் போர்மாலிட்டி பார்ப்பதில்லை என்று சொல் லிக் கொள்பவர்கள் பலர். ஆனால் உண்மையில் இவ ர்கள் நடைமுறையில் அதைப் பின்பற்றுபவர்களாக இருக்கமாட்டார்கள்.

அப்படிச் சொல்லுகிற ஒருவர் உங்கள் வட்டாரத்தில் இருந்தால் அவர்களிடம் அப்படியே நடந்து பாருங்கள்.மெல்ல அவர்கள் உங்களிடம் இருந்து ஒதுங்கத் தொடங்குவார்கள்.

உதாரணமாக -அத்தகைய நபர் உங்கள் வீட்டுக்கு வருகிறார் என்று வைத்துக் கொள்வோம்.வாருங்கள் என வாய் திறந்து சொல்லாமல் இருந்து பாருங்கள். மறுநாள் உங்களைப் பார்த்தால் முறுக்கிக் கொண்டு போய் விடுவார்.அல்லது மீண்டும் வரமாட்டார்.

உங்களால் விரும்பப்படாத நபர் ஒருவர் உங்கள் வீட்டிற்கு வந்தால் ஏன் எதிரியே வந்தாலுங்கூட வாருங்கள் என்று கூறி வரவேற்க வேண்டும் என்பது சம்பிரதாயமான விடயங்களில் ஒன்று. இதைப் பின்பற்றித் தான் ஆக வேண்டும்.

சம்பிரதாயங்கள் மேற்போக்கில் போலியாகவும் செயற்கையாகவும் தோன்றினாலும் அவை அனைத்தும் உள்ளர்த்தம் கொண்டவை. உள்ளங்களை ஒன்று படச் செய்பவை.வொருள் வொதிந்தவை.

இது போர்மாலிட்டி என்னும் கடலினுள் அமுந்திக் கிடைக்கும் உலகம். ஆனால் அப்படியொன்றும்இல்லைஎன்றுபச்சைப்பொய்யை வெட்கமின்றி பறை சாற்றிக் கொண்டிருக்கும்.

வாருங்கள், உட்காருங்கள், சாப்பிடுங்கள், உங்களுக்கு நான் தொந்தரவு கொடுத்து விட்டேனா, உங்கள் உதவி மறுக்க முடியாதது, மிக்க நன்றி என்றெல்லாம் எந்தெந்தச் சூழ்நிலையில் எந்தெந்தச் சொற்கள் தேவைப்படினும் அவற்றையெல்லாம் சொல்லி சுற்றியிருப்பவர்களை மகிழ்ச்சியிலும் இக்கட்டிலும் ஆழ்த்திக்கொண்டே இருக்கத்தான் வேண்டும். இந்த உலகை வெல்லும் வழி அதுதான்.

அந்த வகையில் சொல்ல வேண்டுமானால்- பழகும் விதத்தில் மற்றையவர்கள் விரும்பும் வகையில் நடந்து கொள்வதே போர்மாலிட்டி அல்லது சம்பிரதாயமாகும்.

அதேநேரத்தில்- நீங்கள் போர்மாலிட்டி பார்க்கக்கூடாது என மற்றையவர்கள் விரும்புகிறார்கள். இது என்ன நியாயம்? என நீங்கள் வினாத் தொடுக்கலாம். நியாயமில்லைதான். இருந்தாலும் அதை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கமுடியுமா? சொல்ல முடியுமென்றாலும் அதை மற்றையவர்கள் தான் அதை விரும்புவார்களா?

பல விடயங்களில் உலகம் ஒரு வழிப் பாதையாக இருக்கிறது. இதைப்புரிந்து கொண்டு செயற்படாதவர்கள் ஒதுக்கப்படுவார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

# சிறுவர் அரங்கம்

1400

## பிறவிப்பகை நட்பாக முடியாது!

ஒரு ஊருக்கு வெளியே அரச மரம் ஒன்று இருந்தது. அதை இருப்பிடமாகக் கொண்டு, கீரிப்பிள்ளை, எலி, பூனை, ஆந்தை ஆகிய நான்கும் வசித்து வந்தன. கீரியும், எலியும், மரத்தின் வேரின் கீழ் உள்ள வளைக்குள் தனித் தனியாக வசித்தன.

பூனை, மரத்தின் அடியில் உள்ள பெரிய பொந்தில் வசித்தது. ஆந்தை, மரத்தின் உச்சியில் இருந்த ஒரு பொந்தில் வசித்தது. எலியின் நிலைமை தான் பரிதாபத்துக்கு உரியதாக இருந்தது. ஆந்தை, பூனை, கீரி இவற்றின் கண்களில் படாமல், எலி தினமும் இரை தேட வேண்டியதாயிருந்தது.

ஆந்தைக்குப் பகலில் கண் தெரியாது. அதனால், இரவில் தான் இரை தேடுவது வழக்கம். பூனையோ, பகலிலும், இரவிலும், அருகில் இருந்த வயலுக்குச் சென்று பயமின்றி இரைதேடித் தின்று வந்தது.

பூனையைப் பிடிப்பதற்காக, வேடன் ஒருவன், வயலுக்குப் போகும் வழியில், கண்ணி வைத்து விட்டுப் போனான். வழக்கம் போல், எலிகளைப் பிடிக்கச் சென்ற பூனை, வேடன் போட்டிருந்த கண்ணியில் சிக்கிக் கொண்டது. தப்பிக்க வழி இல்லை.

சிறிது நேரத்தில், பதுங்கிப் பதுங்கி, திருட்டுத்தனமாக இரை தேடி வந்த எலி, கண்ணியில் சிக்கிக் கொண்டிருந்த பூனையைக் கண்டு துள்ளிக் குதித்தது. அப்போது, ஆந்தையும், கீரியும் சேர்நது சென்றபோது, பூனை கண்ணியில் சிக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தன. இனி, பூனையைப் பற்றிய பயம் இல்லை எலியைப் பிடித்து விடலாம் என்று எண்ணின.



தன்னைக் குறி வைத்து ஆந்தையும், கீரியும் வருவதைக் கண்டு எ்லி நடுங்கியது. கீரிக்கும், ஆந்தைகக்கும் பயந்து எலி, வழியை மாற்றிக் கொண்டு, பூனையின் பக்கம் சென்றது. பூனையின் கால்கள் கண்ணியில் சிக்கிக் கொண்டிருந்த போதிலும், ஒரே அறையில் கொன்று விடுமே என்று கலக்க முற்று, கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தது.

பூனையின் அருகில் சென்று, நீ என் எதிரியாக இருந்தாலும் கூட, இப்போது நீ சிக்கிப் பரிதவிப்பதைக் காணும்போது, எனக்கு இரக்கம் மேலிடுகிறது. என் பற்களால் இந்தக் கண்ணியை கடித்து உனனை விடுவித்து விடுகிறேன். ஆனால், நீ விடுபட்டதும், உன்னால எனக்கு ஆபத்து நேரிடுமோ என்று தான் பயமாக இருக்கிறது, என்றது எலி.

எலியே! நாம் எதிரிகளான போதிலும், இப்போது என்னை நீவிடுவித்து விட்டால், உனக்கு நண்பனாக இருப்பேன். ஆபத்தான வேளையில் என் உயிரைக் காப்பாற்றிய உனனைஒருபோதும ஒனறுமசெய்ய மாட்டேன் என்று உறுதி அளிக்கிறேன், என்று கெஞ்சியது பூனை.

உடனே எலி, பூனையை நெருங்கியது. அதைக் கண்ட கீரியும், ஆந்தையும், எலியைப் பிடிக்க வழியில்லாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றுவிட்டன.

எலியிடம், சீக்கிரம் பற்களால் கணணியை அறுத்துவிடு, விடியப் போகிறது வேடன்வந்து விடுவானே! என்று அவசரப்படுத்தியது பூனை.

கண்ணிகளை கத்தரிப்பது போல், பற்களை வைத்து பாசாங்கு செய்து, வேடனின் வருகைக் காகக் காத்துக் கொண்டிருந்தது எலி.

கண்ணியிலிருந்து சீக்கிரமே விடுபட்டு விடுவோம் என்ற நம்பிக்கையோடு இருந்தது பூனை.

பொழுது விடிந்தது. வேடனும் வந்து கொண்டிருந்தான்.

அவனைக் கண்ட எலி, கண்ணியின் சுருக்கை இறுகச் செய்து விட்டு, வேடனுக்கு அஞ்சி ஓடத் தொடங்கியது.

எலியிடம், இது நியாயமா? உதவி புரிவதாகக் கூறி, நம்பிக்கை மோசம் செய்து விட்டாயே? என்று பரிதாபமாகக் கேட்டது பூனை.

விரோதிகள் கூட, சந்தர்ப்பம் காரணமாக நண்பர்களாக ஆவார்கள். ஆனால், அத்தகைய நட்பு, உண்மையான நட்பாகவும், வெகு காலத்துக்கு நீடிக்கக் கூடியதாகவும் இருக்காது! என்று கூறி, ஒரே ஓட்டமாக ஓடியது எலி.

பிறவியிலேயே பகைவர்களாக இருப்பவர்கள்நட்புக்கொள்ள முடியாது.

## 04.2016 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1814 - நெப்போலியன் முதற்தடவையாக முடி துறந்தான்.
- 1850 - இங்கிலாந்தின் கொட்டன்ஹாம் என்ற ஊரின் பெரும் பகுதி தீயில் அழிந்தது.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப்போர்: கூட்டுப் படைகள வேர்ஜினியாவின் ரிச்மண்ட் நகரைக் கைப்பறறிய அடுத்த நாள் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் கூட்டமைப்பின் தலைநகருக்கு விஜயம் செய்தார்.
- 1866 - ரஷ்யாவின் இரண்டாம் அலெக்சாண்டர் கீவ் நகரில் கொலை முயற்சி ஒன்றில் இருந்து தப்பித்தான்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணு வத்தினர் ஹங்கேரியை தமது கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வந்தனர்.
- 1949 - பன்னிரண்டு நாடுகள் ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் ஒருங்கிணைந்து நேட்டோ அமைப்பை உருவாக்கின.
- 1968 - அமெரிக்காவின் கறுப்பினத் தலைவர் மார்ட்டின லூதர் கிங் டென்னிசி மாநிலத்தில் கொலை செய்யப்பட்டார்.
- 1968 - அப்பல்லோ 6 விண்கப்பல் நாசாவினால் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1969 - டெண்டன் கூலி என்பவர் உலகின் முதலாவது தற்காலிக செயற்கை இதயத்தைப் பொருத்தினார்.
- 1973 - உலக வர்த்தக மையம் நியூயோர்க் நகரில் நிறுவப்பட்டது.
- 1975 - மைக்ரோசாப்ட் நிறுவனம் பில் கேட்ஸ் மற்றும போல் அலென் ஆகியோரின் கூட்டில் தொடங் கப்பட்டது.
- 1975 - வியட்நாம் போர்: சாய்கோன் நகரில் அநாதைக் குழந்தைகளை ஏற்றிச் சென்ற அமெரிக்க விமானம் வீழ்ந்து நொருங்கியதில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.
- 1976 - இளவரசர் நொறொடோம் சிஹானூக் கம்போ டியா தலைவர் பதவியில் இருந்து விலகினார். இவர் பின்னர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.
- 1979 - பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி சுல்பிக்கார் அலி பூட்டோ தூக்கிலிடப்பட்டார்.
- 1983 - சலேஞ்சர் விண்ணோடம் தனது முதலாவது விண்வெளிப் பயணத்தை ஆரம்பித்தது.
- 1999 - பாப்பரசரின் வேண்டுகோளையும் புறக்கணிதது நேட்டோ வான்படைகள் உயிர்த்த ஞாயிறு நாளன்று முன்னாள் யூகொஸ்லாவியா மீது குண்டுகளை வீசின.
- 2002 - அங்கோலாவின் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் அங்கோலா அரசும் யுனிட்டா போராளிகளும் அமைதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

**பிறப்புகள்**

- 1855 - மனோன்மணியம் பெ. சுந்தரம்பிள்ளை, தமிழ் அறிஞர். (இ.1897)
- 1976 - சிம்ரன், இந்தியத் திரைப்பட நடிகை.

**இறப்புகள்**

- 1841 - வில்லியம் ஹென்றி ஹாரிசன், ஐக்கிய அமெரிக்காவின் 9ஆவது ஜனாதிபதி (பி. 1773)
- 1929 - கார்ல் பென்ஸ், பெறறோலினால் இயங்கும் ஊர் தியைக் கண்டுபிடித்த ஜேர்மனிய வாகனப் பொறியியலாளர், (பி. 1844)
- 1968 - மார்டடின் லூதர் கிங், கறுப்பினத் தலைவர். (பி. 1929)
- 1979 - சுல்பிகார் அலி பூட்டோ, பாகிஸ்தான் ஜனாதிபதி (பி. 1928)
- 1990 - கி. இலட்சுமண ஐயர், ஈழத்து எழுத்தாளர்



## கறுப்புக் காந்தி மார்ட்டின் லூதர் கிங்

மார்ட்டின் லூதர் கிங் 1929, ஜனவரி 15 ஆம் திகதி அமெரிக்காவில் அட்லாண்டா நகரில் பிறந்தார். இவருடைய தந்தை மார்ட்டின் லூதர். தாயார் அல்பெர்டா ஆவார். ஐக்கிய அமெரிக்காவில் சமூக உரிமைக்காக போராடிய மாபெரும் ஆபிரிக்க-அமெரிக்கத் தலைவர். அவர் காந்தியவழியில் சிறந்த வன்முறையற்ற அறப்போராட்டத்தைப் பயன்படுத்தியவர். மார்ட்டின் லூதர் கிங் அமெரிக்க முற்போக்கு வரலாற்றில் ஒரு தேசிய சின்னமாகக் கருதப்படுகிறார். பாப்திசுதப் போதகராக இருந்த கிங் தனது இளமைக்காலத்திலேயே சமூக உரிமைவாதியாக இனங்காணப்பட்டார். 1962 இல் அலபாமாவில் நடந்த வன்முறையற்ற வழியில் இவர் நடத்திய அறப்போராட்டம் பலரது கவனத்தை ஈர்த்ததுடன் தேசிய அளவில் புகழ்பெற்றது.


கிங் 1963 இல் "வேலையும் சுதந்திரமும் வேண்டி வோஷிங்டனுக்கு பேரணி" என்ற மிகப் பெரிய பேரணிக்கு ஏற்பாடு செய்தார். பெருமளவில் மக்கள் திரண்டனர். இங்குதான் அவர் தனது "எனக்கொரு கனவு" என்ற புகழ்பெற்ற சொற்பொழிவினை ஆற்றினார். அமெரிக்க வரலாற்றில் இது ஒரு மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியது. இதன் பிறகு அமெரிக்க உளவுத்துறை ஒக்டோபர் 14, 1964 ஆம் ஆண்டில் வன்முறையற்ற வகையில் நிறவெறிக்கெதிராக பாடுபட்டதற்காக மார்ட்டின் லூதர் கிங்குக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

காந்தியடிகளின் அறப்போராட்ட வழியில் ஈர்க்கப்பட்ட மார்ட்டின் லூதர் கிங் டென்னசியில் 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் 4-ஆம் திகதி சொற்பொழிவிற்காக ஒரு விடுதியில் தங்கியிருந்தபொழுது ஒரு வெள்ளையினத் தீவிரவாதி லூதர் கிங்கை துப்பாக்கியால் சுட்டான். அந்த இடத்திலேயே அவர் உயிர் பிரிந்தது. அப்போது அவருக்கு வயது 39.

மார்ட்டின் லூதர் கிங்கின் மறைவிற்கு உலகமே கண்ணீர் அஞ்சலி செலுத்தியது. அவரை கறுப்பு காந்தி என்றும் அழைத்தது. மார்ட்டின் லூதர் கிங் நினைவாக அமெரிக்காவில் ஜனவரி மாதத்தின் மூன்றாவது திங்கட்கிழமை "மார்ட்டின் லூதர் கிங் தினம்" என்று அனுசரிக்கப்பட்டு அன்று அமெரிக்கா முழுவதும் விடுமுறை நாளாக கடைப்பிடிக்கப்படுகிறது.

# குடுமிச் சண்டை அவசியமில்லை

## மு.கா.தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு



இன்று சிலர் பத்திரிகைகளில் அறிக்கைப் போர் நடத்திக் கொண்டுள்ளனர். நான் மௌனமாக இருந்து கொணடு கட்சியை கச்சிதமாக வழி நடத்திக் கொண்டு போவதற்கு எண்ணுகின்றேன்.

இன்று ஏற்பட்டுள்ள சவால்களை விடவும் பெரிய சவால்களை சந்தித்துள்ளோம். இன்று ஏற்பட்டுள்ள குடுமிச் சண்டையில் நான் ஈடுபட வேண்டிய அவசியமில்லை.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் பூர்த்தியாக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களை திறந்து வைத்த தன் பின்னர் உரையாற்றும் போது தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நசீர் தலைமையில் நடை பெற்ற இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,கடந்த மாகாண சபைத் தேர்தலில் நாங்கள் தனித்துப் போட்டியிட்டு சம்மாந்துறைத் தொகுதியை வெற்றி கொண்டோம். அந்தத் தேர்தலில் எங்களுக்குரிய மாகாண சபை முதலமைச்சர் பதவியை சற்று தாமதப்படுத்தி கிழக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொண் டோம்.

அந்த அமைச்சர் பதவி மூலமாக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு பல அபிவிருத்திகளை செய்ய முடிந்துள்ளன. இந்த வைத்திய சாலை மட்டுமன்றி சூழவுள்ள ஏனைய வைத்தியசாலைகளும் அபிவிருத்திகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் ஏற் பட்டுள்ளதையிட்டு அனைவரும் சந்தோஷப்படுகின்றோம்.

அடுத்த ஐந்தாம் திகதி தொடக்கம் பாராளுமன்றம் ஒரு அரசியல் யாப்பு சபையாக செயற்படவுள்ளது. வெகு விரைவிலே இந்த நாட்டிற்கு புதிய அரசியல் யாப்பை உருவாக்குகின்ற் கட்டம் ஆரம்பமாக இருக்குகின்றது. இதன் போது எமது சமூகம் சார்ந்த விடயங்களையும், உரிமைகளையும் பெற்றுக் கொள்வதற்குரிய முயற்சிகளில் ஈடுபடவுள்ளோம்.

இரண்டு பிரதான கட்சிகளின் ஆட்சி நாட்டிலே இருக்கின்ற சூழலில் நாட்டில் பொருளாதார நெருக்கடி கொஞ்சம் உக்கிரம் அடைகின்ற பின் புலத்தில் நாங்கள் நீண்ட காலமாக அடைவதற்கு காத்திருந்த அபிவிருத்திகளை சாதித்துக் கொள்வதற்கான தயார்படுத்தல்களை செய்து கொண்டு வந்துள்ளோம். என்னுடைய அமைச்சின் ஊடாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சம்மாந்துறை வங்களாவடியிலுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கலமுனை வரையிலான நீர் வழங்கல் திட்டத்தை மேம்படுத்துவதற்கான புதிய குழாய் பதிக்கும் வேலைகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

எதிர்வரும் நோன்பு காலத்திற்கு முன்னதாக இப்பிரதேசத்தில் நிலவும் நீர் வழங்கல் பிரச்சினைகளை முழுமையாக தீர்க்கலாம் என்ற நம்பிக்கையோடு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகின்றோம்.

மேலும், நெய்னாகாடு போன்ற பிரதேசங்களுக்கும் விரைவாக நீர் வழங்க நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இதற்கு அடித்தளமிட்ட தலைவர் அஷ்ரப்பை நினைவு கூருகின்றோம்.

சம்மாந்துறை பிரதேசத்தினை நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யவுள்ளோம். சம்மாந்துறைக்கு சந்தைக் கட்டடத் தொகுதி, பேருந்து நிலையம், நகர சபையாக மாற்றுவதற்கும் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகின்றோம்.

கல்முனை நகரை அபிவிருத்தி செய்யும்போது அதனோடு இணைந்தவாறு சம்மாந்துறையும் அபிவிருத்தி செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## லசந்தவை கொலை செய்தவர்களே உபாலியை தாக்கியதாக சந்தேகம்

(கொழும்பு)

சண்டேலீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்தவர்களுக்கும் உபாலி நியூஸ் பேப்பர் ஸின்ரவிர பத்திரிகையின் ஆசிரியர் உபாலி தென்னக்கோன் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு ஜனவரியில், லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்ட சில நாட்களில் உபாலி தென்னக்கோன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தநிலையில் தற்போது அமெரிக்காவில் இருக்கும் தென்னக்கோன் குறித்த சந்தேகம் தொடர்பில் நடத்தப்படும் விசாரணைகளுக்கு தாம் ஒத்துழைப்பு வழங்க தயார் என்று சீஐடியினருக்கு அறிவித்துள்ளார். (இ-5)

## மதுபோதையில் சாரத்தியம் மூவருக்கு அபராதத்துடன் சமூகப் பணிக்கு உத்தரவு

மது போதையில் வாகனம் செலுத்திய மூவருக்கு அபராதம் விதித்ததுடன் சமுதாயப் பணியில் ஈடுபடுமாறும் பருத்தித்துறைம ாவட்ட நீபதி பெருமாள் சிவகுமார் உத்தரவிட்டார்.

மது போதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பில் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூவரைக் கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தினர்.நெல்லியடி வரணியைச் சேர்ந்த இருவருக்குத் தலா 11500 ரூபா அபராதமும் 100 மணித்தியாலசமுதாயப் பணியும் கரணவாயைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு 15000 ரூபா அபராதமும் 50 மணித்தியால சமுதாயப் பணியில் ஈடுபடுமாறும் உத்தரவிட்டார். (இ-60)


## நூல்களின் வெளியீடும் பாராட்டு விழாவும்

நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ்,பேராசிரியர் திருமதி.மனோன்மணிசண்முகதாஸ் ஆகியோரின்நூல்களின் வெளியீடும் பாராட்டு விழாவும் நெல்லியடி தடங்கன் புளியடி நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் எதிர்வரும் 12 திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஓய்வு நிலைப் பேராசிரியர் மாணிக்கம் நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (இ

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 682

Search for people, places and things Nagendram Home


கமலா




தர்சினி



மது




ராதி




நிசாந்தன்




சாமினி

என் செல்ல குட்டி என்ன பண்ணிகிட்டு இருக்கு 6:09 PM

உன் செல்ல குட்டி தூங்கி கிட்டு இருக்கு 6:10 PM

ஐ என் செல்ல குட்டி பொய் சொல்லுது... தூங்கி கிட்டு எப்படி Massage பண்ண முடியும் 6:11 PM

Massage பண்ணறது உன் செல்ல குட்டியோட புருஷன்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# SLEAS, SLAS போட்டித் தேர்வுகளுக்கு தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான வழிகாட்டிக் குறிப்புக்கள்

# பாடசாலை நிர்வாகம் தொடர்பான சம்பவக் கற்கை பகுதி-2

## இலங்கையில் கல்வி தொடர்பான சட்டங்கள்:

அரசியல் அமைப்புச் சட்டம்.

● அரசியலமைப்புச்சட்டம்- அடிப படை உரிமைகள் அத்தியாயம்.(III)

(அ) சித்திரவதைக்கு உள்ளாகாதிருக்கும் சுதந்திரம். (மாணவர்களுக்கு உடல் ரீதியாக தண்டனை வழங்கப்பட்டமையால் ஆசிரியர்களுக்கு இவ்விதியின் கீழ தண்டனை வழங்கபபட்டது.

(ஆ) பாரபட்சத்திற்குள்ளாகாதிருக்கும் உரிமை.

● அத்தியாயம்.(IV) மொழி பற்றிய ஏற்பாடுகள்

(அ) அரசியலமைப்பிற்கான 13வது திருத்தம் 16வது திருத்தம் என்பனவற்றின் அரச கரும மொழி பற்றிய ஏற்பாடுகள் பற்றி தெரிந்திருத்தல் வேண்டும்.

(ஆ) அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் உத்தரவாதப் படுத்தப்பட்ட உரிமைகள் மற்றுமஅத்தியாயம்.(IV)ல் கூறப்பட்டுள்ள மொழியுரிமை அரசாங்க நிர்வாக அதிகாரத்தை பிரயோகித்து மீறப்படுமாயின் அதற்கெதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட உறுப்புரை 126(1),(2) ஏற்பாடுகளை கொண்டுள்ளன.

● அரசியலமைப்புச் சடடதின் அத்தியாயம் IX பகிரங்கச் சேவை பற்றி விளக்க மளிக்கின்றது.

(அ) அரச அலுவலர் எனப்படுபவர் யார் ? அவர்களின் நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு, ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு யார் பொறுப்பு என்பதை அறிந்து கொள்ள உதவும்.

● அரசாங்க பாடசாலை அதிபர்கள் அரசாங்க நிதியை பயன் படுத்துபவர்கள். அரசாங்க நிதி பயன்படுத்தப்படல் அரச தாபனங்களின் நிதிக்கணக்காயவிற்குட்படல் என்பன பற்றி அரசியல் திட்டத்தின் அத்தியாயம் XVII விளக்குகின்றது.

பொது நிதி செலவு செய்யப்படுதலை கணக்காய்விற்கு உட்படுத்தும

● அதிகாரமானது நாட்டின அடிப்படைச் சட்டமான அரசியல் சட்டத்தாலேயே கணக்காய்வின் தலைமையதிபதிக்கு வழங்கப்பட்டிருப்பதால் அப்பணிக்கு எமது ஒத்துழைபபை வழங்க வேண்டும். அது பற்றிய விளக்கம் எமக்கு அவசியமாகும்

● அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தம் பற்றி அறிந்திருத்தல் அவசியம். கல்வி என்ற வடயம மாகாணசபைகளுககு பகிரப்பட்ட விடயமாகும். குறிததொதுக கப்பட்ட பாடசாலைகள் தவிர ஏனையபாடசாலைகளின்முகாமை யை மேறபார்வை செய்தல் மாகாண சபைக்கு அதிகாரம் பகிரப்பட்ட விடயமாகும.

● மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு ஸ்தாபிக்கபபட்டுள்ளதுடன் ஆசிரியர்கள், அதிபர்கள், மறறும் கல்வியதிகாரிகளின் இடமாற்றம் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக்கபபட்டுள்ளது.

● பட்டதாரிகளை, போதனாடிப்ளோமாக்களை பெற்றோருக்கு ஆசிரியர் நியமனம் வழங்குமதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

● கல்வி அபிவிருத்திப்பணிகள்

● அரசியலமைப்பிற்கான 16ம் திருத்தம் அரசகரும மொழியின் அமுலாக்கம் பற்றி விளக்கமளிப்பதுடன் குடிமக்கள் அரச நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளுதல் மற்றும் அலுவல்கள் நடத்துதல் பற்றிய அரச அலுவலர்களின் பொறுப்புகள் கூறபபட்டுள்ளது.

அரச அலுவலர் என்ற வகை யில இவ்வரசியலமைப்புச் சட்ட எற்பாடுகளை தெரிந்திருத்தல் அவசியமாகும்.

**குற்றவியல் சட்டம்:**

● குற்றவியல் சட்டமும் ஒரு பொதுச் சட்டமாகும்.

● குற்றவியல் சட்டத்தில் தணடனைக்குரிய செயல் எனக் கூறபபட்டவையை செய்தல் தனியாளுககெதிராக செய்யப்பட்ட குற்றமாக அன்றி முழுச் சமூகத்திற்கும் எதிராக சமூக நலனுக்கு எதிராக செய்யப்பட்ட குற்றமாக கருதபபடும்.

● குற்றவியல் சட்டத்தினகீழ் குற்றமிழைத்தலால் பாதிக்கபபட்டவருக்கு நியாயம் பெற்றுக் கொடுப்பது அரசின் பணியாகும்.

● பொலிஸாரே குற்றவியல் சட்டத்தின் கீழ் பொதுவாக வழக்கு தாக்கல் செய்வர்

● ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் குற்றவியல் சட்ட விதிகளை அறிந்திருத்தல் பயனுடையது.

● மாணவர்களுக்கு உடல் ரீதியிலான தண்டனை வழங்கிய குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றுள்ளனர்.

● இலங்கையில் குற்றவியல் சட்டவிதிகள் பீனல் கோட் என அழைக்கப்படுகிறது.

● மேலும் சிறுவர் துஸ்பிரயோகம். பாலியல் துஸ்பிரயோகம என சடடம கருதும வடயங்கள் பற்றி குற்றவியல் சட்டக் கோவை விளக்க மளிபபதனால் அவற்றை கல்வித்துறையை சார்நதோர் தெரிந்திருப்பது அவசியம்.

● 16 வயதுக்கு குறைந்தோர் மீது பிரயோகிக்கப்படும் குற்றச்செயல்களுக்கான தண்டனையின அளவு அதிகமாகும்

● இலஞ்சம் வாங்குதல் நிதி மோசடி போன்ற செயல்கள் குற்ற வியல சட்டத்தின் கீழான குற்றமாகும்.

● ஆசிரியர்கள், அதிபர்கள் பொதுப்பரீட்சைப் பணிகளில் ஈடுபடுவர். பொதுப் பரிட்சை பணியில் ஈடுபடும் ஒருவர் செய்யக் கூடாதவைகள், குற்றவியல் சட்டப படி தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும் செயல்கள் யாவை என்பது பற்றி அறிந்திருத்தல் வேண்டுமம.

**சிவில் சட்டம்:**

● பாடசாலை ஆசிரியர்கள் அதிபர்கள் சிவில் சட்டத்தின் கீழும் வழக்குகளை எதிநோககலாம்.

● பணியில் உதாசீனம் மறறும் கடமையில அக்கறையில லாதிருத்தலினால் பாடசாலையில் மாணவனுக்கு எற்பட்ட இழப பிற்காக இச்சட்டங்களின் கீழ் நிவாரணம் பெற முடியும்.

**இலங்யையில் கல்விச் சட்டங்களை பின்வரும் ஆங்கில பெயர்களில் குறிப்பிடுவர்.**

● 1947ற்கு முன்னர் இயற்றப பட்டவை கட்டளைச்சட்டங்கள் (Education Ordinance)

● 1947-1972 வரையும் 1978 ற்கு பிறகும் இயற்றப்பட்ட கல்விச் சட்டங்கள் Education Acts என்றும; 1972-77 வரையிலானவை Education Laws என்றும் அழைக்கப்படுகின்றன.

● 1939ம் ஆண்டின் 31ஆம் இலக்க கட்டளைச்சட்டங்கள் இந்நாட்டின் பொதுக்கல்விக்கான அடிப படைச்சட்டமாக கருதப்படுகிறது.

● இச்சட்டம் பின்னர் பலவேறு சந்தர்ப்பங்களில் திருத்தபபட்டது. காலத்தின் தேவைக் கேற்ப பல புதிய விதிகள் உருவாக்கப்பட்டன.

● அவ்வாறு உருவாக்கப்பட்ட சட்டங்கள் வருமாறு

1. 1939 ஆம் ஆண்டின் 31, 61ம் இல. (திருத்த) கட்டளைச் சட்டங்கள்.

2. 1945ஆம் ஆண்டின் 21 ஆம இல. (திருத்த) கட்டளைச் சட்டம்.

3. 1946ஆம் ஆண்டின் 3ஆம் இல. (திருத்த) கட்டளைசசட்டம்.

4. 1947ஆம்ஆண்டின்26ஆம இல. (திருத்த) கட்டளைச்சட்டம்.

5. 1951ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கல்விச்சட்டம்

6. 1960ஆம் ஆண்டு 5ஆம இல. உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சி கல்லூரிகள் விசேட பிரமானங்கள் சட்டம.

7. 1961ஆம் ஆண்டு 8ஆம் இல. உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சி கல்லூரிகள் குறைநிரப்பு பிரமானங்கள் சட்டம.

8. 1968 25ஆம் இல. பொதுப பரீட்சைகள் சட்டம்.

9. 1979 64ஆம் இல. பிரிவேனாக் கல்விச் சட்டம்

10. 1985 ஆண்டின், 28ஆம இல. தே.க.நிறுவக சட்டம.

11. 1986 ஆண்டின், 30ஆம இல. கல்வியல் கல்லூரிகள் சட்டம.

12. 1991ஆம் ஆண்டின், 19ஆம இலக்க தேசிய கல்வி ஆணைக்குழு சட்டம்.

13. 1993ஆம் ஆண்டின், பாடசாலை அபிவிருத்திச் சபைகள் ஸ்தாபிப்பதற்கான சட்டம.

**தேர்ச்சி:**

அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளிடைத் தொடர்பு, பயிற்சி ஆகியற்றை ஒன்றிணைத்து வாழக்கையில் ஏற்படுத்தப்படும் பயிற்சி அல்லது பழக்கத்தினூடாக ஏறபடுத்தப்படும் நடத்தைக் கோலம் தேர்ச்சியாகும்.

**பொதுத் தேர்ச்சி**

**தேர்ச்சி**

**பாடம் சார்ந்த தேர்ச்சிகள**

**கலவித்துறை அபிவிருத்திச சட்டகமும் நிகழ்ச்சித் திட்டமும (ESDFP)**

ESDFP (2006 -2010) was organised under four main policy themes, these are:

2009 ஆம் ஆண்டில் கல்வித் துறை அபிவிருத்திச் சட்டமும் நிகழ்ச்சித் திட்டமும் (ESDFP) என்ற வேலைத்திட்டத்தின் கீழ், கல்வி தொடர்பாகப் பின்வரும் பிரதான துறைகள் தெரிவு செயயப்பட்டன:

1. சமவாய்ப்பு.
2. பண்புத்தரம.
3. வினைத்திறன் மிக்க வளப்பகிர்வு.
4. நல்லாட்சி (நல் ஆளுகை) (Good Governance)

பாடசாலையின் தர அபிவிருத்தியை அளவிடப்பயனபடும் குறிகாட்டிகள்:-

உள்ளிடுகை

செயல்முறை

வெளியீடு

விளைவுக் குறி காட்டி கள்

இவற்றுள் குறிகாட்டிகள் தான் பாடசாலையின் வளர்ச்சியை நேரடியாகச் சமூகத்திற்கு வெளிப்படுத்திக் காட்டுகின்றன.

குறிகாட்டிகள் என்பன இரு வகையில் அளவிடபபடுகின்றன.

1. அளவுசார் குறிகாட்டி: இவை பொதுவாக குறிப்பான இலக்கங்களில் அல்லது அளவுகளாகக் காட்டப்படுகின்றன. - எண்கள், சதவீதம் போன்றன- புலமைப்பரிசில் தேர்வில் எத்தனை மாணவர்கள் சித்தியாம்?

- க.பொ.த. (சா/த) தேர்வில் விஞ்ஞானத்தில் 15 மாணவரகள் A எடுத்திருக்கின்றனராம்?

2. பண்புசார் விருத்தி : - பணபு ரீதியான கணிப்பீட்டினைக கருதுகின்றது. அவை பின்வருமாறு:

மனப்பாங்குகள்

நம்பிக்கைகள்

நடத்தைகள்

**குறிக்கோளுடனான முகாமைத்துவம் (MBO) Management By Object:**

இது "பீற்றர் ட்ரக்கர்" என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு முகாமைத்துவக் கோட்பாடு "குறிக்கோளுடனான முகாமைத்துவம் (MBO) என்பது நனகு அமைப்பாக்கம் செய்யபபட்ட ஒழுங்கமைக்கப்பட்ட அணுகுமுறையாகும். இவ் வணுகுமுறையானது, அடையக்கூடிய இலக்குகளை மையப்படுத்துவதற்கும், கிடைக்கின்ற வளங்களில் இருநதும் ஒரு நிறுவனத்தின் குறிககோள்களையும், அங்கு கடமையாற்றும் அலுவலர்களின் குறிககோள்களையும் ஒன்றிணைத்து மிகவும் சாத்தியமான விளைவுகளைப் பெறுவதற்கான ஒரு மகாமைத்துவ முறையாகும்"


இது 6 படிமுறைகளினூடாக அடையப்படுகின்றது:

1. நிறுவனத்தின் குறிக் கோள்களை வரையறுத்தல்.
2. பணியாளர்களின் குறிக் கோள்களை வரையறுத்தல்.
3. ஆற்றுகையையையும், முன்னேற்றத்தையும் தொடர்ந்து கண்காணித்தல்.
4. ஆற்றுகையை மதிப பிடுதல்.
5. பின்னூட்டலை வழங்குதல்
6. தரங்கணிப்பை மேற கொள்ளல். (தொடரும்)

ந.அனந்தராஜ்
B.A.(Hons.) M.A
Dip-In-Edu., Dip-In-Journalism

# வெறும் கை மட்டும் போதுமா முழம் போட?

பையில் காசு இல்லை, பட்ஜெட் ரொம்பவுமே இறுக்கம், இடையில் பசிவேறு அவ்வப்போது வாட்டுகின்றது. இந்த மூன்றும் சேர்ந்தால் உங்களால் வெற்றி பெற முடியுமா? நிச்சயமாய் முடியும் என்கின்றார் "டேமண்ட் ஜான்" எனும் "தி பவர் ஆப் ப்ரோக்" புத்தகத்தை எழுதிய ஆசிரியர். கையில் நாற்பதே டொலர்களுடன் (இன்றைய மதிப்பில் கிட்டத்தட்ட ரூபாய் ஐயாயிரம்) வீட்டில் பின்னிய தொப்பிகளை விற்க ஆரம்பித்த இவர் தன்னுடைய நூதனமான விற்பனை உத்திகளால் வியாபாரத்தை பெரிய அளவில் உருவாக்கியவராவார். எல்லாவற்றையும் இழந்து நிற்பதும் ஒரு சக்தியே என்கின்றார் இவர்.




இழப்பு என்பது ஒரு மனநிலை. பணமானாலும் சரி, வாய்ப்புகள் ஆனாலும் சரி, நாம் விரும்புகின்ற ஒரு செயலைச் செய்வதற்கான அனுகூலங்களானாலும் சரி இந்த வித இழப்பு மனநிலை என்பது நம் அனைவரிடமும் நிறையவே இருக்கின்றது. நாம் புரிந்துகொள்ளாத தவறுயது என்னவென்றால். இந்த மன நிலையிலும்கூட நமக்கு கிடைக்கும் ஒருவித சக்தியிருக்கின்றது. அதிலும் இந்த இழப்பு மன நிலை நம்மை பல விடயங்களிலும் உறுதிபாடுடையவர்களாக இல்லாமல் போதிலும் நம்முடைய படைப்பாற்றலைப் பொறுத்தவரை அது தேவையான பங்களிப்பை தரவே செய்கின்றது என்கின்றார் ஆசிரியர்.

**புதுமைகளை தோற்றுவிக்கும் பண நெருக்கடி!**

என்னதான் பணம் இருந்தாலும் தொடர்ந்து நட்டம் என்று வந்தால் அது கையை விட்டு ஒட்டுமொத்தமாக வெளியேறிவிடும் வாய்ப்பு இருக்கவே செய்கின்றது. பணத்தை தொலைக்கும்காலம்என்று ஒன்று அனைவரின் வாழ்க்கையிலும் வரத்தான் செய்கின்றது. மலை அளவு பணம் இருந்தாலும் அது தொடர்ந்து உங்கள் தொழில் ரீதியான தவறான செயல்களுக்கெல்லாம் கைகொடுக்கும் என்பதற்கு உத்தரவாதம் எதுவும் இல்லை எனும் பட்சத்தில் நம் கண் முன்னே இருக்கும் பணத்தை நாம் எண்ணிப் பார்த்துக் கொள்ள மட்டுமே முடியுமே தவிர வேறெந்த ஒரு ஆறுதலையும் அது நமக்கு தராது.

நம்முடைய தொழில் ரீதியான செயல்பாட்டுக்கும், தேவைக்கும் ஏற்ற பணம் எவ்வளவு என்பதுதான் கேள்வியே தவிர நம்மிடம் எவ்வளவு பணம் இருக்கின்றது என்பது ஒருபொருட்டே இல்லை என்கின்றார் ஆசிரியர். நீங்கள் இழக்க ஒன்றும் இல்லை என்ற சூழலில் இருக்கும்போது நீங்கள் சேர்க்க மட்டுமே நிறைய வாய்ப்புகள் இருக்கின்றது. கடுமையான கஷ்டமான சூழ்நிலையில் எப்படியாவது பிழைத்துக் கிடக்க வேண்டுமே என்ற எண்ணத்தில் அநேக மனிதர்கள் சாதனைகளை செய்து விடுவார்கள். அதிக அளவில் புதுமைகள் தோன்றுவது கஷ்டத்தின் எல்லையிலேயே அன்றி வளமையின் உச்சியில் இல்லை என்பதை புரிந்து கொண்டு செயல்படுங்கள் என்கின்றார் ஆசிரியர்.

**உண்மையாக இருக்கவேண்டும்!**

ஒரு உதாரணத்தை பார்ப்போம். நீங்கள் ஒரு சோடா பிசினஸில் இருக்கின்றீர்கள். உலகத்தின் நம்பர் ஒன் சோடா உங்கள் சோடா பிராண்டுதான் என்று வைத்துக்கொள்வோம். அடுத்த 5 வருடத்திற்கான விற்பனை திட்டங்கள் எல்லாம் சிறப்பாக இருக்கின்றது. திடீரென உங்களுக்கு உங்கள் சோடாவில் மாற்றம் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் மண்டைக்குள் ஏறிவிடுகின்றது. மாத்துங்கப்பா சுவையை என்று உலகின் சிறந்த கெமிஸ்ட்களை வைத்து சுவையை மாற்ற முயற்சிகளை எடுக்கின்றீர்கள். புதிய சுவையில் தயாரித்த சோடா விற்கு மார்க்கெட்டிங், பிராண்டிங், விளம்பரங்கள் மற்றும் லோகோ என பல கோடிகள் செலவழிக்கின்றீர்கள். பணம் படுத்தும்பாடு. எல்லாவற்றிலும் சிறந்தவற்றை உங்கள் பணத்தை கொண்டு பெற முடியும். உங்கள் தயாரிப்பும் சிறப்பாகவே இருந்தாலும் அந்த புதிய சுவை வாடிக்கையாளர்களைக்கவர வேண்டுமே? அப்படி கவராவிட்டால் என்ன செய்வது. இங்கே தான்உண்மைத்தன்மையின்தேவை வருகின்றது.

வியாபாரம் என்பது நான் இதைத் தருகின்றேன். நீங்கள் அதைத்தாருங்கள் என பண்டமாற்று அல்ல. நாங்கள் (பிசினஸ்) உங்களுக்காக இருக்கின்றோம். நீங்கள் (வாடிக்கையாளர்கள்) எங்களுக்காக இருக்கின்றீர்கள் என்ற எண்ணத்துடனேயே செயல்படவேண்டும். அப்படி செயல்பட்டிருந்தால் சோடா வியாபாரத்தில் சுவையை மாற்ற நினைக்கும்போது முதலில் வாடிக்கையாளரின் எண்ணத்தையல்லவா கேட்டிருக்க வேண்டும். எதை விற்றாலும் வாடிக்கையாளர் அதை வாங்கும் வண்ணம் இருக்கவேண்டும். ஒரு உண்மைத்தன்மையுடன் செயல்படுத்தப்படும் ஒரு ஐடியா எவ்வளவு பணத்துடன் அது களமிறக்கப்படுகின்றது என்பதைப் பொறுத்து வெற்றி கொள்வதில்லை. சிறிய பணமோ, பெரும் பணமோ ஐடியா சிறந்ததாகவும் உண்மைத்தன்மையுடனும் இருக்கும்போது வெற்றிமீது வெற்றி வந்து அங்கே சேர்கின்றது என்கின்றார் ஆசிரியர்.

இங்கேதான் இழப்பின் தாக்கம் அதிகம் இருக்கின்றது. இழப்பில் இருக்கும் நீங்கள் செய்யும் எந்தக்காரியமும் உங்களுக்கும் உங்களை நம்பி இருக்கும் வாடிக்கையாளர்களுக்கும் உண்மையாய் பயன்படுவதாய் இருக்கும். உண்மைத்தன்மை இந்த இழப்புச் சூழலிலேயே அதிகமாக இருக்கும் என்பது எதனால் என்கின்றீர்களா? இழப்பின் எல்லையில் இருக்கும் நீங்கள் வாழ்வா? சாவா? என்ற கேள்வியுடன் செயல்படுவீர்கள். வாழவே நீங்கள் பிரியப்படுவீர்கள். அதனால் உங்களுக்கு நீங்கள் மிகமிக உண்மையாக இருப்பீர்கள். அதனாலேயே வாடிக்கையாளர்களுக்கும் நீங்கள் மிகமிக உண்மையாக இருந்து விடும் வாய்ப்புகள் அதிகம் என்கின்றார் ஆசிரியர்.

**பணம் எல்லாவற்றையும் அழிக்க வல்லது!**

ஏன் பல தொழில்கள் நொடித்துப் போகின்றது என்று தெரியுமா? பணமின்மை என்று நினைக்கின்றீர்களா? அதுதான் இல்லை. தொழிலில் இருக்கும் அல்லது தொழிலுக்கு கிடைக்கும் அதிக அளவிலான பணமே பல தொழில்கள் நொடித்துப் போவதற்கான வாய்ப்பை வாரி வழங்குகின்றது. அதிகப்பணம் என்பது அதிக அளவிலான பிரச்சினையையே தொழிலுக்கு தரவல்லது என்கின்றார் ஆசிரியர். தனி மனிதனானாலும் சரி, தொழிலானாலும் சரி தேவைக்கு மீறிய அதிகப் பணம் என்பது அழிவிற்கே வழிவகுக்கும் என்கின்றார் ஆசிரியர். அமெரிக்காவில் கடந்த காலத்தில் லாட்டரியில் பணம் விழுந்தவர்களில் எழுபது சதவிகிதம் பேர் அந்தப் பணத்தை ஒரேயடியாக தொலைத்து மஞ்சள் கடுதாசி கொடுத்துள்ளனர் என்ற உதாரணத்தையும் ஆசிரியர் கூறியுள்ளர்.

**துணைக்கு சரியான ஆளை வைத்துக் கொள்ளுங்கள்!**

ஸ்டீபன் கிங் எனும் வெற்றிகரமான அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் அவருடைய முதல் புத்தகம் வெளிவருவதற்கு முன்னால் எழுத்துத்தொழிலையே விட்டுவிடலாம் என்று நினைக்குமளவிற்கு நொந்துபோயிருந்தாராம். முப்பது தடவை அவருடைய கதைகள் திரும்பிவந்தபின்னர் அவர் அவருடைய கதை ஒன்றை (பின்னர் முதலாவதாக வெளிவந்த நாவலை) குப்பையில் தூக்கிப் போட்டுவிட்டாராம். அவருடைய மனைவி மிகுந்த சிரத்தையுடன் அந்தப் புத்தகத்தினை குப்பையில் இருந்து மீட்டெடுத்து தொடர்ந்து மனந்தளராமல் முயலுங்கள் என ஊக்குவித்தாராம். பின்னர் அவருடைய புத்தகங்கள் 35 கோடி பிரதிகள் விற்றது என்பது வேறு கதை என்று சொல்லும் ஆசிரியர் அதனால் கூடவே ஒரு தளராது நம்பிக்கையூட்டும் நபரை வைத்துக்கொண்டு செயல்பட வேண்டியதன் அவசியத்தை நமக்கு உணர்த்துகின்றார்.

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் ஆய்வுப்படி நூற்றில் 83 சதவிகித நபர்கள் குறிக்கோள்கள் எதுவும் வைத்துக்கொள்வதில்லை. 14 சதவிகித நபர்கள் மனதில் மட்டுமே குறிக்கோள்களை வைத்துக் கொண்டுள்ளார்கள். அதனை எழுதிக் கூட வைப்பதில்லை. மீதமிருக்கும் 3 சதவிகித நபர்களே தங்களுடைய குறிக்கோள் மற்றும் இலக்குதனை காகிதத்தில் எழுதிவைத்துக் கொண்டு அதற்காக பாடுபடவும் செய்கின்றார்கள் என்பது ஒரு புள்ளிவிவரம். சரி. அதனால் என்ன என்கின்றீர்களா? குறிக்கோள் இல்லாமல் இருப்பவர்களைவிட குறிக்கோளை மனதில் வைத்திருப்பவர்கள் பத்து மடங்கு அதிக அளவில் வெற்றிகளை குவிக்கின்றனராம். இல்லாமை என்ற நிலைவரும்போது கூட குறிக்கோள்தனை எழுதிவைத்து செயல்பட்டால் வெற்றி நிச்சயம் வீடுதேடி வரும் என்கின்றார் ஆசிரியர்.

வர்த்தக உலகம்
ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

# தொடர்ந்து 10 ஆண்டுகளாக 1-வது இடத்தில் சிங்கர்



அண்மையில் வோட்டர்ஸ் எட்ஜில் இடம்பெற்ற SLIM-Nielsen மக்கள் தெரிவு விருதுகள் நிகழ்வில் தொடர்ந்து 10-வது ஆண்டாக சிங்கர், இலங்கை மக்கள் விரும்புகின்ற மிகச் சிறந்த வர்த்தக நாமமாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் உற்பத்திகள் விற்பனையில் நாட்டில் முன்னிலை வகித்துவருகின்ற சிங்கர் நிறுவனம், மகத்தான வெற்றிகளை சம்பாதித்துக் கொண்டுள்ளது. வருடத்திற்கான இளையோர் விரும்பும் மிகச் சிறந்த வர்த்தகநாமம், நீடித்து உழைக்கும் நுகர்வோர் உற்பத்திகள் - வருடத்தின் மிகச் சிறந்த வர்த்தகநாமம் ஆகிய விருதுகளை சிங்கர் வென்றுள்ளது.

# வரிக் குறைப்புக்கு கோரிக்கை

வாகன உற்பத்தியாளர்களால் நிர்ணயிக்கப்படும் விலைமீது வரி விதிப்பை மேற்கொள்ளுமாறு துறைசார் நிபுணர்கள் இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். ஐடபிள்யூஎஸ் ஹோல்டிங்ஸ் குழுமத்தின் தலைவர். ஆர்தர் சேனநாயக்க கருத்து தெரிவிக்கையில்,

"இந்த விடயம் தொடர்பில் திறைசேரிக்கு நாம் பிரதிநிதித்துவத்தை மேற்கொள்கிறோம். புதிய வாகனங்கள் மீது வரி விதிக்கப்படும் தற்போதைய நடைமுறையை எம்மால் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது" என்றார். வாகனத்தின் அசல் விலை மீது வரி விதிப்பை மேற்கொள்வது என்பதே மிகவும் வெளிப்படையான வரி விதிப்பாக அமையும். புத்தம் புதிய வாகனங்கள் மீதான வரி விதிப்பு என்பது, உற்பத்தியாளரின் பற்றுச்சீட்டின் மீது வரி விதிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் மூலமாக உற்பத்திச் செலவீனம் தொடர்பில் வெளிப்படையான தன்மையை காண்பிக்கும். இந்த விடயம் தொடர்பில் எவரேனும் மோசடி வழி முறைகளை பின்பற்றுவார்களாயின், அவர்களுக்கு மட்டும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக அனைத்து மோட்டார் வாகன இறக்குமதியாளர்களும் பாதிப்படையும் வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படக்கூடாது என அவர் குறிப்பிட்டதுடன், இந்தியா, மலேசியா மற்றும் தென்கொரியா போன்ற நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் வாகனங்களுக்கு உற்பத்தியாளர் பற்றுச்சீட்டு மீது வரி விதிக்கப்படுகிறது. இந்நிலையில் மாற்றம் வர வேண்டும் எனும் வகையில் சேனநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

# ரூபாவின் பெறுமதி பெரும் வீழ்ச்சி

அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி இரண்டு வர்த்தக நாட்களில் 1.1 சதவீதமான சடுதியான வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

அந்த வகையில் இலங்கை மத்திய வங்கியினால் கடந்த வாரம் வெளியிடப்பட்ட நாணயமாற்று விகிதத்தின் பிரகாரம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு பெறுமதி 145.56 ரூபாவாக காணப்பட்டதுடன் அதன் விற்பனை பெறுமதி 149.54 ரூபாவாக காணப்பட்டது.

கடந்த வாரம் மார்ச் மாதம் 24 ஆம் திகதி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு பெறுமதி 143.91 ரூபாவாகவும் விற்பனை விலை 147.87 ரூபாவாகவும் காணப்பட்டது அதன்படி இரண்டு வர்த்தக நாட்களுக்குள் டொலரின் பெறுமதி 1.1 சதவீதத்தால் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக அமெரிக்க டொலரின் பெறுமதி உயர்வாக பதிவான முதல் சந்தர்ப்பம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகளும் எதிர்வரும் காலத்தில் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. அந்தவகையில் தங்கம்,எரிபொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களின் விலைகளின் எதிர்காலத்தில் மாற்றம் ஏற்படும் என துறை சார் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,092.45 | 6,083.01 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,197.30 | 3,212.01 ⇧ |
| புரள்வு (ரூபா.மில்.) | | 4,144.580 |

**விலை அசைவுகளின் அடிப்படையில்**

***உயர்வடைந்தபங்குகள்(ரூ)*** பான்சி றிசோட்ஸ்(9.00), புளூ டைமன்ட்ஸ்(0.50), பிமுத் பினான்ஸ்(63.10), சிஐஎப்எல்(0.60), அகலவத்தை(22.80).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** ஏஐஏ இன்சுரன்ஸ்(267.50), தப்ரபேன் (4.50), சிலாவ் பினான்ஸ்(16.80), ஒபிஸ் ஈகுப்மன்ட்(114.30), லங்கா டெவலப்(4.10).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 143.32 | 147.23 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 205.14 | 212.62 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 162.25 | 168.88 |
| சுவிஸ் பிராங் | 148.36 | 154.70 |
| கனேடிய டொலர் | 109.52 | 114.21 |
| அவுஸ்திரேலிய டொலர் | 108.98 | 114.18 |
| சிங்கப்பூர் டொலர் | 105.92 | 110.07 |
| ஜப்பான் யென் | 1.27 | 1.32 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.16 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.17 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# தமிழ் சினிமா வரலாறு

133

## மார்டன் தியேட்டர்ஸ் நிர்வாகப் பொறுப்பை ராமசுந்தரம் ஏற்றார்

இந்திப் படத்தைப் பார்த்து தமிழ் வசனம் எழுத ஏ.எல்.நாராயணன் அமர்த்தப்பட்டார். டைரக்ஷனில் புதிய அனுபவம் பெறுவதற்காக எடிட்டர் பாலுவை தன்னுடன் வைத்துக் கொண்டார் ராம சுந்தரம்.

**வல்லனுக்கு வல்லவன்**

ஜெமினிகணேசன், சாவித்திரி, மனோகர், அசோகன், மணிமாலா, மனோரமா, தங்கவேலு ஆகியோர் இப்படத்தில் நடித்தனர். படத்துக்கு வல்லவனுக்கு வல்லவன் என்று பெயர் சூட்டப்பட்டது.

தந்தை எப்படி குறித்த நேரத்தில் படத்தை தொடங்கி குறித்த நேரத்தில் முடிப்பாரோ அதே முறையைப் பின்பற்றினார் ராமசுந்தரம். திட்டமிட்டபடி படம் முடிவடைந்து திரையிடப்பட்டது. முதல் படத்திலேயே வெற்றி கண்டார் ராமசுந்தரம்.

தமிழ் படத்தின் வெற்றியைக் கண்ட ஆந்திர பட அதிபர் ஒருவர் இதை தெலுங்கில் தயாரித்துக் கொடுங்கள் என்று ராமசுந்தரத்திடம் கேட்டுக் கொண்டார். அதன்படி தெலுங்கில் இதை எடுத்துக் கொடுத்தார். அந்தப் படமும் வெற்றி பெற்றது.



ஜெய்சங்கர்

வல்லவனுக்கு வல்லவன் வெற்றியைத் தொடர்ந்து ஜேம்ஸ்பாண்ட் பாணியில் இரு வல்லவர்கள் என்ற படத்தை உருவாக்கினார் ராமச்சுந்தரம்.

இந்தப் படத்தின் ஹீரோவாக ஜெய்சங்கர் நடித்தார். மாடர்ன் தியேட்டர்ஸ் படத்தில் அவர் நடிப்பது இதுவே முதல் தடவை.

இந்தப் படமும் வெற்றி பெற்றது. இதன்பின் பேனிக் இன் பாங்காக் என்ற ஆங்கில கதையை வல்லவன் ஒருவன் என்ற பெயரில் படமாக்கினார். இதில் ஜெய்சங்கர்-எல்.விஜயலட்சுமி ஜோடியாக நடித்தனர். இதுவும் வெற்றிப் படமாக அமைந்தது. இப்படத்தின் மூலம் தமிழக ஜேம்ஸ்பாண்ட் என்று ஜெய்சங்கர் புகழ் பெற்றார்.

**புதுமுகங்கள்**

புதுமுகங்களுக்கு அந்த சமயத்தில் நல்ல வரவேற்பு இருந்தது. எனவே திறமையான புதுமுகங்களை அறிமுகம் செய்ய ராமசுந்தரம் திட்டமிட்டார்.

நடிகர்- நடிகைகளை ஒரே பார்வையில் எடைபோட்டு திறமைசாலிகளை தேர்வு செய்வதில் டி.ஆர்.சுந்தரம் நிபுணர். ஆனால் ராமசுந்தரம் படத்தொழிலுக்கு புதியவர் என்பதால் புதுமுகங்களைத் தேர்வு செய்வதை உதவியாளர்களிடம் விட்டிருந்தார். புதுமுகங்களை தேர்வு செய்வதற்காக அவர் ஒரு முறை சென்னையில் முகாமிட்டிருந்தார். அவருடைய உதவியாளர்கள்தான் புதுமுகங்களிடம் நேர்காணல் நடத்தினர்.

கான்வென்டில் படித்த அழகிய இளம் பெண் ஒருவர் சான்ஸ் கேட்டு அங்கு வந்தார். ராமச்சுந்தரத்தின் உதவியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பொறுமையாகப் பதில் சொன்னார்.

# இலங்கையில் முகப்புத்தகத்தில் (Facebook Comment) கருத்து தெரிவித்ததிற்கு ஒருவரை கைது செய்யலாமா?

இந்தியாவில் information technology act என்ற சட்டம் 2000 ஆம் ஆண்டு நிறை வேற்றப்பட்டு 2009 ஆம் ஆண்டு அதற்கு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அத்திருத்தத்தின் பிரகாரம் பொலிஸாரிற்கு பரந்தளவான அதிகாரம் வழங்கப்பட்டதுடன் பொய்யான அல்லது grossly offensive ஆன பதிவுகளை பதிவிடும் நபர்களை கைது செய்யவும் குற்றம் நிரூபிக்கப்பட்டால் 3 வருட சிறையும் தண்டப் பணமும் அறவிட ஏற்பாடு செய்தது. இது "electronic spam" போன்ற தேவையற்ற இணைய தாக்குதல்களை கட்டுப்படுத்தீ அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டம் என்ன நோக்கத்திற்கு அறிமுகப் படுத்தப்பட்டதோ அதனை மறந்துவிட்டு அரசியல்வாதிகள் தமக்கு எதிரான கருத்துக்களை சமூக வலைத் தளங்களில் பதிவிடுபவர்களை "பொலிஸை தூண்டி " கைதுசெய்து " வேட்டையாட " தொடங்கியது. இதனால் சுமார் 20 இற்கும் மேற்பட்ட அதி உயர் பதவி வகித்தோர் இச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்கள்.

அதிலும் "மும்பையில் இறந்துபோன ஒரு சமுகத் தலைவரிற்காக ஒருநாள் கடைகளைப் பூட்டியிருக்க கூடாது " என்று Facebook இல் பதிவிட்ட ஒரு இளம் பெண்ணை சில அரசியல்வாதிகளின் தூண்டுதலின் பேரில் பொலிஸார் கைது செய்தது மட்டுமன்றி அந்த post ஐ வெறுமனே "like" செய்த இன்னொரு இளம் பெண் ணையும் கைது செய்து துன்புறுத்தினர்.

இதனால் பாதிக்கப்பட்ட தரப்பு இந்திய உச்ச நீதிமன்றில் மேன்முறையீடு செய்தது. இவ்வழக்கை நன்கு ஆய்ந்தறிந்த நீதியரசர்கள் குறித்த திருத்தச்சட்ட ஏற்பாடு இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு முரணானது எனவும் கருத்துச் சுதந்திரத்தில் "உறைய வைக்கும் விளைவுகளையும் கொண்டுவரும்" என கூறி குறித்த ஏற்பாடு சட்ட முரண் என தீர்ப்புகூறி இணைய கைதுகளிற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

இலங்கையில் ஏதாவது ஒரு சட்டவிடயம் தொடர்பில் வெறுமை காணப்படும் போது இந்திய உயர் நீதிமன்ற தீர்ப்புக்களில் கவனத்தை செலுத்தி அவை எமது நீதிமன்ற தீர்ப்புக்களில் தாக்கத்தை செலுத்துவது ஒன்றும் புதிய விடயம் அல்ல.

இலங்கையில் யாரேனும் ஒருவர் "வேண்டுமென்று தீய நோக்கத்துடன் அவதூறான கோபமேற்படுத்தக்கூடிய பதிவு" ஒன்றை சமுக வலைத்தளம் ஒன்றில் பதிவிட்டாலும்கூட அவரிற்கு எதிராக குற்றவியல் வழக்கு ஒன்றை நான் அறிந்தவரை தாக்கல் செய்ய முடியாது. அவ்வாறான சட்டங்கள் எவையும் இலங்கையில் இல்லை. விரும்பினால் சிவில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்யலாம். ஆனால் அதிலும் வெல்வது கடினம்.

இலங்கையில் அறிமுகப் படுத்தப்பட்ட "computer crimes act. No 24 of 2007 இன் பிரிவு 2 அதன் பிர யோகம் பற்றி இவ்வாறு கூறுகிறது.

The provisions of this Act shall apply where—

(a) a person commits an offence under this Act whilebeing present in Sri Lanka or outside Sri Lanka ;

(b) the computer, computer system or information affected or which was to be affected, by the act which constitutes an offence under this Act,was at the material time in Sri Lanka or outside Sri Lanka ;

(c) the facility or service, including any computer storage, or data or information processing service, used in the commission of an offence under this Act was at the material time situated in Sri Lanka or outside Sri Lanka ; or

(d) the loss or damage is caused within or outside Sri Lanka by the commission of an offence under this Act, to the State or to a person resident in Sri Lanka or outside Sri Lanka.

(2) For the purposes of paragraph (d) of subsection (1) "person" includes a body of persons corporate or unincor porate. Short title.

இது "software, hardware " போன்ற குற்றங்களை தடுக்க அறிமுகப்படுத்தப்பட்டதே தவிர "comment" எழுது பவர்களை கைது செய்ய கொண்டு வரப் பட்டது அல்ல.


யாரேனும் ஒருநபர் சமுக வலைத்தளத்தில் பதிவிட்ட ஏதேனும் ஒரு "comment " ற்காக கைது செய்ய முயற்சிப்பதே சட்ட விரோதமான ,சட்ட முரணான ,கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான, இலங்கை அரசியலமைப்பிற்கு மாறான செயலேயன்றி வேறில்லை.

இவ்வாறான "comment கைதுகளை " ஊக்கு வித்தால் அது கருத்துச் சுதந்திரத்திற்கு அடிக்கும் சாவு மணியாகவே அமையும்.

Criminal defamation குற்றவியல் அவதூறு என்ற தண்டனைப்பிரிவுகள் 480, 481 என்பன Act no.12 of 2002 மூலம் இந்தக் காரணத்திற்காகத்தான் இரத்துச் செய்யப்பட்டது.

உண்மையில் இவ்வாறான "comment arrest" விமர்சனக் கைதை சட்டம் அனுமதித்திருந்தால் அதன் விளைவு என்னவாக இருக்கும் என்றால், அரசியல்வாதி ஒருவரை கேலி செய்து பதிவிடும் நபர் அவர் யாராக இருந்தாலும் ஒரு சிறிய முறைப்பாட்டின் மீது கைது செய்யப்படுவார். மகிந்த ராஜபக்ஷவை கடந்த தேர்தல்களில் சமுக வலைத்தளங்களில் என பல விமர்சனாங்களுக்குள்ளாக்கிய அத்தனை பேரும் "கம்பி எண்ண" வேண்டி வந்திருக்கும்.

இதனால்தான் கருத்துச் சுதந்திரம் "அடிப்படை உரிமையாக" எமது அரசியலமைப்புச் சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது.



ஸ்ரனிஸ்லாஸ். செலஸ்ரின்
சட்டத்தரணி

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது ஒன்றேயும் இல்லை.

– அபிராமி அந்தாதி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தேவலோகத்து தூதுக்குழு நயினாதீவுக்கு திடீர் விஜயம்

நயினாதீவில் கடல் எல்லைப் பகுதியில் 67 அடி உயரமான புத்தர் சிலை அமைப்பது குறித்த விவகாரம் வடபுலத்தில் நடந்து கொண்டிருக்கும் வேளையில்,

நிலைமை குறித்து ஆராயும் பொருட்டு தேவலோகத்து தூதுக்குழு ஒன்று நயினாதீவுக்கு விஜயம் செய்ததாக ஒரு கற்பனை.

தேவலோகத் தூதுக்குழுவானது இந்திரன் தலைமையில் யமதர்மராஜன், சித்திரகுப்தன், நந்திதேவர், வைரவர் உள்ளிட்டவர்களைக் கொண்டதாகும். குறித்த தூதுக்குழுவானது புஷ்பக விமானத்தில் நயினாதீவுக்கு வருகிறது.

**யமன் :** சித்திரகுப்தா! என்ன? நயினாதீவில் இரண்டு இறங்கு துறைமுகங்கள் தெரிகின்றன.

**சித்திரகுப்தன் :** சுவாமி! முன்பு நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய முன்றலில்தான் இறங்கு துறை இருந்தது. ஆனால் இப்போது கௌதம புத்த பிரானின் நாகவிகாரைக்கு முன்பாகவும் இறங்கு துறை அமைக்கப்பட்டுள்ளது.

**யமன் :** அட அப்படியா சங்கதி? அப்படியானால் குறிகாட்டுவான் துறையிலிருந்து புறப்படும் பயணிகள் படகுகள் முதலில் எந்தத் துறைக்குச் செல்லும்?

**சித்திரகுப்தன் :** சுவாமி! நாகவிகாரையில் இருக்கின்ற சாது மிகவும் செல்வாக்கானவராம் அதனால் முதலில் பயணிகள் படகு அங்கு சென்ற பின்புதான் பழைய துறைக்குச் செல்லும்.

**யமன் :** சித்திரகுப்தா! இதுபற்றி ஏன் எனக்கு முறையிடவில்லை?

**சித்திரகுப்தன் :** சுவாமி அரசியல் செல்வாக்குச் சம்பந்தமான விவகாரம். இதில் தலையிட்டால் தேவையில்லாத சோலி வரும் என்பதால் தான் இது பற்றி நான் பேசாமல் விட்டு விட்டேன்.

**யமன் :** அன்று நீ பேசாமல் விட்டதால் தான் இன்று அந்த இறங்கு துறைமுகத்தில் அறுபத்தேழு அடி உயரமான புத்தர் சிலையை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

எதையும் ஆரம்பத்திலேயே கிள்ளிவிட வேண்டும். இல்லையென்றால் எல்லாம் வில்லங்கமாகத்தான் முடியும்.

**இந்திரன் :** யம தர்மராசா! சற்று அமைதியாக இருங்கள். நாங்கள் இப்போது நயினாதீவுக்குத் தானே போகிறோம். அங்கு என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம்.

**நந்தி :** இந்திரா! நயினாதீவுக்குப் போக முதல் வடக்கின் ஆளுநரை சந்தித்தால் நல்லதாக இருக்கும் அல்லவா?

**இந்திரன் :** இல்லை நந்திதேவா முதலில் நயினாதீவுக்குச் சென்று அறுபத்தேழு அடி உயரமான புத்தர் சிலை வைப்பது பற்றிய விபரங்களை அறிவோம். பூலோகத்து மானிடர்கள் அறியாத வகையில் நாங்கள் தகவல்களைத் திரட்டவேண்டும்.

**நந்தி :** நல்லது இந்திரா அப்படியே ஆகட்டும்.

(தூதுக்குழுவினர் தமக்குள் உரையாடிக் கொண்டிருக்கும் போதே புஷ்பக விமானம் நயினாதீவுக்கடல் வெளியைத் தாண்டிச் செல்கிறது.

**வைரவர் :** அதோ நயினாதீவு அம்மனின் ராஜ கோபுரம்.

**இந்திரன் :** நல்லது நல்லது அன்னையின் ராஜ கோபுரத்தை தரிசிக்கும் பாக்கியம் பெற்றோம். அது சரி நந்திதேவரே! இந்த ராஜகோபுரத்தின் ஸ்தபதி யாரோ?

**நந்தி :** தமிழ் நாட்டின் புருஷோத்தமன் தான் சுவாமி.

**இந்திரன் :** அடேங்கப்பா! ஈழத்திரு நாட்டில் அமைக்கப்படும் கோபுரங்கள், ஆலய நிர்மாணங்களில் புருஷோத்தமனுக்கு நல்ல உழைப்பு. ஈழத்து கலைஞர்கள் பாவங்கள். அவர்களுக்கும் சந்தர்ப்பங்கள் கொடுக்கலாமே! *(நாளை தொடரும்)*

## தொழில் நுட்பத்தின் அடிமைகளாக மாறாது ஆக்கத்திறன் உள்ளவர்களாக மாறுங்கள்

## இளைஞர்களுக்கு ஜனாதிபதி அறிவுரை

(யாழ்ப்பாணம்)

தேசத்தின் எதிர்காலத்திற்காக பிள்ளைகளுக்கு புதிய உலகத்தைத் திறந்து கொடுப்பது ஒரு அரசாங்கத்தின் பொறுப்பு என்ற போதிலும் இளைஞர்கள் தொழிநுட்பத்தின் அடிமைகளாக அல்லாது உருவாக்கத்திறன் கொண்டவர்களாக இருப்பதன்மூலமே தங்களது கனவுகளை வெற்றிகொள்ள முடியும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சிகிரிய விமானப்படை முகாமில் நடைபெற்ற யொவுன் புரய 2016 நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் இளைஞர், யுவதிகளின் தலைமைத்துவ ஆற்றலையும் அறிவையும் விருத்தி செய்யும் நோக்குடன் நடைபெற்ற இந்நிகழ்ச்சித் திட்டத்தில் எல்லா மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 5000 இளைஞர், யுவதிகள் பங்குபற்றியதோடு, நூற்றுக்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளும்கலந்து கொண்டனர்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி நல்லாட்சி மற்றும் நல்லிணக்கம் என்ற விடயத்தை உண்மையாகவே நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்த நாட்டின் எதிர்காலத்தை மிகவும் சிறந்ததாக ஆக்க முடியும் என்றும் அதற்காக முன்னணியில்இருக்கவேண்டியது எமது நாட்டின் இளைஞர் தலைமுறையின் ஒரு மிகப்பெரும் பொறுப்பாகும் என்றும் தெரிவித்தார்.

இந்த நாட்டின் எல்லா பிள்ளைகளுக்கும் சமமான உரிமைகளும் சலுகைகளும அனுபவிப்பதற்கு வாய்ப்பளிக்கவேண்டும்என்ற வகையில் பிரதமரின் எண்ணக்கருவில் உருவான யொவுன் புரய நிகழ்ச்சித்திட்டம் இளைஞர்களுக்குக் கிடைத்துள்ள ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இளைஞர்களது அறிவு தேசத்தின் சிறந்த எதிர்காலத்திற்கு முக்கியமானதாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, புதிய உலகை வெற்றிகொள்வதற்கு இளைஞர்களுக்குத் தேவையான வளங்களையும் சூழலையும் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பை அரசாங்கம் முழுமையாக நிறைவேற்றும் என்றும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இளைஞர்கள் முன்வர வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

அங்கு மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தி அமைக்கப்பட்டிருந்த இளைஞர் முகாம்களைப் பார்வையிட்ட ஜனாதிபதி, அவர்களுக்கான பரிசில்களையும் வழங்கிவைத்தார். 28 வருடங்களுக்குப் பின்னர் நடைபெறும் இந்த யொவுன் புரய நிகழ்ச்சித் திட்டத்தை முன்னிட்டு ஒரு விசேட முத்திரையும் வெளியிட்டு வைக்கப்பட்டதோடு, அதனை தபால்சேவைகள், முஸ்லிம் சமய விவகார அமைச்சர் அப்துல் ஹலீம் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இளைஞர், யுவதிகளுக்கான கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகள் தொடர்பான கண்காட்சிக் கூடங்கள், தொழிற் சந்தைகள் ஆகியவும் இங்கு அமைக்கப்பட்டிருந்ததோடு, இளைஞர், யுவதிகளின் கலை மற்றும் விளையாட்டுத் திறன்களை மேம்படுத்துவதற்கான பல்வேறு நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் என்பனவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க.

அமைச்சர்களான அகில விராஜ் காரியவசம், சஜித் பிரேமதாச. ரிசாத் பதியுதீன், சாகல ரத்நாயக்க, சரத் பொன்சேகா, இரா ஜாங்க அமைச்சர் நிரோசன் பெரேரா, பொலிஸ் மா அதிபர், முப்படைகளின் தளபதிகள், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி எரங்க வெளியங்ககே மற்றும் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர். (செ-12)

## ஹெரோயினுடன் கைதானவர்களை தடுப்பில் வைத்து விசாரிக்க அனுமதி

(கொழும்பு)

110 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட 14 வெளிநாட்டவர்களை தடுப்பு காவலில வைத்து விசாரிக்க நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்களை பொலிஸ போதைப் பொருள் தடுப்பு பிரிவினர்நேற்றுமுன்தினம் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப் படுத்தினர்.

பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய சந்தேக நபர்களை 7 நாட்கள் தடுப்பு காவலில் வைத்து விசாரணை நடத்த நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

மேலும் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் குறித்து அவர்களது நாடுகளின் தூதரகங்களுக்கு அறிவிக்க பொலிஸரின் சுற்றுலாப் பிரிவு பணியகம் நடவடிக்கை எடுத்துவருகிறது. (செ-12)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### அறநெறியே இறை வழிபாடு



நமக்கு அப்பால் ஒரு சக்தி இருக்கிறது. அது தான் இயற்கை என்று அனைவரும் ஒத்துக் கொள்வார்கள். அதற்கு மதவாதிகள் கடவுள் என்று பெயர் வைத்துள்ளார்கள். அதேபோல் இந்தப் பிரபஞ்சத்தை எடுத்துக் கொண்டால், இந்த உலகம் ஒரு நாளைக்கு 25 ஆயிரம் மைல் தன்னைத் தானே ஒரு சுற்றுச் சுற்றி வருகிறது. சூரியனைச் சுற்றி வரும் பாதையிலே ஒரு நாளைக்குப் பதினைந்து இலட்சத்து ஐம்பது ஆயிரம் மைல் ஓடுகிறது.

இதில் ஏதாவது தாமதம் இருக்குமா? இல்லை தடம் மாறுகிறதா? அவ்வளவு நேர் நிர்வாகமாகச் சிறிதும் பிறழாமல் எந்தப் பெரிய ஆற்றல் (Consciousness) நிர்வாகம் நடத்துகிறது என்று பார்த்தால், அத்தகைய பெரிய நிர்வாக ஆற்றல் பிரபஞ்சத்தில் எல்லாம் வல்ல இறைவெளியின் அழுத்தம் என்ற உந்து ஆற்றலால் தான் நடக்கிறது. அதே போல் என் உள்ளத்திலே, உடலிலே நடக்கிறதும் அதே தான். உடலிலும் சரி, பிரபஞ்சத்திலும் சரி, அணுவிலும் சரி, அணுவைச் சுற்றிலும் சரி எங்கும் நிறைந்த ஆற்றலாக இருப்பது அந்த எல்லாம் வல்ல இறைவெளி ஒன்றுதான்.

எனவே, அந்த அழுத்தமும், அதன் அறிவும் ஒன்றிணைந்த ஆற்றல் தான் நாம் எந்தச் செயலைச் செய்தாலும் அந்தச் செயலுக்குத் தக்க விளைவுகளைத் தந்து கொண்டே இருக்கிறது. கையைத் தட்டினால் ஒலி வருகிறது. அதே போன்று அதிகமாகச் சாப்பிட்டால் உடனே அசீரணம். அவ்வாறு எந்தச் செயல் செய்தாலும் தவறாகச் செய்தால் அது தவறு என்று உணர்ந்த உடனே துன்பம் உண்டாகிறது. சரியாகச் செய்தால் நாம் வாழ்க்கையைச் சீராக வாழ்ந்து கொண்டு வருகிறோம் என்று பொருள். தவறு செய்யாது இருக்க வேண்டும். தவறு செய்தால் உடனே தண்டனை இருக்கிறது என்பதுதான் இறை ஆற்றல் உணர்த்தும் நீதி. அது கூர்தலறம் (Cause and effect system) இதைத் தெரிந்து கொள்ள இறையுணர்வு வேண்டும். தெரிந்து கொண்ட பிறகு மக்களோடு ஒற்றுமையாக வாழ்வதற்கு அறநெறி வேண்டும். அறநெறிதான் உண்மையில் இறை வழிபாடு.

### திவ்ய பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

கொக்குவில் மேற்கு–வாராஹிபுரம் திருவருள் தேவஸ்தான திவ்விய பிரம்மோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் பகல், இரவு உற்சவம் நடைபெற்று பதினொராம் நாள் (15.04. 2016) வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவத்துடன்நிறைவுபெறும். (இ-5)

### விளையாட்டுப்போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும்

அரியாலை காந்தி சனசமூக நிலையத்தின் 67 ஆவது ஆண்டுநிறைவு விழாவினை முன்னிட்டு எதிர்வரும் 14, 15, 16,17ஆம் திகதிகளில் விளையாட்டுப்போட்டிகள்மற்றும்கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக காந்தி சனசமூக நிலையத்தின் தலைவர்எஸ்.பி. கயூரன் அறிவித்துள்ளார். (இ-9)

### மஹோற்சவம்

கிளிநொச்சி மாணிக்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

புதுவருட தினமாகிய 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (2-254)

### கல்வியியலாளன் ஆய்விதழ் நூல் வெளியீட்டு விழா

கல்வியியலாளன் ஆய்விதழ் எனும நூல் வெளியீட்டு விழா கோப்பாய் யாழ்ப்பாணம் தேசிய கல்வி நிலையத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் யாழ்ப்பாணம் தேசிய கல்வி நிலையத்தின் தலைவர் எஸ். அமர்தலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (இ)

### மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின்விநியோக மார்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில உரும்பிராய் பிரதேசம் முழுவதிலும வவுனியா பிரதேசததில குகன்நகர் கிராமம், உமாமகேஸ்வரன் கிராமம், தெற்கிலுப்பைக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில முருங்கனிலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம, ஆவேமரியா ஐஸ்தொழிற சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப் படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப் பிட்டிபம்கவுஸ், மீன்பிடிசமாசம், அந்தோனப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற சாலை. தலைமன்னார் கடற்படைமுகாம், சீனத்துறை முகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)



பருத்தித்துறை பிரதேச சபையின் கழகங்களுக்கிடையிலான இறுதிநாள் விளையாட்டுப்போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் வல்வெட்டித்துறை நெடியகாடு மைதானத்தில் இடம்பெற்ற போது...

# உடுவில் பி.செயலக உதைபந்து ஞானமுருகன் அணி சம்பியன்

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்





உடுவில் பிரதேச செயலக மட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி யின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஞான முருகன் அணி சம்பியன் ஆகியது. குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணி யுடன் நடந்த போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்ற பெற்றது.

ஞானமுருகன் அணி சார்பாக முகுந்தன், வகி தலா ஒரு கோலி னைப் போட்டனர். (க)

# இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் விளை யாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதி யில் நடத்தும் உதைபந்தாட்டப் போட் டியில் இன்று திங்கட்கிழமை மாலை 4.30மணிக்கு நடைபெறும் போட் டியில் அண்ணா ஸ்ரார் விளையாட் டுக்கழகத்தை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக்கழகம் மோதவுள் ளது.

▲▲▲▲▲▲

97ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி (Set up Game) நடைபெற்று வருகின் றது.

இன்று திங்கட்கிழமை இரவு 8.30 மணிக்கு மின்னொளியில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதா னத்தில் நடைபெறும் போட்டியில் சண்டிலிப்பாய் வசந்தசிறி விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து அச்சு வேலி யுத் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

▲▲▲▲▲▲

வடமாகாண வல்லவனை தெரிவு செய்வதற்கு நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் உடுப்பிட்டி யூத் விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக்கழகமும் தீவகம் மெலிஞ்சிமுனை விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து சிவான ந்தா விளையாட்டுக்கழகம் மோத வுள்ளது. (க)

## சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு

# யாழ்.மாவட்ட தாச்சி சங்கம் நடத்தும் தாச்சித் தொடரின் முடிபுகள்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணை யுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங் கம் சித்திரைப் புத்தாண்டை முன் னிட்டு நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரின் காலிறுதி ஆட்டங்களின் முடிவுகள்,

முதலில் இடம்பெற்ற காலி றுதியாட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து "ஏ"அணியை எதிர்த்து வசந்தசிறி அணி மோதிக் கொண் டது. இதில் உடுவில் ஆலடி சிந்து "ஏ"அணி 9:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண் டாவது காலிறுதியாட்டத்தில் புது மடம் வைகறை அணியை எதிர் த்து பண்டத்தரிப்பு அறிவொளி அணி மோதிக்கொண்டது. இதில் புதுமடம் வைகறை அணி 8:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாவது காலிறுதியாட்டத் தில் உடுவில் ஆலடிசிந்து "பி" அணியை எதிர்த்து கோண்டாவில் மறுமலர்ச்சி அணி மோதிக் கொண் டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 4 புள்ளி களைப் பெற்றதனால் வெற்றியைத் தீர்மானிக்க மேலதிகமாக 5 நிமிட ங்கள் வழங்கப்பட்டன. இதில் உடுவில் ஆலடிசிந்து "பி" அணி 4:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத் துக்கு முன்னேறியது. (க)

# நாமகள் வி.கழக காற்பந்தாட்ட தொடர்



நாமகள் வி.கழகம் நடத்தி வரும் காற்பந்தாட்டத் தொடரில் இடம்பெற்ற ஆட்டங்களில் மகாத்மா, ஐயனார் அணிகள் வெற்றிபெற்றன.

தொடர் நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத் தில் புத்தூர் விக்கினேஸ்வரா அணியை எதிர்த்து சாவற்கட்டு மகா த்மா அணி மோதிக் கொண்டது.

இதில் சாவற்கட்டு மகாத்மா அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்ட த்தில் ஆனைக்கோட்டை கலை யொளி அணியை எதிர்த்து துறை யூர் ஐயனார் அணி மோதிக் கொண் டது. இதில் துறையூர் ஐயனார் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

# பருத்தித்துறை பிரதேச செயலக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி




பருத்தித்துறை பிரதேச செயலகத் தால் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்று முன்தி னம் இடம்பெற்ற இறுதிப் போட்டி யில் ஆதிசக்தி விளையாட்டுக்கழ த்தை எதிர்த்து சென்சேவியர் விளை யாட்டுக்கழகம் மோதியது.

இரு அணிகளும் சமபலத்துடன் மோதியதால் இறுதிவரை எதுவித கோல்களும் பதியப்படாததால் தண்ட உதை வழங்கப்பட்டு அதில் 5:4 என்ற கோல் கணக்கில் ஆதி சக்தி வெற்றி பெற்று சம்பியனை கைப்பற்றியது. (க)

# கரப்பந்தாட்ட போட்டி அமரகவி வெற்றி



அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்ப ட்டு வரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய கரப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றது.

தொடரில் கடந்த வியாழக்கி ழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இணுவில் அமரகவி அணியை எதிர் த்து மட்டுவில் ஞானதீபம் அணி மோதிக் கொண்டது. இதில் இணுவில் அமரகவி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

# யங்கம்பன்ஸ் வெற்றி

கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 5 ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை 1:0 என்ற அடிப்படையில் வீழ்த் தியது கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம்.

தெலலிப்பழை நாமகள் வி. கழக மைதானத்தில் இடம் பெற்ற உதைப் பந்தாட்டத் தொடரில் இரண்டாவது போட்டியிலும் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் தகுதி பெற்றது கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளை யாட்டுக்கழகம். அணி சார்பாக ரதன் ஒரு கோலைப் போட்டார். (க)



## வயல் நிலங்களில் தீ பாதிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ் அல்லைப்பிட்டி 1ஆம் வட்டாரம் பகுதியில் உள்ள வயல் நிலங்களுக்கு விசமிகளால் வைக்கப்பட்ட தீ காரணமாக பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்று பகல் 11.மணியளவில் இடம்பெற்ற இத் தீ அனர்த்தத்தினால் வயல் நிலங்களில் அறுவடை முடிந்து வைக்கப்பட்டிருந்த வைக்கோல்கள் மற்றும் வளர்ந்திருந்த பனை மரங்கள் என்பன எரிவடைந்துள்ளன.

தொடர்ந்த தீ பரவல் குடிமனைகளை பாதிக்காதவாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட போதும் 50 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் தீயினால் எரியுண்ட நிலையில் காணப்படுகிறது. (செ)

## நானுஓயா வனப்பகுதியில் தீ பரவல்; 3 ஏக்கர் நாசம்



நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா எடின்பரோ தோட்டப்பகுதியில் உள்ள மானாபுல் வனப்பகுதியில் ஏற்பட்ட தீப்பரவலால் பல ஏக்கர் நாசமாகியுள்ளன.

நேற்று ஏற்பட்ட தீப்பரம்பலால், ஆறு ஏக்கரைக் கொண்ட இந்த "மானாபுல்" வனப் பகுதியின் 3 ஏக்கர் வரை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நானுஓயா பொலிஸாரும் பொதுமக்களும் பெரும் சிரமத்திற்கு மத்தியில் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்தனர்.

இந்த பகுதியில் சிறுவர்கள் விளையாட்டுதனமாக தீ வைத்ததன் காரணமாக இந்த தீச் சம்பவம் இடம்பெற்றதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த தீ விபத்து சம்மந்தமான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

## அதியுச்ச...

சேன விஜயம் செய்துள்ளார்.

வடக்கில் தேசிய பாதுகாப்பு பற்றிய பல்வேறு விமர்சனங்கள் கடந்த சில நாட்களாகபல தரப்பினராலும் முன் வைக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்.நகரில் அமைந்துள்ள **Jetwing Jaffna** நட்சத்திர விடுதி ஒன்றை திறந்து வைப்பதற்காக நேற்றையதினம் யாழிற்கு வருகை தந்துள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் சாவகச்சேரி மறவன்புலவு பகுதியில் தற்கொலை அங்கி உள்ளிட்ட பல வெடிபொருட்கள் மீட்கப்பட்டிருந்தன. மீட்கப்பட்ட வெடிபொருட்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இலக்கு வைத்திருக்கலாம் என்ற கோணத்திலும் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

தென்பகுதி ஊடகங்கள் பலவும் தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் விளைந்துள்ளதாகவும் மறுபடியும் வடக்கில் பயங்கரவாதம் தலை தூக்கியுள்ளதாகவும் தமது விமர்சனங்களை முன்வைத்த வண்ணம் உள்ளன.

இந்த விமர்சனங்களுக்கு மத்தியில் முன்னொருபோதும் இல்லாதவாறு பொலிஸார், விசேட அதிரடிப்படையின் மற்றும் கவசவாகன ங்களின் அதிவிசேட பாதுகாப்புடன் ஜனாதிபதி நேற்றையதினம் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்.

அதேநேரம் வவுனியாவில் நல்லிணக்க கிராமம் எனும் பெயரில் இராணுவக் குடியேற்றத்தில் அமைக்கப்பட்ட வீடுகளை, இராணுவத்தில் இணைந்த தமிழ் யுவதிகளுக்கும், இராணுவத்தினரை திருமணம் செய்தவர்களுக்கும், இராணுவ குடும்பங்களுக்கும் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி கலந்து கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நேற்றையதினம் அந்தநிகழ்வில் ஜனாதிபதி கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-9)

## உல்லாச பயணிகளை கவரும் கண்காட்சி

சுற்றுலாத்துறைக்காக வருகை தரும் உல்லாசப் பயணிகளை கவரும் வகையில் இராணுவ கண்காட்சி ஒன்று காலியில் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் இந்த கண்காட்சி நடத்தப்படவுள்ளது. சிகிரியவில் இடம்பெற்ற இளைஞர் நிகழ்வு ஒன்றின் போது பிரதமர் இதனைக் கூறினார்.

இதேவேளை இந்தநிகழ்வில் பங்கேற்ற அம்பாந்தோட்டை இளைஞர்கள், மத்தளை விமான நிலையம் வணிக ரீதியாக சாத்திய மான விமான நிலையமாக மாற்றப்பட வேண்டும் என்று பிரதமரிடம் கேட்டுக் கொண்டனர். (செ-12)

## முல்லை மீனவர்களுக்கு உதவி

### ராமதாஸ் கண்டனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு இந்திய அரசாங்கம் மீன்பிடி படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை வழங்கியமைக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் எஸ்.ராம்தாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

விசேட ஒப்பந்தம் ஒன்றின் மூலம் 4.5 கோடி ரூபாய் பெறுமதியான படகுகளும், உபகரணங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தின் மீனவர்களுக்கு இந்திய அரசாங்கம் வழங்கியது.

இது தமிழக மீனவர்களை காட்டிக் கொடுக்கும் செயல். தமிழக மீனவர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளது.

இந்த நிலையில், இந்திய அரசாங்கம் இந்த உதவிகளை வழங்கி இருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர் கூறியுள்ளார். (செ-12)

## அமை.சம்பிக்க...

சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ளாமல் தவிர்த்து வருவதாக கூட்டு எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பொறுப்பு அமைச்சர் என்ற வகையிலும் அரசியலமைப்பு பேரவையில் அங்கம் வகிப்பவர் என்ற வகையில், அமைச்சரின் இந்த செயல் பொருத்தமற்றது எனவும் கூட்டு எதிர்க் கட்சியினர் குறிப்பிட்டுள்ளனர். (செ-12)

## வீடு குறித்து...

தேச செயலகங்களிலும் வைக்கப்பட்டுளளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கமைய மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக இக்கருத்துப் பெட்டி வைக்கப்பட்டுள்ளதாகவும் புனர் வாழ்வு மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் இவ்வீட்டுத் திட்டம் தொடர்பில் பல தரப்புகளிலும் பல்வேறு விமர்சனங்கள் எழுந்தமையை தொடர்ந்தே ஜனாதிபதி இவ் வாலோசனையை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்தை தமிழ் மக்கள் விரும்பவில்லை!

## வெடிபொருள் மீட்பு குறித்து சுமந்திரன் பதில்

மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்தை தமிழ் மக்கள் விரும்பவில்லை. ஜனநாயக வழி யில் தொடர்ந்து போராடி உரிமைகளைப் பெறவே எமது மக்கள் விரும்புகின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி மறவன்புலோ பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து தற்கொலைத் தாக்குதலுக்கான அங்கி மற்றும் கிளைமோர்கள் உள்ளிட்ட வெடிபொருட்கள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மீட்கப்பட்டன. சாவகச்சேரியில் மீட்கப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலுக்கு ஏதுவான வெடிபொருட்கள் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான சமிக்ஞையாகும் என்றும், வெடிபொருட்கள் இரகசியமாக கொழும்புக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன என்றும், தமிழரின் ஆயுதப் போராட்டம் வடக்கில் மீண்டும் தலைதூக்கப் போகின்றது என்றும் மகிந்த அணியின் உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இந்தக் கருத்துக்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கில் 25 வருடங்களுக்கு மேலாக ஆயுதப் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டம் இடம்பெற்ற பகுதிகளில் வெடிபொருட்கள் மீட்கப்படுவது சர்வசாதாரண விடயமாகும். இன்னும் 10 வருடங்கள கடந்தாலும் குறித்த பகுதிகளில் பழைய வெடிபொருட்கள் மீட்கப்படும். இதனை பெரிய விடயமாக எடுக்கவேண்டிய அவசியம் இல்லை. இந்நிலையில், சாவகச்சேரியில் வெடிபொருட்கள் மீட்கப்பட்ட சம்பவம் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று தெற்கில் உள்ள சிலர் ஊளையிடுகின்றனர். அத்துடன் தமிழரின் ஆயுதப் போராட்டம் மீண்டும் தலைதூக்கப் போகின்றது என்றும் அவர்கள் கத்துகின்றனர். இது வேடிக்கையானது.

தெற்கில் உள்ள மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி மீண்டும் வன்முறையை ஏற்படுத்தும் வகையில்தான் இவர்கள் இவ்வாறு கூக்குரல் இடுகின்றனர். இவர்களின் நோக்கங்கள் இனிமேல் நிறைவேறாது. மீண்டும் ஆயுதப் போராட்டத்தை வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் விரும்பவில்லை. ஜனநாயக வழியில் தொடர்ந்து போராடி உரிமைகளைப் பெறவே எம்மக்கள் விரும்புகின்றனர். இதனை அவர்கள் தேர்தலில் வாக்குமூலம் நிரூபித்துக் காட்டியுள்ளனர். சாவகச்சேரியில் வெடிபொருட்கள் மீட்கப்பட்ட சம்பவத்தின் உண்மை நிலை விசாரணையின் பின் வெளிவரும். அதுவரைக்கும் நாம் மேலதிகமாக கருத்துக்கள் எதனையும் சொல்ல விரும்பவில்லை என்றார். (செ-12)

## புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் இங்கு முதலீடு செய்ய வேண்டும்

### வட மாகாண ஆளுநர் கருத்து

யாழ்ப்பாணத்தில் இருந்து புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் தமது தாய்நாட்டில் முதலீடுகளை செய்ய முன்வரவேண்டும் என வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார். யாழ்.நகரில் அமைந்துள்ள நட்சத்திர விடுதி திறப்பு விழா நேற்றைய தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

யாழ்ப்பாண சமூகமானது கல்வியறிவில் சிறந்து விளங்கும் சமூகமாகும். அறிவாளிகளை கொண்ட இந்த சமூகத்தில் இருந்து பலர் இந்த நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாடுகளில் வசித்து வருகிறார்கள். அவர்கள் தமதுதாய் நாட்டில் முதலீடுகளை செய்ய முன்வரவேண்டும்.

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன இந்த நிகழ்வில் கலந்து கொண்டதும் வடக்கில் முதலீடு செய்பவர்களை ஊக்குவிப்பதற்கான நோக்கமாக அமைந்துள்ளது. எனவே இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திபுலம்பெயர் தமிழர்கள் இங்கு வந்துதமது முதலீடுகளை செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## வெடிபொருட்கள்...

ஆகிய பிரதேசங்களில் பெருமளவான வெடிபொருட்கள் மீட்கப்பட்டு பாரிய சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை கிழக்கிலும் ஒரு தொகுதி வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

திருக்கோவில் தங்கவேலாயுதபுரம் பிரதேச காட்டுப் பகுதியில் நேற்று முற்பகல் 3 மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டு விசேட அதிரடிப்படையினரால் வெடிக்கவைத்து அழிக்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்

அம்பாறை விசேட புலனாய்வு பிரிவிற்கு கிடைத்த தகவலையடுத்து, பொலிஸாருடன் புலனாய்வு பிரிவினர் இணைந்து குறித்த காட்டுப் பகுதியில் நடத்திய தேடுதலில், நிலத்தில் மறைத்துவைக்கப்பட்டிருந்த இந்த மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டன. இவை 81 ரக மோட்டார் குண்டுகள் என தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டு அறுகம்பை விசேட அதிரடிப்படையினரின் துணையுடன் குறித்த மோட்டார் குண்டுகள் அழிக்கப்பட்டுள்ளன. (செ-12)

## இலங்கையிடம்...

இந்த இழப்பீட்டை கோரியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகர நிர்மாணிப்பு பணிகள் பெரு நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் இப் பணிகள் நெருக்கடியைச் சந்தித்துள்ளன.

எவ்வாறாயினும் இந்த விடயம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சீன விஜயத்தின் போது உயர் மட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## கட்சியிலுள்ள...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாட்டாளர்களை தெளிவூட்டும் நிகழ்விலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மைத்திரிபால சிறிசேனவிற்கு மகிந்த ராஜபக்ஷ ஏன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை வழங்கினார்? மைத்திரிபால சிறிசேனவுடன் தற்போது நாம் இருப்பது தவறு என்றால், துரோகம் என்றால், அந்தப் பாடத்தை முதலில் எமக்கு கற்றுத் தந்தது யார்? தலைமைத்துவத்தை வழங்கியவரே முதலில் அந்தப் பாடத்தைக் கற்றுத் தந்தார். எமது கட்சியிலற்ற நிகழ்ச்சி நிரலுக்கு அமைய சிலர் எம்மை செயற்படுத்த முற்படுகின்றனர். யார் என்ன கூறினாலும் பரவாயில்லை. இன்னுமொரு கட்சியை நாம் அமைக்க இடமளிக்கப் போவதில்லை என்றார்.

இந்தச் சந்திப்பின்போது, சுதந்திரக் கட்சியின் செயற்பாட்டாளர்களிடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டதோடு, கலந்துரையாடல் முடியும் வரை அமைதியின்மை காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-12)


**PATRICIAN INSTITUTES**
**பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்**

புதிய பிரிவுகள்
ஆரம்பம்:05.04.2016

I. Computer Course
- A. Information & Communication Technology (ICT) — Duration 4 months
  (O/L மாணவர்களின் நலன் கருதி ஆரம்பிக்கப்படுகின்றன)
- B. Advanced in Computer Programming — Duration 8 months
- C. Diploma in Microsoft Office — Duration 4 months
- D. Diploma in desktop Publishing — Duration 4 months
- E. Diploma in Video Editing — Duration 4 months
- F. Diploma in Type Setting — Duration 6 months
- G. Diploma in Computerized Accounting — Duration 4 months
- H. Diploma in Software Engineering — Duration 4 months
- I. Diploma in Micro media — Duration 6 months
- J. Diploma in Web Multimedia — Duration 4 months
- K. Professional Diploma in Graphic Design — Duration 4 months
- L. Computer Hardware Technology — Duration 4 months
- M. Internet & Email — Duration 3 months
- N. General Information Technology (GIT) — Duration 4 months

( கணனி பயிலும் மாணவர்களின் நன்மை கருதி ஆங்கில தட்டெழுத்து (ENGLISH TYPING ) தமிழ் தட்டெழுத்து ( TAMIL TYPING ) இலவசமாக கற்பிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

II. Short Hand Typing (English)
சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) — Duration 6 months
கணனி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.

III. Short Hand Typing (Tamil)
சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) — Duration 6 months
கணனி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.

IV. Gentral Motor Mechanism
(Petrol & Diseal வாகனங்கள் மோட்டார் வாகனம் திருத்துதல்) — Duration 6 months

V. Gentral Electrician (wiring & Re-winding) Industrial Electrician
ஜெனரல் எலக்ரிஸன் மின்சார இணைப்பு மோட்டார் றிவைண்டிங் — Duration 6 months

VI. Lathe Machine Operation (Milling & Machine, Shaping Machine என்பன கற்றுக் கொடுக்கப்படும்) (கடைச்சல் இயந்திரம் பயிற்சி) (On the Job Training வழங்குதல்) — Duration 6 months

VII. Carpentery (with use of Machinery மரவேலை
(On the Job Training வழங்குதல்) — Duration 6 months

VIII. Refrigeration and Air Conditining — Duration 6 months

IX. Motor Cycle Mechanism — Duration 6 months

குறிப்பு : 1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்.
2. பயிற்சிநெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு:
Registrar, Patrician Institutes
61, (59), St. Patrick's Road, Jaffna.
T.P: 021 222 6148, Fax: 021 222 6148
Email: Patricianjaffna@yahoo.com

(C-4205)


## பிரபாகரனின்...

அமைச்சரும் பீல்ட் மார்ஷலுமான சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இராணுவத் தளபதியாக இருந்து ஓய்வு பெற்றவரும், புதிதாக இராஜதந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளவருமான, லெப்.ஜெனரல் தயாரத்நாயக்க, அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு அளித்திருந்த செவ்வியில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான் ஆகியோரின் உடல்கள் எரிக்கப்பட்டு, சாம்பல் கடலில் கரைக்கப்பட்டதாக கூறியிருந்தார்.

இதுகுறித்து, கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று, போர்க்காலத்தில் இராணுவத் தளபதியாக இருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் கேள்வி எழுப்பியிருந்தது.

அதற்குப் பதிலளித்த சரத் பொன்சேகா, இறுதிக்கட்டப் போரின் முடிவில் நந்திக்கடலில் கண்டுபிடிக்கப்பட்ட பிரபாகரனின் உடல் எரிக்கப்படவில்லை என்றும் புதைக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

போரின் இறுதிக்கட்டத்தில் தயாரத் நாயக்க போர் முனையில் இருந்திருக்கவில்லை. அங்கு என்ன நடந்தது என்று அவருக்குத் தெரியாது என்றும் சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

முன்னதாக, பிரபாகரனின் உடல் எரிக்கப்பட்டு சாம்பல் கடலில் கரைக்கப்பட்டதாகவே இலங்கை இராணுவம் கூறியிருந்தது.

தற்போது தான் முதல் முறையாக, சரத் பொன்சேகா, பிரபாகரனின் உடல் புதைக்கப்பட்டது என்ற தகவலை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

## படையதிகாரிகள்...

மேற்படி தகவலை தென்பகுதி ஊடக மான சத்ஹண்ட என்ற வார இதழ் வெளியிட்டுள்ளது. அத் தகவலில் மேலும் குறிப்பிடுகையில்,

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற்போனமை தொடர்பாக, நடத்தப்பட்ட விசாரணைகளிலேயே படை அதிகாரிகள் படுகொலை விபரங்களும் தெரியவந்திருக்கின்றன.

நீதிமன்ற உத்தரவையடுத்து இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்களிலேயே இதுபற்றிய விபரங்களும் அடங்கியிருந்தன.

அந்தக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகளின் உயர்மட்டங்களுடன் இருந்த தொடர்புகளைப் பயன்படுத்தியே, இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவு இந்தப் படுகொலைகளில் ஈடுபட்டுள்ளது.

1999 டிசெம்பர் 18ஆம் திகதி, ஜாஎலவில் ஐதேகவின் பேரணியில் மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவின் மீதான தற்கொலைத் தாக்குதலை இராணுவப் புலனாய்வுப் பிரிவே திட்டமிட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய, அப்போது குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக இருந்த பிரதி பொலிஸ் மா அதிபர் ஹேமச்சந்திர இதனை உறுதிப்படுத்தும் அறிக்கையை தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் சமர்ப்பித்திருந்தார்.

அந்தச் சம்பவத்துக்கு அப்போது இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த- இப்போது ஓய்வு பெற்றுள்ள மேஜர் ஜெனரல் ஒருவர் மீது அந்த அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

தற்கொலைக் குண்டுதாரிகளைக் கண்காணித்த விடுதலைப் புலிகளின் உயர்மட்டப் பிரமுகர் ஒருவருடன், இந்த மேஜர் ஜெனரல் தொடர்புகளை வைத்திருந்தார்.

அவரைக் கைது செய்வதற்கு பிரதி பொலிஸ் மா அதிபர் ஹேமச்சந்திர, பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைக் கோரியபோது, அது இராணுவத்தினரை நிலைகுலைய வைக்கும் என்று நிராகரிக்கப்பட்டது.

அப்போது சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கம் பதவியில் இருந்தது.

தனிப்பட்ட பகைமை காரணமாகவே, 2006 ஓகஸ்ட் 07ஆம் நாள், கண்டி- திகணவில் வைத்து சிறப்பு அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியான செனிவிரட்ண மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது என்பதையும், குற்றப் புலனாய்வுத் துறையினர் கண்டறிந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேரிடம் தற்போது விசாரணை நடத்தப்படுகிறது.

போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்த அந்தக் காலகட்டத்தில், செனிவிரட்ன அக்கரைப்பற்றில் பணியாற்றியிருந்தார். அவர் கருணா குழுவுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தார்.

இதனால் அந்தப் பகுதியில் இருந்த இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களைப் பயன்படுத்தி அவரைப் படுகொலை செய்தனர் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (செ-12)

## ஆடை அணிந்து...

இவை நகைப்பிற்குரிய விடயங்களாகவே கருதப்பட வேண்டும். ஜெனிவா செல்வதனால் எமக்கு எவ்வித பயமும் கிடையாது.

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினை நிறுவியதன் பின்னரே சர்வதேச சமூகம் எம்முடன் தொடர்பு பேணியது.

நாட்டில் ஜனநாயகம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச சமூகம் நம்பிக்கை கொண்டுள்ளது. மேலும் மோசமான கள்வர்கள் ஜெனிவா அல்லது வேறு எந்தவொரு நாட்டிற்கு சென்று முறைப்பாடு செய்தாலும் அதில் ஒன்றும் ஆகப்போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## சுதந்திரக் கட்சி...

யும் கலந்துரையாடப்பட்டதாகக் கூறப்பட்டாலும் இது குறித்து உத்தியோகபூர்வ தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடன், ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள அதிருப்திக் குழுவினரை இணைத்துக்கொண்டால், புதியதொரு ஆட்சியை உருவாக்கலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதில் பிரதமர் பதவியை மகிந்தவுக்கு வழங்கலாம் என்றும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை.

இந்நிலையில், அடுத்தசுற்று பேச்சுகள் விரைவில் இடம்பெறவுள்ளன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. இதேவேளை, கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் பிரதிநிதிகளும் கடந்தவாரம் மகிந்தவுடன் பேச்சு நடத்தியுள்ளனர். (செ-12)


**ஐடியல் அக்கடமி**
681/B, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்
(கரிகணன் பிறிண்டேர்ஸ் பின்புறம்)
O/L DAY CLASS -2016
ஆரம்பம் : 06.04.2016
புதன் 8.00A.M
தொடர்பு: 0777728571
(4096)

**தேவை**
வடமராட்சி பருத்தித்துறையில் 3 மாடி கொண்ட திருமண மண்டபத்தினை மேற்பார்வை செய்வதற்கான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர்.
தொடர்புகளுக்கு :
0777795904
0772540683
(C-4211)

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**
- வெளிநாடுகளுக்கு பொதிகளை மிக விரைவாக அனுப்பிக்கொள்வதற்கும்
- வெளிநாடுகளில் இருந்து பொதிகளை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கும்
- காய்கறிகள், பழவகைகள், கடல் உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணை வகைகள், பால்மா உட்பட அனைத்துப் பாவனைப் பொருட்களையும் அனுப்பிக் கொள்ளலாம்.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
021 222 3536
10, கஸ்தூரியார், வீதி, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, யாழ்ப்பாணம்.
(சி-4210)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.